
# கல்கி

KALKI 28-11-82 ரூ 1.20



முருகன் மீது ஒரு புதுக் கவிதை!


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரை வளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 6. TH

# அக்னிசாட்சி

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். தீபாவளிப் படங்களை வரிசையாகப் பார்த்துவிட்ட களைப்பைக் கூட மறந்து உற்சாகமாக இந்த விமர்சனத்தை 'கல்கி'க்கு எழுதுகிறேன். நான் பார்த்த படங்களுக்குள்ளேயே என்னை மெய் சிலிர்க்க வைத்த படம் 'அக்னி சாட்சி'தான்! அப்படத்தைத் தயாரித்து இயக்கியுள்ள பாலசந்தரை எத்தனையோ முறை மனதாரப் பாராட்டியிருக்கிறேன். இந்த முறை அப்படியல்ல. அவரைப் புதிய கோணத்தில் பாராட்ட எண்ணி அகராதியைக் கூடப் புரட்டிப் பார்த்தேன்! தமிழில் வார்த்தைகளே கிடைக்கவில்லை.

டைடில் ஓடி முடிந்ததும் ஒரு பாலே நடனத் தயாரிப்பாளராக சிவகுமாரை அவர் அறிமுகப்படுத்துகிறார். அப்புறம் அவர் நடத்துகிற 'இன்னொரு கண்ணகி' நாடகத்தை சரிதா தன்னை மறந்து பார்த்த மாதிரிதான் நானும் இப்படத்தைப் பார்த்தேன். இப்படத்தின் கதாநாயகி சரிதாவே 'இன்னொரு கண்ணகி'தான்!

ஆம். பெண்களுக்கு இழைக்கப்படும் சின்னச்சின்னக் கீறல்களைக் கூடப்பொறுத்துக் கொள்ள முடியாமல் பொங்கி எழும் இன்னொரு கண்ணகியாகத் தோன்றி திரையைக் கிழிகிழியெனக் கிழித்து விடுகிறார்! நடிப்பில் கதிகலங்க அடிக்கிறார்! பாலசந்தர் அவரைப் படத்தில் 'ஹிஸ்டீரியா' நோயாளியாக அறிமுகப்படுத்தி யிருந்தாலும் எனக்கென்னமோ அப்படிப் படவில்லை. அன்று அடிமைப் பெண்களின் விடுதலைக்காக பாரதியார் விட்ட பெருமூச்சின் எதிரொலியாகத்தான் சரிதாவை நிறுத்தியிருக்கிறார்.

குழந்தைகள் பறக்கவிடும் பட்டம் கிழிந்து போவதைக் கூடப் பார்க்கப் பொறுக்காமல் அழுதுவிடும் இலேசான சரிதாவை முதலில் காட்டுகிறார்! அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக அக்கதாபாத்திரத்தை பாலசந்தர் விசுவரூபம் எடுக்க வைப்பது ரொம்ப ரொம்ப அழகு!

இன்னொரு கட்டத்தில் விருந்துக்குப் போன வீட்டில் மின்சாரம் தடைப்படுகிறது. உடனே குழந்தை ரூபத்தில் உள்ள ஒரு மெழுகுவர்த்தியைப் பற்றவைக்கிறார்கள். அது எரிய எரிய குழந்தை மெழுகு உருகுவதைப் பார்த்துவிட்டு... அடேயப்பா! என்னமாகச் சீறுகிறார் தெரியுமா? கணவர் சிவகுமாருக்கு அவமானமாகப் போய்விடுகிறது. இருவரும் விருந்து சாப்பிடாமலேயே திரும்பி விடுகிறார்கள்.

தொடர்ந்து ஓட்டலுக்குக் கணவனோடு சாப்பிடப் போன இடத்தில் தன்னைப் பார்த்துச் சிரித்தவனைக் கைநீட்டி அடித்தே விடுகிறார்! வீட்டில் மட்டும் என்ன? அவருடைய போக்கைப் பற்றி ஆராய்ந்த மாமி யாரை அரிவாள் மனையைத் தூக்கி அடிக்கப் போவதும், சிவகுமார் அவரை அடித்து மாடிக்கு அழைத்துப் போய் காம்போஸ் கொடுத்துத் தூங்க வைப்பதும் அற்புதமான காட்சி.

கடைசியில் 'அவர்கள்' படம் பார்த்துக் கொண்டிருக்கையில் ரஜினிகாந்த் சுஜாதாவை இன்சல்ட் செய்யும் காட்சி திரையில் ஓடிக்கொண்டிருக்கும்போது எழுந்து 'டே! ராமனுஜா! பெண்ணுன்னு உனக்குக் கிள்ளுக்கீரையாடா! ஸ்டுபிட்' என்று வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டு ரஜினிகாந்த் வீட்டைத் தேடிப் போகிறாரே அந்த இடம்தான் எனக்குக் கொஞ்சம் ஓவராகப் படுகிறது!

இவரை டாக்டரிடம் அழைத்துச் சென்று கன்சல்ட் செய்யும்போது அவர் 'இதுசித்த பிரமைக்கும் புத்தி சுவாதீனமில்லாத பைத்தியத்துக்கும் இடைப்பட்ட ஒரு கோடு' என்கிறாரே! அந்தக் கோட்டை டைரக்டர்



# அதிசயப் பிறவிகள்

# டார்லிங் டார்லிங்



மீர்விட்டாரோ என என்னை எண்ணவைத்து விடுகிறார்!

ஆகமொத்தத்தில் சரிதாவின் ஆவேச நடிப்பு என்னைப் புல்லரிக்கச் செய்துவிட்டது உண்மை. அந்தக் கண்கள், அந்த உதடுகள், அந்த விரல்கள், அந்தக் குரல் அத்தனையிலும் நான் பாலசந்தரையே பார்த்தேன்!

சிவகுமாருக்கு இந்தப் படம் ஒரு வரப்பிரசாதம்! வாலியின் துணையோடு இவரும் சரிதாவும் புதுக் கவிதைகளால் கோபுரமாக்கும் காதலில் உள்ள நேர்த்தியை விட இவருடைய அமைதியான — கண்ணியமான நடிப்பில் உள்ள நேர்த்தி ஆழம். மனைவி கண்ணம்மாவின் ஆவேசத்துக்கும் பெற்றோர்களின் மனக் கசப்புக்கும் இடையே சிக்கிக்கொண்டு, இவர் படும் பாடு இவரது நடிப்பில் ஒரு தனி ஆவர்த்தனம்!

பூர்ணம் விசுவநாதன், சிவகாமி, சாருஹாசன், ஹரிஹர சுப்பிரமணியம், சீனிவாசன், அருந்ததி, ஜெயஸ்ரீ அத்தனை பேரும் அங்கங்கே பரிமளிக்கிறார்கள்.

பாலசந்தர் இறுதிக் காட்சிகளைக் கொஞ்சம் நீட்டி பதினாறு ரீல்கள் வரைகொண்டு போன மாதிரி என் விமர்சனமும் நீள்வதற்கு மன்னிக்கவும். எனக்குப் பிடிக்காததையும் நாலு வரி சொல்லவில்லையென்றால் அது எப்படிச் சரியான விமர்சனமாகும்?

அஸ்திவாரம் ஆழம்; கட்டிடம் பலம். எல்லாம் சரிதான். அந்த டாக்டர் கடைசியாகச் சொல்லுகிற டிரீட்மெண்ட்தான் எனக்குச் சப்பென்று போயிற்று. எப்போதோ கண்ணால் கண்ட கொலையில் பலியான குழந்தையின் உயிர்தான் சரிதாவின் வயிற்றில் வளர்கிறது என்று சொல்ல வைத்து நோயைக் குணப்படுத்துவது அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுப்பது மாதிரி.

அதை விடுங்கள். முற்றுப்புள்ளிக்கு வருகிறேன்.

டாக்டரிடம் சரிதா, ''பாரதியார் இன்று உயிரோடு இருந்தால் நான் அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்'' என்கிறாரே... அந்த மாதிரி நான் ஒன்று சொல்கிறேன்.

பாரதியார் இன்றைக்கு உயிரோடு இருந்தால் 'அக்னி சாட்சி'யைப் பார்த்துவிட்டு ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த பாலசந்தர் கிடைத்து விட்டார் என்று'' எனப் பாடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

இப்படிக்கு அன்பன் திரைஞானி

## அதிசயப் பிறவிகள்

● நான்கு அப்பாவிகளின் கதை.

மகேந்திரன், எஸ். வி. சேகர், பிரபு, கார்த்திக். மட சாம்பிராணிகளாக இவர்களை உருவகப்படுத்தி பரமானந்த சிஷ்யர்களாக்கி யிருக்கிறார்கள்.

சோற்றில் குழம்பு, ரசம் பொறியல் எல்லாவற்றையும் ஒன்றாக ஊற்றிப் பிசைந்து போதாக் குறைக்குத் தண்ணீரையும் கலந்து 'எல்லாம் வயிற்றுக்குள் போகவேண்டியதுதானே' என வியாக்கியானப் படுத்துவது வேடிக்கைதான்.

கடைசி அப்பாவி கார்த்திக் எப்படியோ ராதாவைக் கைப்பிடித்துக் கல்யாணம் செய்து கொண்டு அழைத்து வந்து, 'நம்ம நால்வருக்கும் சேர்ந்துதான் இவளைக் கல்யாணம் செய்து கொண்டுள்ளேன்' என்கிறபோது அப்பாவித்தனத்தின் எல்லை மீறி விடுகிறது.

மருமகள் ராதா மைத்துனர்களைத் திருத்தி தட்டில் சாப்பிடப் பழக்குகிறாள். அவர்களது தாடிகளைக் களைகிறாள். 'உங்களுக்கெல்லாம் எப்போது திருமணமாகிறதோ அப்போதுதான் எனக்கு முதலிரவு' எனச் சபதம் எடுத்துக் கொள்கிறாள்.

அப்புறம் அவர்கள் சாப்பாட்டைப் பிசைந்த மாதிரி தேவர் பிலிம்ஸ் கதை இலாகா கதையைப் பிசைந்து மசாலா உருண்டை பிடித்திருக்கிறார்கள்.

வெகுளித்தனமான நடிப்பில் நால்வரும் சக்கை போடு போட்டுச் சிரிப்பு விருந்து வைக்கிறார்கள்.

அடக்கத்திற்கு இரண்டு 'ரா'க்கள். ராஜலட்சுமி, ராதா! முதல் 'ரா' பிரபுவைத் திருமணம் செய்து கொள்கிறார். மகேந்திரனுக்கு வனிதா, சேகருக்கு அருந்ததி. ஆங்காங்கே ஜோடிகள் முளைத்து இவர்களை வீரர்களாக்குகிறார்கள்.

ஜெய்சங்கர் போலீஸ் அதிகாரியாக வருகிறார். ராதாவின் அண்ணன். சிலுக்கு ஸ்மிதாவும் பாலன் கே. நாயரும் கூட்டாளிகள் என்பதை கிளைமாக்ஸ் புரிய வைக்கிறது. வழக்கமான தேங்காய் வழக்கமான ஸ்டைலில் பேசி நடித்திருக்கிறார்.

பொதுஜன ரசனைக்குத் தீனி போடும் அத்தனை அம்சங்களையும் படத்தில் சேர்த்து விறுவிறுப்பைக் கூட்டியிருக்கிறார் டைரக்டர் திவாகராஜன்.

ஏராளமான சண்டைகள்!
ஏராளமான சிரிப்பு வெடிகள்!
ஏராளமான நட்சத்திரங்கள்!
ஏராளமான ரசிகர்களைக் கவரும் படம்!

-திரைஞானி

## டார்லிங்... டார்லிங்... டார்லிங்

● தலைப்பில் மூன்று டார்லிங். படத்தில் வருபவரோ ஒரே ஒரு டார்லிங். பூர்ணிமா ஒருவர்தான். ஆனால் பாக்யராஜ் ஒரு முறைகூட அவரை 'டார்லிங்' என அழைக்க முடியாத சூழ்நிலையை கதை உருவாக்கிவிடுகிறது.

எஸ்டேட் முதலாளியின் மகள் பூர்ணிமா. அதே எஸ்டேட்டில் வாட்ச்மேனாகப் பணி புரிபவரின் மகன் பாக்யராஜ். சிறு பிராயத்தில் பூர்ணிமா தன்னுடன் கொண்ட நட்பைக் காதல் எனத் தவறாக நினைத்துக் கொண்டு அவரது வரவுக்காகக் காத்திருக்கிறார். பல ஆண்டுகள் கழித்து அவர் அயல் நாட்டில் படிப்பை முடித்துக் கொண்டு தோழிகளுடன் ஊட்டிக்கு வருகிறார். அழைத்து வர ஆசையோடு ரயிலடிக்குப் போகிறார். ரயில் வருகிறது. ஆனால் அவருக்குத் தன் காதலன் நினைவு வருவதில்லை. தானே தன்னை அறிமுகப்படுத்திக்கொள்கிறார்.

'அப்படியா' என்ற பூர்ணிமா 'லக்கேஜை எடுத்துக்கோ' என உத்தரவிட்டதும் ஏற்படுகிற ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் தனக்கே உரிய பாணியில் முகத்தில் தேக்கிக் காட்டிப் படம் பார்ப்பவர்களின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

போகப் போகத் தன்னை நேசிக்கக் கூடும் என்ற நப்பாசையைத் தன்னுள் வளர்த்துக் கொண்டு காத்திருந்தவருக்கு 'தூஸ்' பட்டமும், கேலிப் பேச்சும்தான் மிச்சம். இப்போதும் அனுதாபப் படுகிறோம்.

கடைசியில் கராத்தே வீரர்களுடன் காதலிக்காக மோதி வீரத்தைக் காட்டிய பிறகுதான் அந்தப் பக்கமும் கொஞ்சம் அனுதாபம் கிடைக்கிறது. வெறும் அனுதாபம்தான்! காதல் அல்ல.

ஒரு நாள் அவர் தன்னைத்தான் காதலிக்கிறார் என்கிற உண்மை பூர்ணிமாவுக்குத் தெரிய வந்ததும், தனக்கும் சுமனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் கூறி விடுகிறார்.

மறுநாள் அங்கு சுமன் வருகிறார். அதன் பிறகு கதை திசை திரும்புகிறது. தன்னைக் காதலித்தவனிடம் உள்ள ப்ளஸ் பாயிண்ட்ஸ் எல்லாம் வரப்போகிற கணவனிடம் மைனஸாக இருப்பதை உணர்கிறாள். மனம் மாறி 'ஐ லவ் யூ' என்கிறார்.

அதிகம் ஒட்டி உரசாமல் எட்ட நின்றே மனத்தால் தொடும் காதலின் ஆழம் பாக்யராஜுக்குப் புதுசுதான். சிரிக்க வைக்க வேண்டியவர் சீரியஸான காதலுக்கு அடிமையாகியதும் புதுசுதான். ஆனால் அதைத் தன்னுடைய அப்பாவித்தனமான போக்குக்குள் நுழைத்துப் போட்டுக் கொண்டு மற்றவர்களைச் சிரிக்க வைக்கிறார். ஆங்காங்கே தன்னுடைய முத்திரைகளைக் குத்தியிருக்கிறார்.



ஓர் இடம்: இவர் தற்கொலை முடிவுக்கு வந்தவரைப் போல சாய்வான நிலப் பகுதியில் மேல் நோக்கி ஏற, பின்னால் பூர்ணிமா 'ராஜா...ராஜா' என அழைத்தவாறே ஓடி வர, பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டு காமிரா மேலே வருகிறது. அது பள்ளத்தாக்கு அல்ல சமநிலம் என்பதைக் காட்டிச் சிரிக்க வைத்து விடுகிறார்.

கராத்தே சண்டையோடு சூபர்மேன் உடையில் இவர் போடும் சண்டையும் படத்தில் உண்டு.


பூர்ணிமா மிக இயற்கையான நடிப்பைக் காட்டியிருக்கிறார். மேல் நாடு சென்று திரும்பிய பெண்ணுக்குரிய தோற்றத்திற்கு மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறார்.

வாட்ச்மேன் கல்லாப்பெட்டி சிங்காரம் சிரிக்க வைத்தாலும் ஒரு கேள்வி: "அந்தக் கோயமுத்தூர் பாஷையை ஒரே மாதிரி எத்தனை படத்தில் பேசப் போகிறார் இவர்?" இவரது கதா பாத்திரம் மிகமிக செயற்கையானது.

சுமன் தோற்றத்துக்கும் நடிப்புக்கும் ஒற்றுமை உண்டு. இரண்டுமே உயரமானது.

செந்தாமரை, வி. கோபாலகிருஷ்ணன் இருவரும் திரையில் தோன்றி பாக்கியராஜின் காதல் நிறைவேறுமல்போகிறமாதிரி பாவ்லா காட்டி பிறகு நிறைவேற்றுகிறார்கள்.

கொஞ்சம் ஹைகிளாஸ்! -திரைஞானி



# வட்டமேஜை

● தண்ணீருக்குத் தவிக்கும் தமிழ் நாட்டுக்கு உருப்படியாக வழி ஏதும் செய்யாமல் இரு போட்டித் தலைவர்களுக்கும் 'இம்மாத் தூண்டு' ஐஸ்கிரீமைக் கொடுத்து ஏமாற்று வதைப் போல் கார்ட்டூன் மத்திய அரசின் பாராமுகத்தை நன்கு விளக்குகிறது.
சென்னை-4 வி. முத்துகிருஷ்ணன்

● 'யாரை வதைக்கும் தீபாவளி?' என்ற மஞ்சுளா ரமேஷின் அட்டைப் படக் கட்டுரையில் ''உங்கள் வீட்டில் பிறந்த பெண்களுக்கு ஒரு நியாயம், உங்கள் இல்லத்தரசியாகப் புகுந்த பெண்ணுக்கு ஒரு நியாயமா? ஏன் இந்த வேஷம்?'' என்ற அக்னி வார்த்தைகளை அற்புதமாகக் கோர்த்து, கதையாகவும், கருத்துள்ளதாகவும் எழுதி, மனைவிகளைத் துன்புறுத்தும் கணவன்மார்களுக்குச் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார்.
புதுவை-3 வி. குருமூர்த்தி

● போன தீபாவளிக்கு மொத்தமாக 'கர்இலே பூ'வை (சுற்றி) தந்து நகைச்சுவை விருந்து படைத்த நீங்கள் இந்தத் தீபாவளிக்கு 'ரூபாய்க்கு மூணு கொலை'யை மட்டும் இன்ஸ்டால்மெண்ட் முறையில் தருகிறீர்களே இது நியாயமா சார்!
மதுரை-16 ஆர். வி. பிரசாத்

● அமிதாப்புக்குக் காயம்படக் காரணமாக இருந்த புனித் இஸ்ஸாரைத் துணுக்கு வடிவில் வெகு சிறப்பாக எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்த நீங்கள், அவர் புகைப்படத்தைப் போடாமல், சிறு குழந்தைகளும் நன்கறியும் அமிதாப்பின் படத்தை மட்டுமே வெளியிட்டிருக்கிறீர்களே!
600 035 சி. பூபால் சிங்

● சிந்திக்க வைப்பதில் பட்டுக்கோட்டையாரின் 'பேனு' என்றுமே சோடை போனதில்லை சார். 'இந்தியனாய் இரு. இந்தியாவை வாங்கு' ஒரு சாதாரண இந்தியனின் அவல வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது போல் உள்ளது.
வேல்நகர் வி. எஸ். குமார்

● எங்கே போயிருந்தார் இத்தனை நாள் விசிட்டர் அனந்த்? மடை திறந்த வெள்ளம் மாதிரி அவரது பக்கங்கள் பெருக்கெடுத்து ஓடின.
வியாசர் காலனி திருமதி நாராயணராவ்

● மாலனின் சிறுகதை சிரிப்புடன் சிந்தனையைத் தூண்டியது. 'ஜனநாயகம்' என்று சொல்லிக் கொண்டு குழப்பமான இந்த அரசியல் மனோபாவம் நீடித்தால் எதிர்காலத்தில் இந்தக் கதை நிஜமாய் நிகழாது என்பது என்ன நிச்சயம்?
ஸ்ரீரங்கம் ஆர். ஸ்ரீநிவாசன்


● கே. சித்ரா அவர்கள் பிரச்னைகளைப் பிய்த்துத் தள்ளிவிட்டார். அதிலும் 'டாரதி உல்லகாங்க்' என்ற தாய், தனக்கு இருக்கும் மூளை வளர்ச்சி குறைந்த குழந்தையை வைத்துக்கொண்டே (ஒடிப்போக முயலாமல்), ''இன்றைக்குக் கிடைக்கவிருக்கும் மன நிம்மதியையும் மகிழ்ச்சியையும் புறக்கணித்து விட்டு நாளைய சுமையை இன்றையிலிருந்தே ஏன் சுமக்க வேண்டும்?'' என்று கேட்பது பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டியது.
காட்டாங்குளத்தூர் வி.ச. கிருஷ்ணரத்னம்

● வௌவாலைப் பற்றிய ஆராய்ச்சியும், அதன் இறைச்சி பற்றிய சுவையான தொகுப்பும், அதனையொட்டியே ஜகத்குரு அவர்களின் குங்குமம் செய்வது எப்படி என்ற விளக்கமும் ஒரே பக்கத்தில் வெளியிட்டது எப்படியோ இருந்தது.
செம்பியம் க. சக்திவடிவேல்

● தார்குண்டே மீது நடைபெற்ற தடியடி சம்பவத்தைப் பற்றி விசாரிக்க, அதுவும் ஒரு வாரத்துக்குள் அறிக்கை அளிக்கும்படி உத்தரவைப் பிறப்பித்தவர் தமிழக முதல்வர். ஆனால் அந்த விசாரணைக் கமிஷன் முன்பாக சாட்சியளிக்க மக்கள் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த எவரும் முன்வராத செயலுக்குஎன்ன நியாயம் கற்பித்துக் கூறப் போகிறீர்கள்?
போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

● சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமையல் செய்பவர்களின் கஷ்டங்களை எந்த அதிகாரியும் நினைத்துப் பார்ப்பதில்லை. 50 பேர்களுக்குச் சமையல் செய்பவர்களுக்கும் 60 ரூபாய் சம்பளம்; 300 பிள்ளைகள் வரை சமையல் செய்பவர்களுக்கும் அதே சம்பளம்தான்.
குமரி மாவட்டத்தில் சில பள்ளிகளில் 300 பேருக்கு மேல் சமையல் செய்பவர்கள் தண்ணீர் கிடைக்காமல் எங்கெங்கோ கஷ்டப்பட்டு அலைந்து கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய சிரமங்களையெல்லாம் அரசுக்கு யார் கூறுவது?
குமரி மாவட்டம் உண்மை அனுதாபி

# வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்




GLC-6-3012 TM

## காம்ப்ளான்®

**ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.**

வளரும் குழந்தைகளுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச் சத்துக்கள்—அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர்கள், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

**இலவசம்!** 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

"குடும்பத்திற்கான பரிபூர்ண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி"
50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக :
தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

**திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®**


வீம்பு பிடிவாதம்
தேர்தல்
இ. காங்கிரஸ்
இ. காங்கிரஸ்
கர்நாடக அரசியல்

கல்கி

1982 நவம்பர் 28
துந்துபி கார்த்திகை 12
மலர் : 41 இதழ் : 18



# கண் திறக்காதா? கல்விமுறை மாறாதா?

இவ்வாண்டு கல்கி தீபாவளி மலரில் திரு சி. சுப்பிரமணியம் எழுதியுள்ள கட்டுரை அனைத்து மாநிலங்களிலும் மத்தியிலும் உள்ள கல்வி அமைச்சர்களின் கவனத்தைக் கவர வேண்டும் என்று விரும்புகிறோம்.

சுதந்திரத்துக்கு முற்பட்ட நாட்களில் மெக்காலே கல்வித் திட்டம் தான் இந்நாட்டின் மிகப் பெரிய சாபக்கேடு எனவும், அது இங்கு பிரிட்டிஷ் ஆட்சியை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள உதவுகிற அரசு ஊழியர்களை உற்பத்தி செய்யவும் மக்களிடம் அடிமை மனப்பான்மையை வளர்க்கவுமே உருவாக்கப்பட்டது எனவும் பேசப்பட்டது. ஆனால் சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் இந்தக் கல்வி முறையில் விசேஷ மாறுதல் ஏதுமில்லை. கல்வி கற்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகரித்துள்ளதே யொழிய கல்வி முறை அநேகமாக அப்படியேதான் இருக்கிறது. இன்றைய கல்வி முறையில் படித்த இளைஞர்கள் உடல் நலுங்காமல் உத்யோகம் பார்க்கவே ஆசைப்படுகின்றனர். தொழில் செய்ய நாட்டமின்றி உத்யோகம் தேடி அலைகின்றனர். விவசாயப் படிப்புப் படித்த இளைஞர்கள்கூட நகரங்களில் விவசாய அலுவலகங்களில் ஃபைல் பார்க்கவே விரும்புகின்றனர். ஆக, இன்றைக்கும் நமது கல்வி முறை எழுத்தர் பட்டாளங்களையே உருவாக்கி வருகிறது.

ஆதாரக் கல்வித் திட்டத்தை நமக்கு அளித்தார் காந்திஜி. ஒரு தொழிலை மையமாகக் கொண்டு அதையொட்டி குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அன்றைய சூழலில் அவர் சர்க்காவைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் அது தொழிற் கல்வியின் ஒரு சின்னம்தானே தவிர அது மட்டுமே கல்வியில் மையமாக்கப்பட வேண்டும் என்பதில்லை.

கிராமங்களில் அந்த அந்தச் சூழலுக்கும், இயற்கை வளங்களுக்கும் ஏற்றவாறு பல்வேறு தொழில்களை மாணவர் பயிலவும் அதை மையமாக வைத்து இதர பாடங்களைக் கற்கவும் வழி வகுக்க வேண்டும். அப்போது தான் கிராமப்புறங்களில் வசிப்போருக்கு எதிர்காலம் நம்பிக்கை உடையதாக இருக்கும். நகரங்களுக்கு அவர்கள் வேலை தேடி குடிபெயர்வது நிற்கும். நகரங்களில் வாழும் சிறுவர்களும் இளைஞர்களும் இவ்வாறே தொழில் செய்வதில் ஆர்வமும் ஆற்றலும் பெருமையும்கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவும், வறுமை நீங்கவும், தேசத்தின் தொழில் வளமும்பொருளாதாரமும் ஏற்றமடையவும் அடிப்படைத் தேவை தொழில் கல்வி.

கல்வி அமைச்சர்கள் கண் திறக்காதா? கல்வி முறை மாறாதா? மனிதனை மனிதனுக்கும் கல்வி வராதா? என ஏங்குகிறோம்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

# விடிவதற்குள் வா!

சுஜாதா



[விடிவதற்குள் வா முடிவதற்குள் ஒரு சிறிய சலசலப்பு. இந்தத் தொடர் கதையைப் படித்து வரும் சிலர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதங்களிலிருந்து சில பகுதிகள்:

''உண்மைக்குப் புறம்பாக இந்துக்களுக்கு எதிராக மண்டைக்காடு கலவரங்களை எழுதியுள்ளீர்கள்.''

''மண்டைக்காடு சம்பவங்களை வேண்டுமென்றே திரித்து ஹிந்துக்களுக்கு எதிராக எழுதுகிறீர்கள்.''

''விடிவதற்குள் வா தொடரில் தாங்கள் கையாண்டுள்ள உண்மைச் சம்பவத்தின் அடிப்படையைத் தவறாகக் கேட்டு அறிந்திருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன். மண்டைக்காடு சம்பவத்தைப் பற்றித் தீர விசாரிக்காமல் தங்கள் கற்பனைக் குதிரையின் லகானைத் தட்டி விட்டுத் தவறான செய்திகளைக் கொடுத்திருக்கிறீர்கள்.''

இந்த ரீதியில் எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. தமிழ்நாடு ஹிந்து மிஷன் போன்ற இயக்கங்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எழுதியிருக்கிறார்கள். 'ஹிந்து மறுமலர்ச்சி' போன்ற பத்திரிகைகளில் மறுப்புத் தெரிவித்து எழுதியிருக்கிறார்கள். மார்த்தாண்டம் பிபிஎம் கார்டன்ஸைச் சேர்ந்த திருமதி சாந்தி, மிக விவரமாக மண்டைக்காட்டில் நடந்ததை நேர்முக வர்ணனை போல் எழுதியிருக்கிறார்.


இந்த எதிர்ப்புக்களுக்கெல்லாம் ஆதாரமான காரணம் 'விடிவதற்குள் வா' கதை மண்டைக்காட்டுச் சம்பவத்தின் அடிப்படையில் எழுதப்படுகிறது என்கிற தவறான ஆரம்ப எண்ணம்தான்.

'விடிவதற்குள் வா' கற்பனை செய்யப்பட்ட கதை. இதற்கும் மண்டைக்காடு சம்பவங்களுக்கும் ஒற்றுமை எதுவும் இடையாது. மணற்காடு என்கிற பெயரால் வந்த குழப்பம் இது என்று நினைக்கிறேன். 'விடிவதற்குன் வா'வின் ஆதாரமான சேதி— இதை நான் வியாக்யானம் செய்ய வேண்டியிருப்பது ஒருவிதமான துரதிர்ஷ்டம்தான்— ஒரு சின்னச் சம்பவம் எப்படிப் பெரிசாகிஒரு கிராமத்தையே பற்ற வைத்து விடுகிறது என்பதுதான். கிராமத்தில் உள் பொத்தி இருக்கும் கோபம் என்னும் வெடி குண்டு ஒரு திரி பற்றிக் கொள்ளக் காத்திருக்கிறது. இதில் உள்ள கனகசபை, கிரிஜா, உண்ணி, தேவகி, சதாசிவம், பாதிரியார், மீனவர்கள் எல்லாருமே கற்பனைப் பாத்திரங்கள். அவர்கள் நடத்தையெல்லாம் என் மனத்தில் கற்பித்துக் கொண்ட நடத்தைகள். என் ஹிந்து நண்பர்கள் தயவுசெய்து மண்டைக்காட்டை மறந்துவிட்டு இதை வெறும் கற்பனைக் கதையாகப் பார்க்க வேண்டுகிறேன். மேலும் என்னை ஒரு ஹிந்து விரோதி என்று குற்றம் சாட்டாதீர்கள். ஒரு ஹிந்து என்று சொல்லிக் கொள்ளப் பெருமைப்படுகின்ற, உபநிஷத்துக்களையும் இதிஹாஸ புராணங்களையும் ஆழ்ந்து படித்து

அவைகளில் நல்ல விஷயங்களை அவ்வப்போது சொல்லி வரும் என்னை ஹிந்து விரோதி என்று சொல்லாதீர்கள். 'கல்கி' போன்று ஹிந்து தர்மத்துக்கு ஒத்தாசை செய்யும் பத்திரிகையும் இருக்க முடியாது. ஹிந்து மறுமலர்ச்சி இயக்கங்கள் மறு மலர்ச்சியில் ஈடுபடட்டும். எதிர்ப்பதற்கு ஏதாவது ஒரு சாக்குத் தேடி 'ஸேம் ஸைட் கோல்' போடாதீர்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.]

## 18

**கா**லை எழுந்தபோது கனகசபைக்கு முன்னிரவின் சம்பவங்கள் எல்லாமே பொய் போல் தோன்றின. தேவகி ஒரு கோப்பை



யில் டீ கொண்டு வந்து கொடுத்தாள். அவள் இரவு முழுவதும் தூங்கவில்லை என்பது கண்களில் தெரிந்தது. அவளை நேராகப்பார்ப்பதற்குப் பயப்பட்டான். தன்னை முழுவதும் சபித்துக் கொண்டான். மனத்தின் மூலையில் தன் மனைவியைத் தேடிச் செல்ல வேண்டும் என்கிற கடமை உறுத்திக் கொண்டிருந்தது. மற்றொரு இருண்ட மூலை தன் மனைவி கிடைக்கக் கூடாது என்றது. குளித்து விட்டு மாற்று உடை அணிந்து கொண்டு

அவன் வெளியே புறப்படுவதைத் தேவகி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான் போய் விசாரிச்சுட்டு வரேன் தேவகி, பஸ் ஏதாவது கிடைக்குமான்னு.''

''உண்ணியைக் காணான் போவுன்னோ?''

''அதையும் விசாரிக்கிறேன். சாயங் காலத்துக்குள்ள வந்துருவேன். கவலைப் படாதே.''

வாசலில் போலீஸ் கான்ஸ்டபிள் காத் திருந்தார். ''உங்களைக் கூப்பிடறாங்க.''

''யாருப்பா?''

''உதவி கலெக்டர்!''

கனகசபை அவர் பின் நடந்தான்.

தபால் ஆபீஸ் வாசலில் சிறிய கூட்டம் இருந்தது. போலீஸ் பாதுகாப்பு வலுவாக இருந்தது. இரண்டு கட்சியினரும் எதிர் எதிரே இரண்டு விரோத முடிச்சுக்களாக நின்று கொண்டிருந்தனர். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

உதவிக் கலெக்டர் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். இளைஞர். அவர் சுபா வத்தில் அசதி தெரிந்தது. எதிரே மேசையில் காப்பிக் கோப்பை காலியாக் இருந்தது. கனகசபை உள்ளே நுழைய ''உக்காருங்க! நீங்கதானே கனகசபை? உக்காருங்க!'' என் றார். அவருக்கு எதிரே ஓர் இளைஞன் சற்று படபடப்புடன் சாட்சி சொல்லிக் கொண் டிருந்தான்.

''பொம்பளைங்களைக் கலாட்டா பண் ணினு அவங்க ஏன் புகார் கொடுக்கலே?''

''எல்லாரும் கல்யாணம் ஆகாத பொண் ணுங்க ஸார்''.

''என்ன செஞ்சாங்களாம்?''

''கேரளப் பெண்ணுங்க, குளிக்க வந்த வங்களை மார்ல வெட்டிட்டாங்க! பத்திரிகை கள்ள வரலேங்க.''

அந்த இளைஞனைக் கனகசபை ஏறிட்டுப் பார்த்தான். தீவிரமான முகம். நெற்றியில் திருநீறு அணிந்து பள பளவென்று குளித் திருந்தான். ''உண்மையை நீங்க தெரிஞ் சுக்கணுங்க. ரொம்ப நாளாவே பொறுத் துப் பொறுத்துப் பார்த்திருக்கோம்ங்க. இவரு சம்சாரம் காணாமப் போனது சின்ன விஷயம். இதப் பாருங்க. நோட்டீஸ் அவங்க விநியோகம் செஞ்சது. ''மண்ணையும் கல்லை யும்வணங்குகிறவன்மூளை எப்படி இருக்கும்:'' இந்த மாதிரி யெல்லாம் பிரசாரம் செஞ்சா யாருக்குத்தான் கோபம் வராதுங்க? இதை யெல்லாம் இந்துக்கள் கிட்டயே கொடுப் பாங்க! இதைக்கூட யாரும் பெரிசா எடுத் துக்கலேங்க. கிறிஸ்துமஸ் சமயம் எங்க வீடு களுக்கு முன்னாலே பஜனைக் கோஷ்டி போவாங்க பாடிக்கிட்டே! எங்க கிட்டப் பணம் பறிப்பாங்க! சர்ச் கட்ட எங்க் கிட்ட பணம் வசூலிச்சபோது கொடுக்கலையா? கடவுள் ஒண்ணுதானேன்னு இதை நாங்க யாரும் எதிர்க்கலேங்க. ஆனா 1981 கடைசி யில இருந்து நிலை ரொம்ப மோசமாயிருச் சுங்க. ஒரு கிராமத்தையே இவங்க தரை மட்டமா ஆக்கிட்டாங்க. பெரிசா ஒரு விழா நடத்தினாங்க. ஊர்வலம் போவாங்க லாரி லாரியா! ஒரு பதினாறு வயசுப் பையன் குளிச்சுக்கிட்டு இருந்தான். லாரில இருந்து ஒருத்தன் அவனைக் குறிபார்த்து கல்லெறிஞ் சான். அவன் கண்ல பட்டு ஒரு கண்ணு வெளியே தெறிச்சு விழுந்துருச்சு! நாகர் கோயிலுக்குக் கொண்டு போறதுக்குள்ளாற கண்ணு போயிருச்சு!''

உதவிக் கலெக்டர் குறிப்பெழுதிக்கொண் டார்.

''அவங்களைக் கேட்டா அவங்க நேர் மாறு சொல்லுவாங்க.''

''எத்தனையோ பேர் சாட்சி இருக்காங்க. யாரை வேணாக் கேட்டுப் பாருங்க. ரொம்பப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். எல்லை மீறிப் போய்த்தான் இந்த வன் முறைக்கு வந்திருக்கோம். ஆனா இந்த மாதிரிச் சம்பவங்கள் நடந்த பின்னால் கூட இந்துக்கள் கிறிஸ்தவர்களை வெறுக்கலே. அதுக்கப்புறம்தான் இந்த மீனவர்கள் சம்பவம் நடைபெற்றது. இதில நீங்க உண் மையான கிறிஸ்தவச் சகோதரர்களைக் கேட் டுப் பாருங்க. தவறு யார் பக்கம்னு சொல்லு வாங்க! எல்லாத்தையும் அவங்க செஞ்சிட்டு தவறை ஆர் எஸ். எஸ். மேலே போடு வாங்க.''


''நீங்க ஆர். எஸ். எஸ்.ஸா?''

''இல்லேங்க. இந்தச் சம்பவத்தை எல்லாம் கண்ணால பார்த்தவன்! திருவிழா நடக்கற துக்கு மூணு மாசம் முன்னாடியே 'திரு விழாவை எப்படிக்கொண்டாடநீங்க பார்த்


### போதையைக் கண்டுபிடிக்க பலூன்!

ஆசிய விளையாட்டு விசேஷ நிர்வாகக் கமிட்டியினர் 100 பலூன்களை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தங்களால் அமர்த்தப்படும் டிரைவர்கள் (கோச், பஸ்கள் ஓட்ட) அளவுக்கு அதிகமாகக் குடித்துவிட்டு வேலைக்கு வராமல் தடுப் பதற்கு இந்த ஏற்பாடாம். இதன்படி டிரைவர்கள் வேலையைத் துவங்கு முன் இந்த பலூன்களை ஊதும்படி கூறப்படு வார்களாம். அதன் மூலம் டிரைவரின் போதை நிலையை அறிய முடியுமாம்.

—பத்திரிகைச் செய்தி — ஜீரா



ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!



**Yendelux**
**coconut oil**

**என்டீலக்ஸ்**
தேங்காய் எண்ணை

15 கிலோ 4 லிட்டர் டின்களிலும் 1 லிட்டர் 500. 200ml. பாலிதின் பாட்டில்களிலும் கிடைக்கிறது.

மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244. 4484. மில்ஸ் : 2266, 4611

DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR. VIRUDHUNAGAR, Phone : 3107, 3745.

GRAMS: 'PRECIOUS'
'MAILAIFIN'

PHONES: 75671
75892
75906
77750

Associate Companies of

# MADRAS MOTOR FINANCE & GUARANTEE COMPANY LIMITED

★

# UDAYA FINANCE & INVESTMENTS

5, South Mada Street, Mylapore, Madras-600004

Our long term saving schemes:

1. SWARNA SURABHEE CASH CERTIFICATE
   Rs. 1000 becomes Rs. 5000 in 120 months
2. FIXED TERM DEPOSIT
   Rs. 1000 becomes Rs. 20000 in 54 months
3. FIXED DEPOSIT SCHEMES
   1 Year 14%    2 Years 15%    3 Years 16%
   4 Years and above 17%

MONTHLY INTEREST IS PAID AT OUR COST

4. RECURRING DEPOSIT
   Monthly Rs. 15 onwards.    Period 12 to 36 months

★

# MYLAPORE SAFE DEPOSITS LOCKER COMPANY LIMITED

5, South Mada Street, Mylapore, Madras-600004

SAFE DEPOSIT LOCKERS OF
VARIOUS SIZES AVAILABLE

"SAVE WITH US AND GROW WITH US"

துறலாம்'னு சவால் விட்டு வம்புக்கு அலேஞ்சுக்கிட்டு இருந்தாங்க. நாங்க யாருமே அதைப் பெரிசா எடுத்துக்கலே. கிறிஸ்துவங்களைக் கூட முழுதும் குறை சொல்லிட முடியாதுங்க. இவங்களைத் தூண்டிவிட்ட குரூப் வேறே இருக்குங்க. அவங்களை நீங்க இனம் கண்டு பிடிக்கணும். இந்த மாவட்டத்திலே ஆர். ஆர். எஸ். வளருதுன்னு யாருக்குக் காய்ச்சல்னு கண்டு பிடிக்கணுங்க! கோயில்களை இடிச்சது யாருன்னு கண்டுபிடிக்கணுங்க நீங்க! ஸி.ஐ.டி. ரிப்போர்ட்டை எல்லாம் பாருங்க. எக்ஸ்பிரஸ்ல கூட ஒரு பகுதியைப் போட்டிருந்தாங்க!....

''மதம் மாத்தினு மாத்திட்டுப் போகட்டும். அதைப் பத்திக் கவலே இல்லே. ஆனு அவங்க கல்லூரிகளில் இந்துக்களுக்கு வேலே கொடுப்பாங்களா? விசாரிச்சுப் பாருங்க!''

''பாதிரியார் சொன்னதைப் பார்த்தா அவர் பாட்டுக்கு சாதுவா ஜீவனம் நடத்தறப்போ நீங்கதான் அந்த கிரிஜாவைப் புதைச்சு வச்சிருக்கீங்கன்னு வீண் வம்புக்கு வந்தீங்களாம்?''

''பாதிரியார் சாது மாதிரிதான் இருப்பாருங்க. அவர் பேசற பேச்சில தேன் ஒழுகும்! ஆனு இவரே நினைச்சிருந்தா பல வன்முறைச் சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாம் ஸார்! இப்படிப் பேசியிருக்காரே. இதே பாதிரியார் ஒரு கூட்டத்தில் ''இந்து நாய்களை வெளியேற்றுவோம்''னு பேசியிருக்கார். டேப் எடுத்து வைச்சிருக்கோம்! முதல்வர் வந்தா போட்டுக் காட்டத்தான் போறோம். கும்பகர்ணன் மாதிரி தூங்கிக்கிட்டிருந்தவர்களை உலக்கையால அடிச்சு எழுப்பினதுக்கு இவங்கதான் காரணம். இது எப்பவாவது கட்டாயமாக நடக்க வேண்டிய கலகம்ங்க. இந்தானு மனைவி காணமற்போன ஒரு காரணத்துக்காக தவிச்சுக்கிட்டிருந்த உள் நெருப்புங்க இது!''

உதவிக் கலெக்டர் தலையைப் பிடித்துக் கொண்டு கொஞ்ச நேரம் கனகசபையைப் பார்க்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். ''நீங்க போகலாம்'' என்றார்.

''டேப்பு கொண்டு வந்திருக்கேன். கேக்கறீங்களா?''

''இல்லே. வேண்டாங்க! நீங்க சொல்றதில உண்மை இருக்குங்கறதை நம்பறேன். இதுல என்ன பிரச்னைன்னு அவங்க சொல்றதிலேயும் உண்மை இருக்கு!''

''அது எப்படிங்க? ஏதாவது ஒரு பக்கம் தானே உண்மை இருக்க முடியும்?''

''இல்லே. ரெண்டு பேருக்கும் நடுவில எங்கயோ தொங்கிக்கிட்டு இருக்குது! இதுல எல்லாம் இல்லேய்யா தப்பு! இந்த அமைப்பிலே இருக்குது. மாவட்டத்தில் எந்த ஊரை எடுத்துக்குங்க. ஒரு ஹிந்து கோயில் இருந்தா அதுக்கு எதுத்தாப்பலேயே சர்ச்சு! ஐயப்பன் கோயில், அதைப் பார்த்துக்கிட்டு ஒரு குருசடி! இவங்களுக்குப் பங்குனி உத்தரம்னு அதே சமயம் அங்கயும் திருவிழா! லவுட்ஸ்பீக்கர்! ரெண்டு பேரும் போட்டி போட்டுக்கிட்டு அடித் தொண்டையில கடவுளைக் கூப்பிட்டுக்கிட்டே இருந்தா ஏன் கலகம் வராது? கலகம் வரதுக்கு அத்தனை அஸ்திவாரங்களையும் அமைச்சுக்கிட்டு 'கலகம் வந்திருச்சு கலகம் வந்திருச்சு'ன்னு கூப்பாடு போடறோம்.''

''அவங்க எங்க கோவில் இருக்கிற பக்கமே சர்ச்சு அமைக்கணும்? வேற எங்கே யாவது போறது!''

''இதப்பாரு! என்னைப் பர்சனலாக் கேட்டாக் கோவில் சர்ச்சு எல்லாமே போகஸ்! பணம் புடுங்க வழி! ஆனு என்னை யார் கேக்கறுங்க! எல்லாம் முடிஞ்சப்புறம் விசாரிக்கத்தானே கூப்பிடறுங்க!''

''எல்லாம் முடிஞ்சுருச்சா?''

''அய்யோ! இன்னும் முடியலேங்கிறியா?''

''இல்லேங்க'' என்று அவன் சென்ருன். உதவிக் கலெக்டர் சற்று நேரம் வெற்றுப் பார்வை பார்த்தார். கனகசபையைப் பார்த்தார். ''வாய்யா வா! எல்லாத்துக்கும் காரண கர்த்தாவே! வந்து எதுத்தாப்லே உக்காரு!''

கனகசபை தயக்கத்துடன் அவர் எதிரில் உட்கார்ந்தான். ''ஸார் நீங்க மேற்கொண்டு என்னை விசாரிக்கிறதுக்குள்ளே....''

''உன்னை யாருய்யா விசாரிக்கப்போறுங்க? உனக்கு ஒரு மெஸேஜ் கொடுக்கத்தான் கூப்பிட்டேன். உன் மனைவி கிடைச்சுட்டா!''

(தொடரும்)


கல்கி
அடுத்த வாரம்
சிறுகதைச் சிறப்பிதழ்
பன்மொழிக் கதைகள்!

# மனிதன் எப்போது முட்டாள் ஆகிறான்?

○ பூவை. இரா. இராஜு பாரதி, ஈரோடு

? உணவு உண்ண மறுத்து சமாதி அடைந்த வினோபா அவர்களைப் பற்றி....?

! அவர் ரொம்பப் பெரிய மனுஷர்தான். என்றாலும் மருந்து சாப்பிட மாட்டேன், உணவருந்த மாட்டேன் என்று பிடிவாதம் செய்து உயிரை விடுவது ஒருவிதத்தில் தற்கொலையே அல்லவா? அது சட்டப்படி குற்றம் ஆகாதா? டாக்டர்களே இனி வைத்தியம் செய்து பயனில்லை அவரை அமைதியாக இறக்க விடுவோம் என்று நிர்மானித்திருந்தால் வேறு விஷயம்.

இந்த சுதந்திரப் போராட்ட வீரர் காந்திஜியின் மறைவுக்குப் பிறகு மற்றொரு மகாத்மாவாக விளங்கியிருக்கலாம். ஆனால் வாய்ப்பை நழுவ விட்டுவிட்டார்.

அவரது பாத யாத்திரைகளும், பூதான இயக்கமும் பெரு வெற்றி பெற்றன. ஆனால் பூதானமாகப் பெற்ற பூமியை அவர் சரிவரப் பயன்படுத்தத் தவறிவிட்டார்.

ஜெ. பி.யும் அவரும் கருத்து மாறுபட நேர்ந்தது துரதிர்ஷ்டம்தான். எமர்ஜென்ஸியின்போது அதை நேரடியாக வரவேற்காவிட்டாலும் ஒழுக்கக் கட்டுப்பாடு அவசியம்தான் என்று வினோபா பேசியது ஏமாற்றம் அளித்தது. பின்னால் அவர் அறிவித்த ஆசாரிய குலம் பிள்ளையார் சுழியோடு நின்று போயிற்று.

○ எம். நாகேந்திரகுமார், ஒசூர்.

? சட்டத்தின் மிகப் பெரிய குறைபாடு என்ன?

! சட்டத்தில் குறைபாடு கிடையாது. அதை அமல்படுத்துவதில்தான் குறைபாடு. கள்ளக் கடத்தல் கூடாது என்பது சட்டம். ஆனால் கள்ளக் கடத்தலில் ஏராளமான பொருட்கள் வருவதோடு மட்டுமல்ல, அவை துரிதமாக விற்பனையாக விளம்பரங்கள் கூட செய்யப்படுகின்றன! டிஜிடல் கடிகாரங்கள், வீடியோக்கள் போன்றவற்றுக்கு விளம்பரங்கள் பிரசுரமாவதில் அரசுக்கு ஆட்சேபணை எதுவுமில்லை என்று நிதி அமைச்சர் முகர்ஜி நாடாளு மன்றத்தில் பேசுகிறார். இது, பர்மிட் லைசென்ஸ் ஆட்சியில் ஆதாயமடையும் அரசியல்வாதிகள், பெருந்தொழிலதிபர்கள் – வியாபாரிகள்-கள்ளக் கடத்தல்காரர்கள் ஆகியோருடன் கூட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு மற்றொரு சான்று.

○ எஸ். என். ராகவன், பெல்லாரி

? பிரஷ்னேவ் மரணத்தால் உலக அரசியல் அரங்கில் பெரிய மாறுதல் ஏற்படுமா?

! பிரமாதமாய் எதும் இராது. இரு வல்லரசுகளும் புதிதாகவும், அழிவுச் சக்தி மேலும் அதிகமாக உள்ளதுமான அணு ஆயுதங்களைச் செய்து குவித்தபடியே ஆயுதக் குறைப்பு பற்றி பேச்சு வார்த்தை நடத்துவார்கள்.

பிரஷ்னேவ் மரணத்துக்கு விடுமுறை அறிவிக்கவில்லை ருஷ்ய அரசு. இந்த ஒரு விஷயத்திலேனும் பாடம் கற்று இங்கு ஒரு மாறுதல் ஏற்பட்டால் நல்லது.

○ ஆர். சிவராஜ், வால்குடி ★

? யாரிடமும் பேசாமல், வேலையில் ஈடுபட்டு போனஸ் கேட்டிருக்கும் பாண்டியராஜபுரத்து சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் போல் எல்லோரும் இருந்தால்....?

! நாடு உருப்படும். ஆனால் பாண்டியராஜபுரத்துச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் உருப்படுவார்களா? உம்மிடம் அறிய ஆவலாய் இருக்கிறோம்!

○ ஏ. அப்துல் முனீர், ஒசூர்

? சமீபத்தில் தாங்கள் ரசித்துப் படித்த ஒரு புத்தகம் ...?

! இளந்தேவனின் ''கனவு மலர்கள்'', கவிதைத் தொகுப்பு. (பொன்முத்து பதிப்பகம், 284, ராயப்பேட்டை நெடுஞ்சாலை சென்னை 14) சாம்பிளுக்கு நாலு வரி:

காதல் மணக்குமினம் பூவும் – வந்து
  காதில் முழக்குமுயிர்ப் பாட்டும்
சாவை வரவழைக்கக் கண்டும் – அவர்
  சாலை வழி முழுக்கக் காணோம்!

○ ஷரீஃப் அஹம்மது ஹாலித், கோவை.

? பட்டுக்கோட்டை பிரபாகரின் எழுத்து பற்றி?

! சமீபத்தில் அவர் கல்கியில் எழுதிய 'இந்தியனாய் இரு இந்தியாவை வாங்கு' படித்தீர்கள் அல்லவா? இயல்பாக நகைச் சுவையாகக் கொண்டு போய் முடிவில் மனத்தில் ஒரு சோகம் கப்பச் செய்கிறாரே, அபூர்வமாகவே கைவரப்பெறும் கலை அது.

○ வி. உமாராணி, புதுவை

? மனிதன் எப்போது முட்டாளாகிறான்?

! எச்சரிக்கைகளை லட்சியம் செய்யாதபோது. பயங்கரப் புயல் வீசப் போகிறது என்று

திரும்பத் திரும்ப முன்னறிவிப்புச் செய்தும் மக்கள் தங்கள் தங்கள் இல்லங்களைத் துறக்க விரும்பாமல் பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல மறுத்திருக்கிறார்கள்; நூற்றுக் கணக்கில் மடிந்திருக்கிறார்கள், குஜராத்திலே. இந்தச் சோகத்தைக் கண்டு பிரதமர் மனம் உருகிப் பேசியிருக்கிறார்.

○ க. குமரேசன், திருவாரூர்

? அரசியலில் - ஆன்மீகத்தில் - இலக்கியத்தில் தங்களைக் கவர்ந்தவர்கள் யார் யார்?

! அரசியலில் ஆன்மீகத்துக்கு முக்கியத்துவம் தந்து அவை பற்றி இலக்கியத் தரத்துடன் எழுதிய ராஜாஜி — ராஜாஜி ராஜாஜி!

○ மோக. இரத்தினசாமி, மோகனூர்

? 'இதோ சாராயக்கடை', 'சாராயக் கடைக்குச் செல்லும் வழி' என்றெல்லாம் பெரிதாகப் போர்டு எழுதி வைத்து அதற்குக் கீழே நுணுக்கி நுணுக்கி 'குடி குடியைக் கெடுக்கும்' என்று எழுதுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

! மதுவிலக்கைத் தளர்த்துவதாகக் கூறித் தண்ணீராகச் சாராயத்தை ஓடவிட்டதில் எவ்வளவு நியாயம் உள்ளதோ அவ்வளவு நியாயம் இதிலும் இருக்கிறது.

○ கி. சௌந்தரபாண்டியன், கிருஷ்ணகிரி

? தலைவலி வருவதற்கும் தலைக்கனம் வருவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

! தலைவலி ஒருவருக்கு வந்தால் அவரோடு போயிற்று. தலைக்கனம் ஒருவருக்கு வந்தால் சுற்றி இருப்பவர்க்கெல்லாம் தலைவலி!

○ ஆர். அரிகோபி, குடியாத்தம்

? இந்திய கஸ்டம்ஸ் அதிகாரிகள் எப்படி?

! கஷ்டம்ஸ் அதிகாரிகள் அல்ல: என் மகள் அண்மையில் இலங்கை, தாய்லந்து, மலேசியா, சிங்கப்பூர் சென்று திரும்பினாள். ''எங்கே, என்ன படிக்கிறாய்?'' என்று கேட்டாராம் கஸ்டம்ஸ் அதிகாரி. சொன்னதும், ''ஓ.கே. நன்றாய்ப் படி: குட் லக்'' என்று கூறி அனுப்பி விட்டாராம்.
கெட்டிக்காரர்கள்: இவ்வளவு நல்லதனமாக நடக்கும் இவர்களை கள்ளக்கடத்தல்காரர்கள் கண்ணில் விரல் கொடுத்து ஆட்டிவிடுகிறார்களே! பார்த்தவுடன் அவர்களை இனம் கண்டு கொள்கிறார்களே! அச்சமற்றவர்கள்: அண்மையில் வெளிநாடு சென்று திரும்பிய எம். எல். ஏ.க்களை வளைத்து ஏகமாய் வரி விதித்துக் கடமையாற்றினார்களே!

○ ஏ. சாகுல் அமீது, உடுமலைப்பேட்டை

? மனிதனின் ஆசைக்கு எல்லை உண்டா?

! கிடையாது என்பது தெளிவு. இல்லாது போனால் பல்லவன் பஸ் ஸ்பிரிங் உடையக் கூடாது என்றும், நடத்துனர் ஓவர் லோடு ஏற்றக் கூடாது என்றும், ஓட்டுனர் மஞ்சள் கோட்டைக் கடக்கக் கூடாது என்றும் இதனாலெல்லாம் விபத்துக்கள் நேர்ந்து, மக்களுக்கு உயிராபத்து நேரக் கூடாது என்றும் நாம், இன்னமும் ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்போமா?

○ திருமலை கோவிந்தன், மதுரை

? அச்சம், மடம், நாணம் வரை புரிகிறது. பயிர்ப்பு என்கிறார்களே அது எதைக் குறிக்கிறது?

! புதியன கண்ட இடத்துச் சற்றுப் பின் வாங்கும் இயல்பு.

○ கோ. த. ஐயப்பன், பணகுடி

? நம் நாட்டில் பணக்காரர்களே இல்லை யென்றால்...?

! புதிய தொழில்கள் தோன்றாது: இருக்கும் தொழில்கள் விரிவடையாது: வேலை இல்லாத் திண்டாட்டமும் வறுமையும் பெருகும். பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவதாகச் சொல்லும் அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுகின்றனர். கம்யூனிஸ ஆட்சியில் சாத்தியமாகலாம். ஆனால் அப்போது அரசாங்கமே மிகப் பெரிய பணக்காரனாகவும், முதலாளியாகவும் இருந்து மக்களை அடிமைப் படுத்தும்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
ஆர். சிவராஜ்,
40, குமக்குளத் தெரு,
லால்குடி - 621601

✖ விநோபா


✖ ஜே.பி.


✖ பிரஷ்னேவ்


✖ பட்டுக்கோட்டை பிரபாகர்





" பதினைந்து வருடங்கள்
ஆனாலும் எங்கள் மெத்தை
புத்தம் புதிது போல்
இருக்கிறது."

" எங்களுக்கு திருமணம் ஆகி 15
இனிய வருடங்கள் ஆகிவிட்டன.
எல்லா இன்ப துன்பங்களிலும்
இணைந்தே சென்றோம். ஆனாலும்
வெற்றியுடன் மீண்டு வந்திருக்கிறோம்.
உளம் கவர் பரிசுகளும் உண்டு—
இரண்டு இரட்டைவால் குழந்தைகள்.
அவர்கள் அடிக்கும் லூட்டியோ!
மெத்தை மீது எந்நேரமும் விளையாடிக்
கொண்டிருப்பார்கள்—குதித்தல்,
தள்ளி விடுதல், குத்துச்சண்டையிடு
தல். நல்ல காலம்! இந்த மெத்தை
நன்றாக உழைக்கிறது."
"ட்யூரோப்ளெக்ஸ்"

- ஆஸ்டிரியாவின் தொழில் நுட்பத்தின் புரட்சிகரமான படைப்பு.
- இம்மெத்தையில் ரப்பரால் மூடப்பட்ட கோடிக்கணக்கான தென்னை நார் ஸ்பிரிங்குகள் இருப்பதால் உங்கள் முதுகுக்கு நேரான பக்க பலம் கிடைக்கிறது.
- இதில் அமைந்துள்ள பல்லாயிரக் கணக்கான துவாரங்கள் உண்மையிலேயே சுவாசிப்பதால், நீங்கள் உறங்கும் போது உஷ்ண காற்று உள்ளேயே இருப்பதற்கு வாய்ப்பில்லை.
- இது ஈரம் உறிஞ்சாது; சுத்தம் செய்யலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக
விலையும் மலிவானது. ஆடம்பரம்
உண்டு, ஆயின் டாம்பீகமில்லை.

ASP-DCI-8213

1967லிருந்து உழைக்கின்ற ரப்பர்
கொண்ட தென்னை நார் மெத்தைகள்
தயாரிப்பவர்கள் அளிக்கும்.

**duroflex**
mattresses

ட்யூரோப்ளெக்ஸ் காயர் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்.
ரெஜிஸ்டர்ட் ஆபீஸ்: கலவ்காம் அல்லேப்பி 688001கேரளா போன்: 2187/3213
சேல்ஸ் ஆபீஸ்: 21 காமதேனு அன்னெக்ஸ் எம். ஜி. ரோடு, பெங்களூர்-560 008. போன்: 52172

ட்யூரோப்ளெக்ஸ் ஷோரூம்கள்

- சென்னை 235எ, அண்ணாசாலை, (மௌண்ட் ரோடு) அண்ணா ப்ளை ஓவர் அருகில் தேனாம்பேட்டை சென்னை-600 006. போன்: 444981
- கோயம்புத்தூர் 195E, க்ராஸ்கட் ரோடு, கோயம்புத்தூர் 640012
- பெங்களூர் 1/57, கே. எச். ரோடு (டபுள் ரோடு) பெங்களூர்-560 027

தமிழ்நாடு முழுவதும் ஸ்டாக்கிஸ்டுகள் உண்டு.




அட்டைப்படப் புதுக்கவிதை

# துயராக வேலனோ!

அப்பன் குருவே!
  அருந்தணிகை வேலவனே!
எப்பத் தணியுமெங்கள்
  இதயத்தின் தாகமெலாம்.
'அப்பப்பா' என்றே
  அலறித் துடிக்கவைத்த
வெப்பம் தணித்தாய்
  வேறென்றும் தணியவில்லை.

ஐப்பசியும் கார்த்திகையும்
  அடைமழைக் காலமென்று
எப்பவோ தெரிந்ததுதான்.
  இருந்தாலும் யார்விட்டார்?
கைப்பிடித்த வய்யின்வில்
  காணும்குரு வர்ஷினியை
முப்புரம் எரித்தஉங்கள்
  அப்பனுக்கே கேட்கவைத்தோம்!

உன்சித்தி கங்கை
  உலகத்தில் ஓடிவந்தாள்:
என்சித்தோ! மாயமோ?
  யாமறியோம் பராபரமே!
கஞ்சிக்குத் தடுமாறும்
  காலத்தும் வள்ளிகுற
வஞ்சிக்காய் உருமாறும்
  வண்ணமயில் வாகனனே!

மயிலேறி மலையேறி
  குறத்தியின் மனமேறி
அயராது குலவுகிற
  அழகா இளங்குமரா!
உயரத்தில் உன்னைவிட
  ஓயாது ஏறுதற்குத்
தயங்காத விலைவாசிச்
  சாத்தானே சூரனின்று!

ஓட்டலிலே பண்டமில்லை
  உலகறிய ஏறுகையில்
கேட்டிடஓர் நாதியில்லை
  இன்ந்தெழவும் மக்களில்லை!
பாட்டில்லில தணிகையிலே
  பண்டமில்லை தணியவில்லை

நாட்டினிலே சாராயக்
  கலப்படத்தை நாம்தணித்தோம்!

காவிரிக்கு நீர்கேட்டால்
  கைவிரித்தார் குண்டண்ணு!
'தாய்' விரித்த 'கை'கண்டும்
  சருக்கியது பெரியகுளம்.
'காய்'விட்டு முகம்திருப்பிக்
  கடுகடுத்து நீர்கையிலே
போய்விரித்த கோரிக்கை
  பொய்விரித்த கதையாச்சு!

நெஞ்சார விளக்கேற்றி
  நின்னைத் தொழுவோர்க்கு
மின்சாரம் கிடைக்கவழி
  விளக்கமுறக் கூறுயோ!
'பன்சாரம்' 'போல்பேசும்
  பழுஞ்சேர நாட்டார்முன்
கெஞ்சாது கெஞ்சிநிற்கும்
  கேவியைநீ நீராயோ.

மேலட்டை: தணிகை முருகன்
வண்ணப்படம் உதவி: நிர்வாக
அதிகாரி, திருத்தணி தேவஸ்தானம்.
புகைப்படம்: கோவி. சஞ்சீவி

குயிலன்



''ஏழு வயசுல நாங்க பூணூல் போட்டுருவோம். ஏன் தெரியுமா? காமம் மனசுல நுழைய முடியாத வயசு அதுதான். என்னு அதுக்கு முன்னால காயத்ரி நுழைஞ்சிருவாளே...''

**மா**ப்பிள்ளை ராமும், மகள் தேவியுமாகக் கொண்டாடும் தீபாவளி சந்தோஷத்தைத் தூர இருந்து பகிர்ந்து கொண்டிருந்தார் ஈஸ்வரன்.

அப்போதுதான் அவசரமாக அது நிகழ்ந்தது.

வேகமாக ஓடிவந்த அந்தச் சிறுவனின் மேல் மாப்பிள்ளை ராம் அவசரத்தில் எறிந்த லக்ஷ்மி வெடி சிதறிப் பரவ அலறிக்கொண்டு விழுந்தான். அந்தப் பையன்.

மார்பு படபடக்க ஓடிப்போய் அந்தச் சிறுவனைக் கவனித்தார் ஈஸ்வரன். ஆபத்து எதுவும் நல்ல வேளையாக இல்லை. சிறுவன் பயத்தில் அழுது கொண்டிருந்தான்.

''நீ காயத்ரியோட பிள்ளையில்லியா?''

ஆடிய தலை ஆமோதித்தது.

''இப்படியா கண்ணு மண்ணு தெரியாம ஓடி வர்றது? சரி, சரி உள்ளே வா.''

''இல்லய்யா, எங்கம்மா திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துட்டா. பக்கத்து வீட்டுக்காரங்க ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்க. உங்க கிட்டச் சொல்லத்தான்....'' அழத் தொடங்கினான். அந்த ஆறு வயதுச் சிறுவன்.

''காயத்ரியை ஆஸ்பத்திரிலேயா? தோ, வந்திட்டேன். தேவி, என்னோட அங்கவஸ்திரத்தை எடுத்துண்டு வாம்மா.சீக்கிரம்.''

''அப்பா...'' தேவி தயங்கினாள்.

''என்னம்மா?''

''நல்ல நாளும் அதுவுமா வீட்டிலே இல்லாம எதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போயிண்டு? காயத்ரிக்கு ஒண்ணும் இருக்காது. மருந்தை வாங்கிச் சாப்டுண்டு வரப் போறா. இதுக்கெல்லாம் நீங்க எதுக்கு...''

**''பிள்ளையாரின் காதுல பூ''**

திருச்சிற்றம்பலம் என்ற ஊரில் உள்ள பிள்ளையார் காதில் எல்லாரும் பூ வைக்கிறார்கள். பூ காதுக்குள்சென்று விட்டால் தாங்கள் நினைக்கும் காரியம் நடக்கும் என்றும், உள்ளே செல்லா விட்டால் நினைத்த காரியம் நடக்காது என்றும் இங்குள்ள மக்கள் நம்புகிறார்கள்.

—பிரகாஷ் முரளி



மகளின் பேச்சு ஆத்திரத்தை மூட்டினாலும், பதிலொன்றும் சொல்லாமல் வேகமாக நடக்கத் தொடங்கினார்.

அடுத்த அரை மணியில் பரபரப்பாக இயங்கிய ஈஸ்வரன் காயத்ரியை பரிசோதனை செய்யச் சகல ஏற்பாடுகளையும் செய்ததுடன் வசதியான படுக்கையையும் ஏற்பாடு செய்தார்.

''எனி திங் சீரியஸ் டாக்டர்?''

''ப்ளட் ரிப்போர்ட் வந்தப்புறம்தான் சொல்ல முடியும். ஒரு ஈ. ஸி. ஜி.யும் எடுத்துடுவோம். எனிஹௌ, நாளைக்குச் சாயங்காலம் நீங்க வாங்களேன்.''

போன வருஷம்தான் தேவிக்குத் திருமணம் நடந்தது. அதற்கும் நாலு வருஷங்களுக்கு முன்னால், யாரோ ஒருவரின் சிபாரிசால் அந்த வீட்டுக்கு வந்தவள் காயத்ரி. வரும்போது கையில் இரண்டு வயது செந்தில் வயிற்றில் ஒன்று.

''உன் புருஷன் எங்கேம்மா?''

''ரெண்டு மாசம் முன்னால கிட்னி பாழாப் போச்சுன்னு செத்துப் போயிட்டார்யா. அவரோட பணம் கொஞ்சம் இருந்திச்சு. வெறும் பணம் எத்தனை நாளைக்குத் தாங்கும்? ஏதாச்சும் ஒரு வேலை கிடைச்சாத்தான் இந்தப் பிள்ளைங்களைக் காப்பாத்த முடியுங்க. இங்க வீட்டு வேலைகளைச் செஞ்சுட்டு, சமைக்கவும் ஒரு ஆள் வேணும்னு கேள்விப்பட்டேங்க.''

ஆரம்பத்திலேயே அனுதாபத்தோடு நுழைந்த அந்த அபலைப் பெண்ணை ஆதரிப்பதென்று முடிவு செய்து விட்டார் ஈஸ்வரன்.

டாக்டரை மாலை சந்தித்தபோது டாக்டரின் ஆரம்ப மௌனம் அவரைப் பயப்படுத்தியது.

''நீங்க காயத்ரிக்கு என்ன வேணும்?''

''என்னோட வீட்ல வேலை செய்யறா அந்தப் பெண். தற்சமயம் நான்தான் கார்டியன்.''

''ஐ'ம் ஸாரி ஈஸ்வரன். அந்தப் பெண்ணுக்கு 'லங்க்' கான்சர் ரொம்ப அட்வான்ஸா இருக்கு. ஸீதிஸ் எக்ஸ்ரே.யூரினரி இன்ஃபெக்ஷன் வேறே இருக்கு, அந்தப் பெண்ணைக் காப்பாத்தறது இனிமே தெய்வத்தோட கையிலதான்.''

''டாக்டர்....'' — அதிர்ந்து போனார் ஈஸ்வரன். ''அந்தப் பெண்ணுக்கு யாருமே இல்லை டாக்டர்!''

''கண்டிப்பா இருந்தாகணுமே. ஏதாவது ஒரு ரோஷத்தில பிரிஞ்சு வந்திருக்கணும். இன்னும் கொஞ்ச நேரத்துல செக்கப்புக்கு நான் போவேன். அப்ப எங்கூட வந்து நீங்க விசாரியுங்க.''

படுக்கையில் காயத்ரியைப் பார்த்தபோது அவருக்கு வேதனையாக இருந்தது.

''முதலாளி எம் புள்ளைங்க....?''

''பயப்படாதே, காயத்ரி. என் வீட்லதான் இருக்காங்க. உனக்கு ஒண்ணுமில்லை. தைரியமா இரு.''

அவள் அதை நம்பவில்லை என்பதைத் துடிக்கும் உதடுகள் தெரிவித்தன.

''காயத்ரி, உனக்கு உறவுன்னு சொல்லிக்க யாரானும் இருப்பாளே. அவா

# "வேதமடி நீ எனக்கு!"



தேவிபாலா

ளோட விலாசம் தர முடியுமா?'' நேரடியாகக் கேட்டு விட்டார்.

''எனக்கு யாருமில்...'' நிமிர்ந்து ஈஸ்வரனைப் பார்த்தவளுக்குப் பொய் சொல்லத் தோன்றவில்லை. ''இருக்காங்க முதலாளி. எனக்கு இரண்டு தம்பிங்க இருக்காங்க. அவருக்கு ஒரு அண்ணனும். ஒரு தங்கச்சியும் இருக்காங்க.''

''இத்தனை பேர் இருந்துமா, நீ இல்லேன்னு சொன்னே?''

''நாங்க காதலிச்சுக் கட்டிக்கிட்டதால எல்லாரும் எங்களை விட்டு விலகிட்டாங்க. ரொம்ப வருஷமா தொடர்பே இல்லையே. இப்பப் போய் எப்படி முதலாளி?''

''ரத்த பந்தம் விடாதும்மா. கோவம் எத்தனை நாளைக்கு இருக்கும்? ம்? உனக்கு ஒண்ணுன்னு ஓடிவர மாட்டாங்களா?''

அட்ரஸ் கொடுத்தபோது அவளது அரை மனத்தின் தயக்கம் புரிந்தது. கூடவே கொஞ்சம் ஆவலும் இருப்பது தெரிந்தது.

ஈஸ்வரன் மளமளவென்று விவரங்களை எழுதி அவசரமாகத் தபாலில் சேர்த்தார்.

சரியாக நாலாம் நாள் முடிந்து, ஐந்தாம் நாள் தொடங்குவதற்குள் காயத்ரியின் ஒரு தம்பியும், அவளது கணவனின் தங்கையும் குடும்பத்தோடு ஈஸ்வரனின் வீட்டைத் தேடி வந்தார்கள். கணவனின் அண்ணன் நேராக ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டார்.

ஈஸ்வரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கூடவே சந்தோஷமாகவும் இருந்தது. குழந்தைகளுக்கு விடிந்துவிட்டது என்று தோன்றியது.

''என்ன ஈஸ்வரன்! சொல்லிட்டீங்களா?'' — டாக்டர்.

''இல்லே டாக்டர், நீங்களே சொல்லிடுங்க, எங்கிட்ட வேலை செய்யறதை மட்டும் தான் சொன்னேன்.''

டாக்டர் விஷயத்தைச் சொன்னார்.

''டாக்டர்!....'' கோரஸ் பாடின குரல்கள்.

''இருக்கிற இந்தப் பிஞ்சுகளைப் பராமரிக்கிறதுதான் காயத்ரிக்கு நாம செய்யற உதவி. அதுக்காகத்தான் உங்களை யெல்லாம் வரவழைக்க நான் சொன்னேன். ஓ.கே நீங்களெல்லாம் போகலாம்.''

வராந்தாவுக்கு வந்தபோது காயத்ரியின் தம்பியை ஓரமாகத் தள்ளிக் கொண்டு போனாள் அவன் மனைவி.

''என்னங்க இது?''

''நமக்குத்தான் பெண் குழந்தை இல்லையே! சின்னதை நாம எடுத்துப் போயிறலாமா?''

''உங்க தம்பிக்கு இவங்க லெட்டர் போட்டாங்களா இல்லையா? அவர் வரலே!''

''அதனாலே....?''

''என்னைக் கேளுங்க. உங்க மர மண்டைல எதுவுமே ஏறாதா? உங்க தம்பி புத்திசாலி. வந்தாத்தானே பொறுப்பு. வராம இருந்துட்டா?''

''அவன் எப்படியோ போகட்டும் தாரா! நான் சொன்னபடி பெண்ணை நாம வளர்க்கலாம்.''

''அப்புறம் அதுக்குக் கல்யாணம், கருமாதி எல்லா எழவும் நாமதான் எடுக்கணும் புரியுதா?''

இதை யெல்லாம் மறைந்து நின்று கேட்ட ஈஸ்வரனுக்கு சம்மட்டியால் அடித்ததுபோல இருந்தது. மறு பக்கம் போய்ப் பார்த்த போது இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

''என்னன்னு செய்யப் போறீங்க?'' காயத்ரியின் நாத்தனார் நீட்டி முழக்கினாள்.

''ஒரு புள்ளையை அவ தம்பி கொண்டு போகட்டும். ஒண்ணை நாம எடுத்துக்கலாம்''

''இதப் பாரண்ணே, வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டாப் பேசிடணும். என்னால முடியாது. எங்க வீட்டுக்காரர் ஏற்கனவே வீட்டை விட்டுப் போன அண்ணனைச் சாக்கா வச்சுக்கிட்டு சாடை மாடையா நம்ம குடும்பத்தைத் திட்டறார். அவனோட புள்ளையைக் கூட்டிப் போனா என்னையே வெட்டிப் போட்டு விடுவார். நான் வேணும்னா நூறோ இரு நூறோ தர்றேன். அவ்வளவுதான்.''

என்ன செய்யலாம் என்பது போல மனைவியைப் பார்த்தார் அண்ணன்.

''அதான் சொல்லிச்ச இல்ல. நாமளும் அதையே செஞ்சுரலாம்...'' அண்ணி தாராளமா முன்வந்தாள்.

அதற்கு மறு பேச்சில்லாமல் அந்த மணி தரும் வாயை மூடிக்கொள்ள, ஈஸ்வரன் தளர்ந்து போனார்.

வீட்டிலே நிலைகொள்ளவில்லை.

''ஏம்பா, பாதிச் சாப்பாட்டிலே எழுந்துட்டேள்?''

''மனசு சரியில்லம்மா. அந்தப் பாவிகள் எல்லாருமே கைகழுவத் தயாரா இருக்காம்மா!''

''ஐயோ பாவம்!''

''ஏம்மா தேவி! எனக்கு ஒண்ணு தோணறது. அந்தக் குழந்தைகளை நம்பாத்துல வச்சுண்டு வளர்த்தா என்னம்மா?''

''உங்களுக்குப் பைத்தியம் பிடிச்சுப்-போச்சாப்பா?''

''ஏம்மா?''

''ஏண்டா வாசற்படியிலேயே உட்கார்ந்து படிக்கிறே?''

''நான் எழுதப்போறது என்ட்ரன்ஸ் எக்ஸாம்.''

—ஜீரா



''எல்லாருக்கும் புகலிடம் கொடுக்க இது அநாதை விடுதி இல்லேப்பா. தெரிஞ்சுக் கோங்கோ.''

''தேவி நீயா இப்படிப் பேசறே?'' மகளின் முகத்தில் தெரிந்த குசும்பு அவரை எரிச்ச லூட்டியது.

அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் டாக்டரிடம் கொட்டித் தீர்த்தார் ஈஸ்வரன். உறவுக்காரர்கள் ஆளுக்கொரு பக்கம் பிய்த்துக் கொண்டு அன்று மாலையே ஓடிவிட்டார்கள்.

''எனக்குத் தெரியும் முதலாளி. இந்த வரவெல்லாம் வெறும் வேஷம்னு எனக்குத் தெரியும் முதலாளி. உண்மையைச் சொல்லுங்க முதலாளி. எனக்கு நான் குறிச்சிட்டாங்களா?''

''காயத்ரி....?''

''நான் சாகறதைப் பத்திக் கவலையில்லேங்க. இது எனக்கு ரெண்டாவது சாவு. அவர் போனப்பவே நான் செத்துட்டேன். ஆனா... என்னோட காதல் கல்யாணம் எம் புள்ளேங்களை அனாதை ஆக்கிடுச்சே. நான் செஞ்ச பாவம் அதுங்களைப் பாதிக்குதே. கஷ்டமோ, நஷ்டமோ இதுவரைக்கும் அதுங்களை ராசா ஊட்டுப் புள்ளேங்களா வளர்த்துட்டேன். அதுங்களை அனாதைங்கன்னு நினைச்சுப் பார்க்கவே என்னால முடியல முதலாளி...'' விசும்பத் தொடங்கினாள்.

பதில் பேசத் தெரியாமல் எழுந்து போனார் ஈஸ்வரன். வீட்டுக்குள் நுழைந்தபோது செந்தில் அழுது கொண்டிருந்தான். ஆங்காரத்தோடு தேவி நின்று கொண்டிருந்தாள்.

''ஏம்மா அவன் அழறான்?''

''இன்னும் விளக்கு வைக்கல. சாதம் போடச் சொல்றும்பா. என்னமோ குடுத்து வச்ச மாதிரி. ரெண்டு வச்சேன். அநாதைக்கு இத்தனை திமிரா?''

'சுள்' ளென்ற கோபம் அடிவயிற்றில் கிளம்பியது. ''அம்மா தாயே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். அவனைப் பெத்தவ இன்னிக்கோ, நாளைக்கோன்னு இருக்கா. இந்த நேரத்துல அனைக்காட்டியும் அடிக்காதேம்மா.''

படுக்கையில் போய் உட்கார்ந்தபோது தலையைச் சுற்றியது அவருக்கு. என்ன உலகம்டா இது?

அடுத்த நாள் காயத்ரியைச் சந்திக்கப் போனபோது சில கேள்விகளோடு உள்ளே நுழைந்தார் ஈஸ்வரன்.


''எந்த உறவும் இல்லாத இந்தக் குழந்தைகள் நம்ம வீட்ல எதுக்குன்னு என் மகள் கேக்கறா காயத்ரி.''

''முதலாளி நீங்க....''

''கொஞ்சம் இரு. முழுக்கச் சொல்லிடறேன். அதுக்கு முன்னால என்னைப் பத்தி நீ என்ன நெனக்கறே?''

''நீங்க தெய்வம் முதலாளி.''

''மனுஷங்க அதை ஒரு உறவா ட்ரீட் பண்ண மாட்டாங்க காயத்ரி. உன் குழந்தைகள் அனாதைகளா மாறும இருக்க என் வீட்ல இப்ப அவங்களுக்கு ஒரு உறவை உண்டாக்கணும்.''



முதலாளி: ''என்னப்பா, டிரைவர்! கார் ஓட்டும்போது இப்போ ஏதோ சத்தம் கேட்டதே என்?''

டிரைவர்: ''ஒண்ணுமில்லேங்க! டயர் மாத்தினேன்!''

முதலாளி: ''கார் வாங்கி ஒரு வாரம் கூட ஆகலே, அதற்குள் ஏம்பா டயரை மாத்தினே?''

— பிரகாஷ் முரளி

''......?''

''காயத்ரி! ஏழு வயசுல நாங்க பூணூல் போட்டுருவோம். ஏன் தெரியுமா? காமம் மனசுல நுழைய முடியாத வயது அதுதான். என்னு அதுக்கு முன்னால காயத்ரி நுழைஞ்சுடுவாளே!''

''......''

''என்ன, நான் பேசறது உனக்குப் புரியலே இல்லையா? காமம் இல்லாத மனசுலதான் காயத்ரிக்கு இடமுண்டு. என் மனசை விட்டுக் காமம் போயாச்சம்மா! இன்னும் புரியலியா? இனிமே காயத்ரி நீ என் மனசுல நுழைஞ்சுக்கலாம். அதுக்கு எந்தத் தடையும் இல்லே.''

''முதலாளி?''

''இந்த உறவு உன் குழந்தைகளைப் பாதுகாக்காது. நான் அப்பாவா மாறணும். அப்பத்தான் உரிமையோட அவா ரெண்டு பேரும் நுழைய முடியும்.''

''இது....இது... என்னங்க முதலாளி நீங்க?''


''இது உடம்புக்காக உண்டான உறவில்லம்மா. மனசுக்குண்டான உறவு. உன் உடம்புக்குப் புருஷன் இனிமே நெருப்புத்தான். பாக்கெட்டில் இருந்த பொட்டலத்தைப் பிரித்து அதைக் கையிலெடுத்தவர் சட்டென அவளது நெற்றியில் அழுத்தினார்.

அது குங்குமம்.

''இது போதும்மா. தாலிக்கு இப்பத் தேவையுமில்லை. அதைக் கட்டிக்க உனக்கு நேரமும் இல்லே. இதைத் தவிர உன் குழந்தைகளை அனாதைங்கிற பட்டத்துல இருந்து காப்பாத்த எனக்கு வழி தெரியலம்மா.''

விழி கொள்ளாமல் அந்த முதியவரை நிரப்பிக் கொண்ட காயத்ரி, காமத்தை விரட்டிய அந்தப் புனிதரைத் தரிசித்த காயத்ரி, சிரித்துக் கொண்டே அருகில் நின்ற அந்தத் தெய்வத்தைத் தொழுத காயத்ரி... மெல்ல மெல்ல அவருக்குள்ளே ஐக்கியமாகிக் கொண்டிருக்கிறாள்!

# உள்ளும் புறமும் உயர்சிறப்பு




★ தனிச்சிறந்த ஃபாக்டரி ஸீல்

★ நீடித்த உழைப்பு

★ கசிவில்லாதது

# பிலிப்ஸ் பாட்டரிகள்

டார்ச்சு, டிரான்சிஸ்டர்களுக்கு உங்கள் முதல் விருப்பம்; உலக தர எலக்டிரானிக் பொருள்களைத் தயாரிப்போர் அளிக்கிறார்கள்.

பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

PHILIPS

## பிலிப்ஸ்

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி.

HTB-PEL-7910



# ஒரு கவர்ச்சிக் கனவு

**திக்விஜயன்**

**நீ**ச்சல் உடையில் சிலுக்கு ஸ்மிதா தரும் பலகாரம் பண்ணுவது எப்படி என்ற 'கவர்ச்சி'யான கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தார் வாசகர்.

● ● ●

**சி**லுக்கு கால் மேல் கால் போட்டுக் கொண்டு கவர்ச்சியுடன் காணப்படுகிறார். சினிமாத் தயாரிப்பாளர் வருகிறார்.

''வணக்கம். நம்ம அடுத்த தயாரிப்புக்கு உங்க கால்ஷீட் வாங்கலாம்னு வந்தேனுங்க''

''கால்ஷீட் வேணும்னு 85லே வாங்க. ரொம்ப பிஸி....''

''கால்ஷீட் இல்லாட்டிப் போவுது. உங்க 'கால்' கிடைச்சாப்போதும். ரெண்டு ஷாட்டிலே வந்தீங்கன்னுத்தான் படம் ஓடும். இல்லாட்டி டப்பாவிலே குந்திக்கும். என்ன ரேட்டு வேணும்னாலும்....''

''சரி, காரியதரிசி இவரைக் கவனியுங்க.''

''நன்றிங்க. நீங்க கலைக்குச் செய்யற சேவைக்கு பெரிய பானர் போட்டு, போஸ்டர் ஒட்டி பாராட்டு விழா நடத்தனுங்க. இன்றைய சினிமா உலகம் உங்களை நம்பித் தான் ஓடுது....''

''உடலை நம்பின்னு சொல்லுங்க. திரு விளாவும் வேண்டாம்; ஒரு விளாவும் வேண்டாம். உங்களுக்கு வேண்டியது செக்ஸ்; எனக்குத் தேவை 'செக்'ஸ்''

● ● ●

''நமஸ்காரம். நான் வாணி பத்திரிகை உதவி ஆசிரியர்.''

''ஒரு குரல், ரண்டு பேச்சு. ஆபாசம்கவர்ச்சிறுயோன்னு தலையங்கம் எழுதுவீங்க. ஒரு பக்கம் என்னோட கவர்ச்சிப் படம்தேடி எடுத்துப்போடுவீங்க... ஏதாவது யாத்திரை எழுதுங்க''

''அப்படிச் சொல்லக் கூடாது. எல்லா மலைநாட்டுக்கும் எங்கள் ஆசிரியர் வலியச் சென்று ஆதிவாசிகளைப் படத்தோடு போட்டாச்சு.''

''சரி. என்ன எழுதப்போறீங்க என்னைப் பத்தி?''

''அதுதான் புரியலைங்க; ஒவ்வொருத்தன் போட்டி போட்டுக்கிட்டு எழுதிட்டாங்க. சிலுக்கு தரும் மோகாஸனம். தெலுங்கு போதனை. தையற் கலை, சமையல் கலைன்னு— என்ன சப்ஜெக்ட் விட்டு வச்சிருக்கானுங்க. புடவை கட்டும் வழி — சிலுக்கு தரும் பாடம்னு ஒரு ஸீரிஸ். நம்ம பத்திரிகை எக்ஸ்போர்ட் இஷ்யூவிலே பாப்புலரா இருக்கும்.....''

''அது நம்ம இமேஜுக்கு ஒத்து வராதுங்க. தவிர எனக்குச் சேலை கட்டிப் பழக்கம் இல்லை.....''

''நீங்க நீச்சல் ஸூட்டிலே நில்லுங்க. ஒரு மாடலிங் பெண்ணு புடவை கட்டிக் கிறதை மேற்பார்வை.....''

''அது ஒத்து வராதுங்க...''

''நம்ம புஷ்பா தங்கதுரை ஒரு கிரேக்க காலத்து தொடர்கதை ஸெக்ஸியா எழுதிருக்காரு. கிரேக்க ராணியா

வாரா வாரம் உங்க நடிப்புக் காட்சி புகைப் படம் பிரசுரிக்கலாம். ஸர்குலேஷன் குப் புன்னு ஏறிடும்....''

• • •

"**நா**ன் திருப்பத்தூர் நிட்டிங் கம்பெனி முதலாளி. நம்ம பனியனுக்கு ஏஷியட் காண்ட்ராக்ட் கிடைச்சிருக்கு... விளம்பரபோஸ் நீங்க தர....''

''என்னங்க அதிசயம்; சிலுக்கு பிரா விளம்பரம் கொடுத்தாப் பொருத்தம். ஆம்பிளே பனியனுக்குத் தோதுப்படாது. எல்லாரும் 'அப்பு'வை வச்சிக்கிட்டுத்தானே ஏஷியாட் விளம்பரம் செய்யறுங்க. யானைக்குட்டிக்குப் பனியன் போட்டு விளம்பரம் செய்யுங்க...''

''யானை போரடிச்சிடுங்க. விளம்பரம்னு நடிகர் நடிகை வேணுங்க. ஐயோடக்ஸுக்கு மேஜர் சுந்தரராஜனும்; ஐ. ஓ. பி. பாங்குக்குப் பிரதாப் போத்தனும் போஸ் தரலிங்களா? எங்க பனியன் போட்ட ஸாண்டோவை நீங்க செக்ஸி கண்ணோட பார்க்கறீங்க... அப்படி ஒரு விஷுவல்....''

• • •

## ''கறுப்பு அழிய வழி உண்டா?''

சென்னை பேசின் பிரிட்ஜ் அருகிலும் சுற்று வட்டாரத்திலும் குடியிருப்பவர்கள் தங்கள் வீட்டைப் பெருக்கிய படியே இருக்கிறார்கள். வீட்டுக்கு வெள்ளை அடிப்பது கிடையாது. வெள்ளைத் துணிமணிகள் அணியப் பயப்படுகிறார்கள். காரணம் அங்கே அளவுக்கு அதிகமாக வரும் கரிப் புகையே. இதைத் தவிர்க்கப் பலவித முயற்சிகள் எடுத்தும் பலிக்கவில்லையாம். ''காற்று, தண்ணீர் இவற்றுடன் கரிப் புகை கலந்து பல வியாதிகளையும் உண்டு பண்ணுகிறது'' என்று அந்த ஏரியாவாசி ஒருவர் குறைப்பட்டுக் கொண்டார்.

—ஜீரா



"**எ**ன்ன சிலுக்கு சுகமா?''

''அடடே தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவி மரகதம் சந்திரசேகரா... வாங்கம்மா என்ன திடீர் விஜயம்....?''

''எல்லாம் பெரியகுளத்து அலைதான். எங்கள் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். நீ அதில் சேர வேண்டும்.''

''ஐயையோ அரசியல் நாடகம் நம்ப நாட்டியத்துக்கு ஒத்து வராதுங்க. சினிமா வாழ்வு இன்னும் இரண்டு வருஷமோ, மூணு வருஷமோ பேரும் புகழும் இருக்கும்போதே சம்பாரிச்சிடணும்.''

''என்ன சிலுக்கு மறுக்காதே. தமிழகத்திலே எங்க கட்சி படுத்துக் கிடக்கு. அதுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட்...''

''அதுக்குத்தான் தலைவரை நீக்கி உங்களைத் தலைவியா நியமிச்சிருக்காங்களே.''

''அது போதாது. கவர்ச்சி வேணும்.''

''அரசியலிலும் சினிமா பார்முலாவா?''

''இந்த பாரு. தமிழ் நாட்டிலே எம்.ஜி.ஆரு. ஆந்திராவிலே என். டி. ராமராவ். கேரளாவிலே பிரேம் நஸீர் கூட யோசிச்சுக்கிட்டு இருக்காரு. கன்னடத்து ராஜ்குமாரும் மொழி அரசியலில்....''

''உங்க கட்சிக்கு சிவாஜி அண்ணன் இருக்காரே?''

''அங்கேயும் புரட்சித் தலைவர் இருக்காரு. இருந்தாலும் ஜெயலலிதாவைச் சேர்த்துக்கிட்டாங்க. எங்க கட்சிக்கு சிலுக்கு வந்தாத்தான் 'கிளுக்கு' இருக்கும்.''

''எனக்கு அரசியல் ஞானம், பேச்சுத் திறன் ஒண்ணும்....''

''எல்லாம் வேண்டாம். போஸ்டரிலே உன்னோட உருவத்தைப் போட்டா கூட்டம் வந்திரும்.''

''பார்க்கலாமுங்க.''

''இந்தக் காமராஜ் வேலை வேண்டாம். முடிவு சொல்லுங்க.''

• • •

**சி**னிமா, இலக்கிய, அரசியல், சமூகப் பத்திரிகைச் சங்கங்கள் பிரதிநிதிகள் சபை.

''சிலுக்கு தேவதை யுகம் இது. ஒவ்வொரு கலைத் துறையும் அவங்க கவர்ச்சியிலேயே வாழுது. அவங்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்ற ஆலோசனைக் கூட்டம் இது. இந்தக் கால கட்டத்தில் சிலுக்கு வாலிபர்களுக்கும் வயோதிகர்களுக்கும் ஒரு கவர்ச்சிக் கன்னி. அவர்களுக்கு விழா எடுப்பதில் மகிழ்கிறோம்.'' — மூத்த பத்திரிகை ஆசிரியர் பொன் மொழி.

''பாராட்டு நடத்துங்க. பொன்னாடை 'போர்த்தற' விஷயம் அந்தம்மாவுக்குப் பொருந்தாது. 'எடுக்கிற' ஐடியாவாப் பாருங்க....''

• • •

"**இ**து என்ன பகல் தூக்கம்'' எனக் கணவரை 'உலுக்கி' விட்டாள் மனைவி. கவர்ச்சிக் கனவு கலைந்தது.

# வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்




பாமோலிவ், எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ, உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

**குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது-உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது**

GK6E.PS.7 TM

# ரூபாய்க்கு மூணு கொலை

[பாங்கில் வேறு யாரோ செய்த தவறுக்கும் பழி வாங்கப்படுகிறான் அப்பு. மானேஜர் அருந்ததி, அப்பாவி அப்பு மீது சுமத்திய குற்றச்சாட்டை மெய்யென்று நம்பிய 'சேர்மன்', அப்புவுக்கு அறிவுரை வழங்குகிறார்.]

## வியட்நாம் வீடு சுந்தரம்



சேர்மன்: (அருந்ததிசொன்னதைநிஜமென நம்பி) மிஸ்டர் அப்பு... நாடகத்தை கலாட்டாப் பண்ணிக் கெடுத்த மாதிரி பாங்க் பேரையும் கெடுத்திடாதீங்க. பாங்க்ல எல்லாருக்கும் மேஜை நாற்காலி போட்டு உட்கார வைச்சிட்டு, காஷியரை மட்டும் ஏன் தெரியுமா கம்பிக் கூண்டுக்குள்ள வெச்சிருக்காங்க? நம்பி ஒப்படைச்ச பணத்தை சரியா எண்ணலேன்னு, கம்பி எண்ண வேண்டி வரும்கிற உண்மையைச் சொல்லாமச் சொல்றதுக்காகத்தான்... ஒழுங்கா இருக்கிறதுன்னு இருங்க இல்லே.. பாந்திப்பூர் காட்டில புதுசா ஆரம்பிக்கப் போற பிராஞ்சுக்கு டிரான்ஸ்பர் பண்ணிடுவேன். அப்புறம் அங்க சிறுத்தப்புலி தான் செக்கு மாத்த வரும். ஜாக்கிரதை சரி.....ம்... (அசடு வழிய அருந்ததியிடம்) மேடம்... சாயந்திரம் பார்ட்டி இருக்கே. மறந்திட்டிங்களா? போலாமா?

அரு: இதோ வந்திட்டேன். (போகின்றனர்.)

அப்பு: பாத்தியா ரஞ்சித்? அது என்ன? என் தலையிலமட்டும் ஏமாளின்னு போர்டு எழுதி மாட்டியிருக்கா? ஏன் இந்தம்மா என்னே வாசல் மிதியடி மாதிரி போட்டுக் காலாலே தேய்க்கறாங்க?

ரஞ்: அப்பு! ஆபீஸ்னு நாலுந்தான் இருக்கும் கண்டுக்காதே! (போகிறான்)

பியூன்: அப்புத் தம்பி, குனிஞ்சுக்கிட்டே இருந்தா குட்டிக்கிட்டுத்தான் இருப்பாங்க. ஒரு காலத்தில நானும் உன்னே மாதிரிதான் குனிஞ்சுக்கிட்டே இருந்தேன் தெரியுமா?

அப்பு: தெரியுது. பின் தலையில கோலி விளையாடற அளவுக்குச் சொட்டை விழுந்திருக்கே.

பியூன்: இந்தம்மா என்ன இருந்தாலும் டேஞ்சர். நான் எத்தினி சீனியர்; சிஞ்சியரா வேலே செய்றவன், எனக்கே ஒரே நாளையில ரெண்டு வார்னிங் மெமோ கொடுத்தாங்க!

அப்பு: ஒரே நாளையில ரெண்டு மெமோவா? எதுக்கு?

பியூன்: ஒண்ணுமில்லேப்பா. ஒருவாட்டி நைட் ஷோ பார்த்திட்டு வந்து காலேயில ஸ்டூல்ல உக்காந்திட்டே தூங்கிட்டேன். நான் தூங்கறதை அந்தம்மா பார்த்திட்டாங்க. அதுக்கு ஒரு மெமோ.

அப்பு: ரெண்டாவது மெமோ?

பியூ: அவங்க தூங்கறத நான் பாத்திட்டேன். அதுக்கும் எனக்கு ஒரு மெமோ!

(சிரித்தபடியே செல்கிறார்கள்.)

※ "I am Alfred, the Jekyll and Hyde version of Appu!"

## காட்சி 4

[அப்பு வீடு. தன் கணவனை மானேஜர் அருந்ததி கேவலப்படுத்தியதற்காக அப்புவின் நண்பர் ரஞ்சித்திடம் குமுறுகிறாள் அப்புவின் மனைவி சாவித்திரி.]

சாவித்திரி: அவ யாரு, என் புருஷனைக் கன்னாப் பின்னான்னு கேவலமாப் பேச? அவ யாருன்னு கேக்கறேன். மனைவியைத் தவிர யார் முகத்தையும் ஏறெடுத்தும் பார்க்காதவர். நாடகத்தில்கூட தப்பா நடக்கவோ, நடிக்கவோ முடியாத நல்லவர். உத்தமர். அவரைக் கேவலமாப் பேசின அந்த அருந்ததியை....

ரஞ்சித்: மிடைல் அப்பு. எதுக்கு வீணா உணர்ச்சி வசப்பட்டுப் பேசறீங்க? எங்க மானேஜரைப் பத்தித்தான் உங்களுக்குத் தெரியுமே? இன்னும் எத்தனை நாள் அவங்க எங்க பிராஞ்சில இருக்கப்-போறாங்க? எப்பிடியும் மாத்தலாகிப் போகப் போறாங்க. அதுக்குள்ள நாம ஏன் வீணா....

சாவி: இதப் பாருங்க! என் புருஷனைப்பத்தி யாராவது எதாவது சொன்னா அதை என்னால தாங்கிக்க முடியாது.

ரஞ்: அப்புவைப் பத்திச் சொன்னா உங்களால மட்டும் இல்லீங்க. அந்த ஆண்டவனாலகூடப் பொறுக்க முடியாது.

(இதை யெல்லாம் கேட்டபடி வருகிறார் வீட்டுக்காரர் வக்கீல் வராகசாமி.)

வரா: இதபாரு சாவித்திரி! நீபாட்டுக்கு வாயில வந்தபடி பேசாத.— அவ மானேஜர். அவ காதில விழுந்ததுன்னா She will transfer him to waterless forest.

ரஞ்: அதென்ன சார் waterless forest?

வரா: தண்ணியில்லாக் காட்டுக்கு மாத்திடுவான்றேன்.

ரஞ்: அப்ப மெட்ராஸ்லயேதான் இருப்பார்னு சொல்லுங்க.

சாவி (வராகசாமியிடம்): இத பாருங்க! வேலைதான போகும்? போனாப் போகட்டுமே. மானம் போறதை விட வேலை போறது எவ்வளவோ மேல். பிச்சை எடுத்தாவது பிழைப்போம் தெரியுதா?

(இதைக்கேட்டபடி வாசல் கதவருகே வந்து நிற்கிறான் அப்பு.)

அப்பு: அம்மா தாயே... ஒரு நாலணா போடும்மா...

சாவி (கவனிக்காமல் வெறுப்புடன்): ஒண்ணுமில்லே போய்யா....

(உள்ளே வருகிறான் அப்பு)

சாவி: நீங்களா?

அப்பு: நான் பிச்சை கேட்டா நீயே போடமாட்டேங்கறே. நானும் நீயும் சேர்ந்து பிச்சை கேட்டா யாரு போடுவாங்க...ம் விடு. ஆபீஸ்ல என்னைக் கேலி பண்றது எல்லாருக்கும் பொழுது போக்காப் போச்சு. எனக்கும் கேட்டுக் கேட்டு மரத்துப் போச்சு.

சாவி: இத பாருங்க. நீங்க இப்பிடி பொறுமைசாலியா இருக்கறதாலதான் கண்ட கண்ட ராட்சஸியெல்லாம் உங்களைக் கண்டபடி திட்றா.

ரஞ்: ஆமாம் அப்பு. நானும் உங்கிட்டச் சொல்லணும்னு இருந்தேன். நிதானம் அளவுக்கு மீறினா அதுக்குப் பேர் மந்தம்.

சாவி: நாளைக்கு நானே உங்க ஆபீஸுக்கு வந்து நாலு பேர் முன்னாடி அந்த அருந்ததியை என்ன கேள்வி கேக்கறேன் பாருங்க!

(மேடையில் அப்புவுக்கு மட்டும் Spot light)

அப்பு (தனக்குத் தானே): எனக்காக இவங்கள்ளாம் ஏன் இப்பிடி அங்கலாய்க்கறாங்க? அப்புங்கிற இந்த சாதுவுக்கு மேலே சர்வ வல்லமையுள்ள ஒருத்தன் இருக்கானே, அவன் கேக்க வேண்டியவங்களைக் கேக்க வேண்டிய நேரத்தில கேக்க வேண்டிய விதத்தில் கேட்பான்.

## காட்சி 5

(ஊரை விட்டுத் தள்ளி இருக்கும் தனிமையான இடம். கதவைத் திறந்தபடி ஒரு உருவம் நுழைகிறது. கருப்பு, உடை, தலையில் தொப்பி, கழுத்தில்

✠ ''மிஸ்டர் அப்பு! பாங்கிலே காஷியரை மட்டும் எதுக்காக கம்பிக் கூண்டுக்குள்ளே உட்கார வைக்கிறாங்க தெரியுமா?''



எலும்புக் கூடு வடிவில் பதக்கச் செயின். கறுப்புக் கண்ணாடி. இவன்தான் ஆல்ஃபிரெட்.)

ஆல்ஃபிரெட்: கேக்க வேண்டிய நேரம் வந்தாச்சு. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும். ஆனால் இந்த ஆல்ஃபிரெட் என்றும் கொல்வான். I am Alfred, the Jekyll and Hyde version of அப்பு!

(ஒரு ஸ்விட்சைப் போடுகிறான். திரையில் அப்புவின் வண்ண ஸ்லைடு தெரிகிறது.)

ஆல் (அதைப் பார்த்து): அப்பு... வெல்கம் அப்பு.... உனக்கொரு விஷயம் தெரியுமா? ஒவ்வொரு மனுஷனுக்குள்ளேயும் ஒரு மிருகம் இருக்குன்னு சொல்வாங்க. மனுஷனை மதிச்சா அது மகாத்மாவா மாறும். மிதிச்சா மிருகமாத்தான் மாறும். அப்பிடி உனக்குள்ள இருந்துக்கிட்டு அடிக்கடி மிதிக்கப்பட்டதாலே உருவானவன்தான் இந்த ஆல்ஃபிரெட். அப்புவோட குழுறல்ல பிறந்தவன்தான் ஆல்ஃபிரெட்... அப்பு உன்னை எல்லாரும் முட்டாள் மடையன், மூளை இல்லாதவன்னுதான சொல்வாங்க. உன்னுடைய கூர்மையான மூளை எடுத்த அவதாரம்தான் நான்! காலையில ஒன்பது மணியிலேந்து அஞ்சு மணி வரைக்கும் நீ அப்பாவி பாங்க் கிளார்க் அப்புவாவே இருந்திடு. ஆனா ஆறு மணிக்கு நீ செய்யற பார்ட் டைம் பிஸினஸ் இருக்கே அதுதான் இந்த Master Criminal Brain ஆல்ஃபிரெட். உனக்கொரு சந்தோஷ சமாச்சாரம். உன்னை எப்பப் பார்த்தாலும் மட்டந்தட்டிக்கிட்டேயிருப்பாளே பாங்க் மானேஜர் அருந்ததி. அவளை ஒரு சின்ன சிக்கல்ல மாட்டி விட்டிருக்கேன். பேப்பர்ல செய்தி வந்திருக்கு. படிக்கிறேன். கேக்கறியா?

உலகத் திரைப் படப் போட்டிகளில் பங்கேற்கத்தக்க மலையாளப்படங்களைத் தயாரிக்கும் அரவிந்தன் ஒரு அரசு ஊழியர். கேரள அரசின் ரப்பர் போர்டில் இன்ஸ்பெக்டராகப் பணிபுரிந்து வருகிறார். விரைவில் ரிடையராகப் போகிறார். ஆதாரம்: சண்டே மிட்டே தகவல்: ''சேலம் சக்திக்கனல்''



(அப்பு ஆவலுடன் கேட்கும் வண்ண ஸ்லைடு திரையில் தெரிகிறது.)

ஆல் (நாளிதழைப் படிக்கிறான்): கருணா பாங்கில் மோசடி. பல லட்ச ரூபாய் கணக்கில் வராமல் செய்யப்பட்ட விவரம் ஆடிட்டிங்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாங்க் மானேஜர் அருந்ததியிடம் போலீஸ் விசாரணை.

(ஸ்லைடு மாறுகிறது. அப்புவின் மகிழ்ச்சி பாவம் தெரிகிறது.)

ஆல்: ஆர் யூ ஹாப்பி? ஆல்ஃபிரெட் மனசு வைச்சா எதையும் செய்வான். வெளியில அப்புவா அடி வாங்குவான். ஆனா தனிமையில ஆல்ஃபிரெட்டா பழி வாங்குவான். (சிரிக்கிறான்). இந்த உலகத்தில, வாழ்ந்தவன் வாழ்ந்துக்கிட்டேயிருந்து, தாழ்ந்தவன் தாழ்ந்துக்கிட்டே போனால் ஆண்டவன் தன் கடமையை சரியாச் செய்யவில்லேன்னுதான் அர்த்தம். நமக்கு முதுகில அடிவிழும்போதுதான் முதுகும் முதுகெலும்புன்னு ஒண்ணும் இருக்கிறது ஞாபகத்துக்கு வருது. திருப்பி அடிக்க ஒரு கம்பு தேவைங்கிறதும் புரியுது. அப்பு! Let me be your stick. Stick to me! ஆனா ஒரு முக்கியமான விஷயம். அப்புவும் ஆல்ஃபிரெட்டும் ஒரே ஆள்தான்னு தவறிப் போய்க்கூட வெளியே சொல்லிடாதே.

(ஸ்லைடை அணைக்கிறான். ''சம்பத்'' என அழைக்க ஆல்ஃபிரெட்டின் உதவியாளன் வருகிறான்.)

சம்பத்: Yes chief?

ஆல்: என்ன சம்பத்? இந்த ஆல்ஃபிரெட் மூளைக்குத் தீனி போடற மாதிரி இன்னிக்கு ஏதாவது வேலை இருக்கா?

சம்: ஒரு முக்கியமான விஷயம்.

ஆல்: என்ன?

சம்: கருணா பாங்க்ல நடந்த ஊழலைப் பத்தி நீங்க கேள்விப்பட்டிருப்பீங்கன்னு நினைக்கிறேன்.

ஆல்: இப்பத்தான் பேப்பர்ல பார்த்தேன்.

சம்: அந்த ஊழல்ல மாட்டிக்கிட்ட பாங்க் மானேஜர் அருந்ததி தன்னைக்காப்பாத்தச் சொல்லி ரொம்பக் கெஞ்சிக் கதறினாங்க. பாவமாயிருந்தது. கூட்டிட்டு வந்திருக்கேன். உள்ள வரச் சொல்லவாமா?

ஆல்: உனக்கந்தம்மாவை எப்படித் தெரியும்?

சம்: என்ன அப்பிடிக் கேக்கறீங்க? வாழ்க்கையில வழுக்கி விழுந்தவங்களுக்கும், வழி தவறி வந்தவங்களுக்கும் உறுதுணையா இருக்கிறதுதானே இந்த சம்பத்தோட சேவை! நேர் வழியில போறவங்களுக்கு சம்பத்தும் ஆல்ஃபிரெட்டும் தேவையேயில்லையே. பாதை மாறி வரவங்கதானே நம்மைச் சந்திக்க முடியும்?

ஆல்: நீ சொல்றதைப் பார்த்தா இங்க வந்த பாதை அந்தம்மாவுக்குத் தெரியும் போல இருக்கே?

சம்: இல்லே, வழக்கம்போல வி.ஐ.பி மரியாதை குடுத்து, கண்ணைக் கட்டி காதைப் பொத்தித்தான் அழைச்சு வந்திருக்கேன்.

(தொடரும்)

அவனியில் அதிநவீன பேரணியைக் கொண்ட விமானப் பவனி இதுவே.
..ஆயினும் பயணத்தின் கற்பனைத்தாகம் இன்னும் தணியவில்லை.




5S82

# ஸ்ரீ விசாலம் ஃபைனான்சியர்ஸ்

(உரிமையாளர்: RM. அருணாசலம்)

மத்திய அலுவலகம்: 161, அண்ணா சாலை, சென்னை-600 002.

(போன்: 89244 & 87886)

பிக்ஸட் டெப்பாஸிட் தொகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| தொகை | வட்டி விகிதம் 1 வருடம் | 2 வருடம் |
|---|---|---|
| ரூ.300 முதல் ரூ. 1000 வரை | 12% | 12½% |
| ரூ.1000க்கு மேல் ரூ. 5000 வரை | 12½% | 13% |
| ரூ.5000க்கு மேல் | 13% | 13½% |

# ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட்

SREE VISALAM CHIT FUND LTD. ESTD 1947 REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம், திருநெல்வேலி 627 006
மத்திய அலுவலகம் மற்றும் முதலீடு கேந்திரம்
ஸ்ரீ விசாலம் பில்டிங்ஸ்
161, அண்ணா சாலை, சென்னை-600 002.

நிதி நிலைமை 31.3.82ல் உள்ளபடி

| | |
|---|---|
| அங்கீகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 5.00 லட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வ் நிதியும் | ரூ. 4.72 லட்சம் |
| சொத்துக்கள் | ரூ. 9.54 கோடிக்கும் மேல் |
| சீட்டு நடைமுறை நிதி | ரூ. 19.09 கோடிக்கும் மேல் |

டைரக்டர்கள்:
Dr. L.RM. அருணாசலம் BE. ME. (PH) M.I.E.
(வெளி டைரக்டர்)
S.PR. ராமஸ்வாமி M.A.
ஆலோசகர்:
VE.AL. சின்ன அழகப்பன்

"தொழில் விபரம்"

எமது 70 கிளைகளின் மூலமாகப் பல்வேறு மதிப்புள்ள மாதம் ஒரு முறை, மும்முறை, தினசரி சீட்டுக்களை நடத்தி வருகிறோம். மேலும் ரூ. 25,000 - முதல் ரூ. 1,50,000 - வரை உயர் மதிப்புள்ள சீட்டுகளைப் பிராந்திய குருப்புகளாகச் சென்னை-மத்திய அலுவலகம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, பெங்களூர், காரைக்குடி கிளைகளில் மட்டும் நடத்தி வருகிறோம்.

Dr. L.RM. அருணாசலம்
BE. ME. (PH) M.I.E.
பொதுஜனத் தொடர்பு அதிகாரி

AR. பழனியப்பன்
நிர்வாக அதிகாரி




RM. அருணாசலம்
மேனஜிங் டைரக்டர்

LR. SWAMY PP.

# டி.வி.எஸ்-50 மொபெட் பரிசுத்திட்டம்

வாசகர்கள் அனுப்பிய தபால்கள் குவிந்துள்ளன. பரிசீலனை தொடர்கிறது.

இதற்கிடையில், திருமதி சரோஜினி வரதப்பனும், திரு பகீரதனும் தங்களுக்குப் பிடித்ததெனத் தேர்ந்தெடுத்த பத்திகளையும் அதற்கு அவர்கள் கூறும் காரணங்களையும் பார்ப்போம்:

## மறக்கக் கற்றதை மறக்க முடியுமா?

“அல்லிக் குளத்தருகே'' எனத்தொடங்கும் பத்தியை நான் மிக முக்கியமானதாகக் கருதுகிறேன். முருகக் கடவுள் மீது கிளி தூது முழுவதுமே இலக்கியத் தரம் வாய்ந்தது தான் என்றாலும் இப்பத்தியில் 'அல்லிக் குளத்தருகே' என்கிறபோது நமக்குக்கிராமச் சூழ்நிலையில் இயற்கை வனப்பைப் பாரதியார் கோடிட்டுக் காட்டுகிறார். இயற்கை அழகு நிறைந்த அல்லிக் குளம் முருகப்பெருமானின் அழகையும் நமக்கு நினைவூட்டுகிறது. அல்லிக் குளத்தின் அழகு அந்திப்பொழுதில் பன்மடங்காகின்றது. இதுவும் போதாதென்று அங்கு முல்லைச்செடி பூத்துக் குலுங்குகின்றது. அத்தகைய அழகான முல்லைச் செடியதன்பாற் அந்த முருகப் பெருமான் செய்த வினை எவ்வாறு மறக்க முடியும்? இயற்கை வனப்பு கொழிக்கும் அந்திப்பொழுதில் செய்த வினையை மறக்க முருகன் எவ்வாறு கற்றான் என்று கிளியின் மூலம் தூது விடுவது எவ்வளவு பொருத்தம்.

அல்லிக் குளத்தருகே — ஒரு நாள்
அந்திப் பொழுதினிலே — அங்கோர்
முல்லைச் செடி யதன்பாற் — செய்த வினை
முற்று மறந்திடக் கற்ற தென்னே யென்று
(சொல்ல)

இதில் முருகப் பெருமானின் மீதுள்ள பக்தி, காதல் விளங்குவதுடன் அதைக் கிளியின் மூலமாகத் தூது விடுப்பது எவ்வளவு எளிமையாக நாலே வரிகளில் நம் மனதைத் தொடுகின்றது! இதில் சொல் நயம், இலக்கியச் சிறப்பு, முருகப் பெருமானின் பெருமை அத்தனையும் சேர்ந்துள்ளது. இயற்கையின் வனப்பு தூண்டுகோலாகக் காதலியின் உள்ளம் மட்டுமின்றி நம் உள்ளமும் உருகுகிறது.

-சரோஜினி வரதப்பன்

## செல்வம் அத்தனையும் சேர்ந்தது இங்கு!

மகா கவி பாரதியின் பாடல்களில் எந்த ஒரு வரியுமே சோடையில்லை. எதையும் ஒன்றைவிட ஒன்று சிறந்தது என்று சொல்லி நம் கெட்டிக்காரத்தனத்தை நிரூபிக்க முடியாது.

போட்டி என்று வந்ததால், இந்தப் பாடலில், ''எனக்குப் பிடித்த ''வரிகள் என்று மூன்றாவது சரணத்தைக் குறிப்பிடுகிறேன்.



காரணம் இருக்கிறது. பாரதியாருக்கு ஆயுள் முழுவதும் இரண்டே இரண்டு விஷயங்களில்தான் கண்: கவலை; ஆவல்; ஆசை.

ஒன்று: தேச விடுதலை. இதிலேயே மற்ற எல்லா விடுதலைகளும் இருக்கின்றன என்று அவர் நம்பினார். இரண்டாவது: மாதர் விடுதலை. மாதர் விடுதலைக்கு அவர் ஒரு அஸ்திவாரத்தை ஆரம்ப முதலே வற்புறுத்தி வந்திருக்கிறார். அதுதான் 'கற்பு'.


ஆண்-பெண் இரு பாலருக்கும் பொதுவில் கற்பை வைத்த பாரதி அதனை தேசப் பொது ஆரோக்கியத்துக்கே அடிப்படையாக வகுத்தளித்திருக்கிறார் என்பது, உலகமெங்கும்தலை விரித்தாடும் பால்வினை நோய்களின் பயங்கரத்தை அறிந்தவர்கள் உணருவார்கள்.

ஒரு நல்ல தேசத்தின் செல்வம் அத்தனைக்கும் இந்தப் பாடலின் மூன்றாவது சரணத்தில் அஸ்திவாரமிட்டிருக்கிறார் மகாகவி.

நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மதிலொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு!

பொருட் செல்வம், நலச் செல்வம், மறச் செல்வம் ஆகியவற்றுடன் எல்லோரும் கடுமையாகக் கடைப்பிடிக்கும் மாசில்லாத கற்பு நெறியால் ஏற்படும் நோயற்ற ஆரோக்கியச் செல்வம்படைத்ததினால்பொன்மயில்போலத் திகழும் மாதர் செல்வமும் நிறைந்த நாடு. கற்புச் செல்வம் நிரம்பியதால்தான் பாரத நாடுபுகழில் உலகிலேயே உயர்ந்து நிற்கிறதாம். ''பாரத நாடு'' என்ற இந்தப் பாடல் எப்பேர்ப்பட்ட பாடல்! அதில் இருக்கும் மூன்றாவது சரணத்துக்கு எத்தனை கோடி வேண்டுமானாலும் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும் அதற்கு ஈடு செய்ய முடியாது.

-பகீரதன்




# யோசனைகள்...யோசனைகள்...யோ




● குறைவான தண்ணீரில் குளித்தால் குளித்ததுபோல் இருக்காது. அதே வேளை – தண்ணீர்த் தட்டுப்பாடு நேரத்தில் நன்றாகக் குளிப்பதற்கு நிறையத் தண்ணீர் கிடைக்காது. எனினும் குறைவான தண்ணீரில் நன்றாகக்குளித்தது போன்ற புத்துணர்ச்சியை அடைவது எப்படி? தலையில் தண்ணீரை ஊற்றும் போது மெதுவாக ஊற்றுங்கள். உங்கள் மேனி வழியே வழிகின்ற தண்ணீர் மெதுவாக இறங்குவதால் உடல் குளிர்ச்சி பெற்று, குறைந்த தண்ணீரிலும் நன்றாகக் குளித்தது போன்ற உணர்வை ஏற்படுத்தும்!



● காப்பியோ டீயோ சுடச் சுடக் குடிப்பதில் பிரியமுள்ளவரா நீங்கள்? மிதமான சூடுகொண்ட காப்பி, டீயை யாராவது கொடுத்தால் சலிப்படையாதீர்கள். மிதமான சூடுள்ள பானங்கள் அடங்கிய டம்ளரை உதடுகளில் பொருத்திக் குடிக்காமல் அண்ணாந்து குடித்தால் மிதமான சூடும் அதிகமான சூடாய்த் தோன்றும்.



● எச்சில் அல்லது வியர்வையைத் தன் விரல்களில் தடவி நடத்துனர்கள் நீட்டுகின்ற டிக்கட்டுகளில், எச்சில் டிக்கட்டின் மேல் பாதியில்தான் படிந்திருக்கும். எனவே மேல் பகுதி உள்ளே வரும்படி டிக்கட்டை இரண்டாக மடித்துவிடுங்கள். இல்லையென்றால் கையில் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துச் செல்லுங்கள். எச்சில் பட்ட டிக்கட்டை கண்டக்டர் நீட்டும்போது புத்தகத்தை விரித்து டிக்கெட்டை புத்தகத்தில் வாங்கி அதை அப்படியே மூடிவிடுங்கள். டிக்கட்டும் பத்திரமாக இருக்கும். எச்சிலும் நம்மீது படாது.



● காப்பித் தூளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க சுலபமான வழி – ஒரு கரண்டி காப்பித் தூளை ஒரு கண்ணாடி டம்ளரில் நிரப்பப்பட்டுள்ள தண்ணீரின் மீது தூவுங்கள். சற்று நேரத்துக்குப் பின்பு டம்ளரின் அடிப்புறத்தைக் கவனியுங்கள். உண்மையான காப்பித்தூள் தண்ணீரில் மிதக்கும். கலப்படப் பொருட்கள் தண்ணீருக்குள் இறங்கி டம்ளரின் அடிப் பாகத்தில் தங்கி இருக்கும்.



● அதி தூரத்தில் உள்ள மாநிலங்களின் பரிசுச் சீட்டுக்களைப் பொறுத்தவரையில் நாளைதானே முடிவு தெரியும் என்ற எண்ணத்தில் பரிசுச் சீட்டு குலுக்கப்படுகின்ற அன்று விற்கப்படும் சீட்டுக்களை வாங்காதீர்கள். ஏனெனில் குலுக்கல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே நேரடி தொலைபேசித் தொடர்பு மூலம் பரிசு விழுந்த எண்களைத் தெரிந்து கொண்டு பரிசு பெறாத சீட்டுக்களை விற்றவரை இலாபம் என சிலர் விற்க ஏதுவாகிறது. ஏமாறாதீர்கள்.




● சாதம் மீதம் வைக்கவில்லை எனச் சண்டைக்கு வரும் கூடைக்காரிக்கு மற்றவர்களை விட ஐந்து ரூபாய் அதிகமாய்க் கொடுத்துச் சமாளியுங்கள். ஆனால்எக்காரணத்தைக் கொண்டும் கேரியரில் சாதம் மீதம் வைக்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் சாப்பிட்ட அதே கேரியரில் இன்னொருவனுக்குச் சாப்பாடு போடுவதை சில கூடைக்காரிகள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.


# சனைகள்...யோசனைகள்...யோசனை



● பெண்களுக்கான யோசனை இது. பஸ்ஸில் அல்லது நெரிசலான பகுதிகளில் கூட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு யாராவது உங்களிடம் குறும்புத்தனம் செய்ய முற்பட்டால், 'தள்ளி நில்லுப்பா' எனக்கூறுவதற்கு உங்களுக்கு அவமானமாக இருந்தால், ''என்னப்பா செருப்புக் காலாலே இப்படியா மிதிக்கிறது'' என்று சற்று உரக்கக் கூறுங்கள். குறும்புத்தனம் செய்ய முற்படுபவன் உங்கள் எதிர்ப்பைப் புரிந்துகொண்டு விலகிக் கொள்வான்.



● கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டியின் திரைக்கு மேல் 'மல்டி கலர்' கண்ணாடித் திரையைப் பொருத்தி கறுப்பு–வெள்ளை டி.வியில் கூட நிகழ்ச்சிகளைக் கலரில் பார்த்துக் களிக்கிறார் என் அண்டை வீட்டுக்காரர். கலர் டி. வி. வாங்கமுடியவில்லையே என்று கவலைப்படுகிறவர்கள் ஏதோ சில வர்ணங்களில் நிகழ்ச்சிகளைப் பார்க்க இவரின் வழியைப் பின்பற்றலாமே?




● 'ஸ்கெட்ச்' பேனாக்களை பேனா ஸ்டாண்டில் தலைகீழாக வைக்காதீர்கள். ஏனெனில் அவ்வாறு வைத்தால் 'ஸ்கெட்ச்' பேனாவின் மை தானாகவே கீழே இறங்கி விரைவில் பயனற்றதாகிவிடும்.



● சலவைச் சோப்புக்கான செலவைக்குறைக்க ஒரு யோசனை! பூக்கடை அருகில் உள்ள தேவராஜ முதலித் தெருவில், பிரபல நிறுவனங்கள் தயாரித்து விற்கும் சலவைச் சோப்புப் பவுடரில் அடங்கியுள்ள மூலப்பொருட்கள் அனைத்தும் தனித் தனியாக–நமக்கு வேண்டிய அளவு கிடைக்கிறது. அந்த மூலப் பொருட்களை வாங்கி ஒன்றாகக் கலந்து கொண்டால் சலவைச் சோப்புத் தூள் வாங்கும் செலவு கணிசமாகக் குறையும். எந்த மூலப் பொருளை எந்த விகிதத்தில் கலக்க வேண்டும் என்பது கடைக்காரருக்குத் தெரியும்.



● உங்கள் வீட்டில் அல்லது அலுவலகத்தில் விருந்து நடைபெற்றால் 'இனிப்பு–காரம்–காப்பி' வழங்கும் பொறுப்பை எழும்பூரில் உள்ள 'கில்டு ஆஃப் சர்வீஸ்' அமைப்பிடம் ஒப்படைக்கலாம். ஏனெனில் சிற்றுண்டிக்காக நீங்கள் செலவழிக்கும் பணம் ஏழைப் பெண்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுகின்ற புண்ணியத்தை உங்களுக்குக் கிடைக்கச் செய்கிறது.



● புதிதாக வீடு கட்டுவோருக்கு யோசனை: 'ஓவர் ஹெட் டாங்கை ஒரு துவாரமுள்ள சுவரால் இரண்டாகப் பிரித்துக்கொண்டு, துவாரத்தை அடைத்து, மாற்றி மாற்றி பயன் படுத்தினால் சீக்கிரம் பாசி ஏறாது; கழுவி விடுவதும் சுலபம். எப்போதாவது நிறைய நீர் ஏற்ற அவசியமானால் துவார அடைப்பை நீக்கி விடலாம்.

-ஏ. வி. எம். கணேஷ்

போட்டிக் கதை 11

# சந்தோஷத்துக்கு அப்பால்...

கோமகள்

**கா**லை நேரப் பரபரப்பு.

ரகுராமன் அவசரமாக ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். இரண்டாம் முறையாகத் தாய்மை ஏற்றிருந்த பாலா பலவீனமான உடலோடும் வாடிய முகத்தோடும் அவன் அவசரத்துக்கு ஈடு கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"பாலா என்ன ஒரு மாதிரி இருக்கே?" சட்டைப் பொத்தான்களைப் போட்டவாறே கேட்டான்.

"படபடப்பாக இருக்கிறது. சாப்பிட்டால் சரியாகி விடும்."

"நேற்றிரவு வெகு நேரம் தீபாவளி மலர்களை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாய் இல்லையா? தூக்கம் கெட்டு விட்டது. சாப்பிட்டு விட்டுப் படுத்து நன்றாகத் தூங்கு சரியா விடும். ஓ.கே?" என்றான்.

"உம், டெலிவரி ஆயிட்டால் தீபாவளி மலர் எல்லாம் விட்டுப் போகுமேன்னுதான் படிச்சேன்."

ரகுராமன் மெல்லச் சிரித்தான். பிறகு அவள் ஏற்கும் விதமாக அன்பாகக் கூறினான். "சில சமயங்களிலே சிலதை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது... எல்லாமே நம்ப ஆரோக்கியத்துக்கு அப்புறம்தான்."

பாலா பதில் பேசவில்லை. தன்னை அமைதிப்படுத்திக் கொள்வது போல் உட்கார்ந்து கொண்டாள்.

"உன் பழக்கத்தை யெல்லாம் நீ கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றிக்கணும் பாலா. பத்திரிகைகள் நம் பொழுது போக்குக்கு ஏற்பட்டவை. நல்லதென்றாலும்சரி, குப்பையென்றாலும் சரி ஒரு புத்தகத்தையும் விடுவதில்லை....."

"எனக்கு அதிலே ஆர்வம்." சமாதானமாகப் போக விரும்பினாள் பாலா.

"ஆர்வம் இருக்க வேண்டியதுதான். அளவு கடந்து போகக் கூடாது. சரி, நீ சாப்பிட்டு ஓய்வு எடுத்துக்கொள்."

"உம்."

பாலாவிடமிருந்து கலகலப்பாகப் பதில் வராமல் போகவே, தன் பேச்சுக்கள் அவளைப் புண்படுத்தி விட்டனவோ என்ற கனிவோடு சற்று நின்றான் ரகுராமன். "பாலா நல்ல வேளையா குழந்தை சௌம்யா இங்கு இல்லை. அம்மா அழைத்துப் போனதும் நல்லதாயிற்று. அம்மாவை வரச் சொல்லி எழுதட்டுமா?"

"வேண்டாம். டாக்டர் சொன்ன கெடுவுக்குப் பத்து நாள் இருக்கு. எப்படியும் இன்னும் ஐந்து தினம் கழித்து வருவதாக அம்மா சொல்லிவிட்டுப் போனாளே?"

"ஓ.கே. தென்..." கையில் பிரீஃப்கேஸுடன் புறப்பட்டான். ஸ்கூட்டரை அவன் தள்ளி நிறுத்தியபோது பாலா அவனருகே வந்தாள்.

"ஒன்று கேட்கணுமே..." தயக்கத்தோடு ஒலித்தது பாலாவின் குரல். "அது தான் உங்களுக்குத் தெரியுமே... நான் இரண்டு நாளு முன்னாலே சொன்னேனே அந்தப் படம் 'வரண்ட பூமியில் வற்றாத வாய்க்கால்...'"

"அடடா நீ சொன்னாய் இல்லே? முந்தா நாளும் வர முடியவில்லை. நேற்றும் வர முடியவில்லை. வேலை அதிகம் பாலா..."

"இன்றோடு அது மாறிவிடப் போகிறது."

"இன்றும் என்னால் வர முடியாது பாலா. செகண்ட் ஷோவுக்கு இந்த நிலையிலே நீ போகக் கூடாதும்மா" — தயவாகச் சொன்னான் ரகுராமன்.

"நானே 'மாட்னி'க்கு போய்ட்டு வந்துடறேனே?"

என்ன ஒரு சினிமாப் பைத்தியம் இவள்? நிறை மாதக் கர்ப்பிணி தனியே படத்துக்குப் போகிறாளாம். எத்தனை முறை செய்தித்தாளில் சினிமாத் தியேட்டரில், ரயிலில், பஸ்ஸில் குழந்தைகள் பிறந்ததைப் படித்திருக்கிறான் அவன்.

அவன் மௌனத்தைக் கண்ட அவள், முகம் சுருங்கி ஏமாற்றத்தில் கண் கலங்கினாள். "உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் வேண்டாம்."

"எனக்கு என்ன பயம்னா உனக்கு ஏதாவது தியேட்டர்லே...."

"எந்த 'சிம்டம்'மும் அப்படி இல்லே. நான் நார்மலாத்தான் இருக்கேன். இன்றைக்கு விட்டால் அந்தப்படம் எப்போ துவருமோ?" அழுகையை மறைக்க அவள் கண்கள் பட்டாம் பூச்சிகள் போலத் துடித்தன.

அவன் இரக்கத்துடன் "ஓ.கே. பத்திரமாக போய்விட்டு வந்துவிடு. பஸ்ஸிலே வேண்டாம். ஆட்டோவிலே போய்விட்டு, ஆட்டோவிலேயே வந்துவிடு" என்று கனிவாகக் கூறியவுடன்

குபீரென மழை மேகம் விலகி
வெளிச்ச மிட்ட வானமாகியது
அவன் முகம்.

**டி**க்கெட்டை வாங்கிக்
கொண்டு வராந்தாவில்
வைக்கப்பட்டிருந்த
ஸ்டீல் போட்

டோக்கனைப் பார்த்துவிட்டு, ஆஸ்வாசப் பெருமூச்சோடு தன் இருக்கையில் அமர்ந்தாள். வயிற்றில் ஒரு உருளல்.

படம் ஆரம்பமாகும்வரை 'ரிலாக்ஸ்' பண்ணினால் சரியாயிடும் என்று பாலா உடலைத் தளர்த்திக் காலைச் சற்று நீட்டிக் கொண்டாள்.

'வரண்ட பூமியில் வற்றாத வாய்க்காலாக நீ வந்தாயே...'என்று கதாநாயகன் பாடும் பாட்டு தியேட்டரில் ஆரம்பமாகி, கதாநாயகன்அதற்கு வாயசைத்தவாறேஉடம்பை நெளித்து ஆடிக் கொண்டே வந்தான். விலகி விலகி ஓடுவதைப் போல் பாவனை செய்த கதாநாயகி 'சட்'டென்று தன் விருப்பமின்மையை மறந்து அவனை விரும்புவதைப் பாடலில் காட்டிக் கொண்டாள். அலைகள் ஒன்றையொன்று துரத்திச் சென்று சேர்ந்து சுருண்டு ஆடி ஓடுவது போல் அவர்கள் ஓடி, பாட்டு முடியும்போது 'பட்'டென ஆட்டத்தை நிறுத்திவிட்டுப் பேச ஆரம்பித்தார்கள்.

பாலா வழக்கமான வாழ்க்கைக்கு ஒவ்வாத இந்தக் காட்சியை மிகவும் ரசித்தாள். விமலாதரனும், லட்சுமி தேவியும் சிறப்பாக நடிப்பதாக எண்ணிக் கொண்டாள். 'நல்ல வேளை, இதை 'மிஸ்' பண்ணாமல் பிடிவாதமாக அவரைக் கேட்டுக்கொண்டு வந்தேன்' என்று தனக்குள் திருப்திப்பட்டுக் கொண்டாள்.

வயிற்றில் மறுபடியும் ஒரு உருளல்.

தியேட்டரில், பஸ்ஸில், ரயிலில் குழந்தை பிறப்பதாகச் செய்திகள் படிப்பதை எண்ணிப் பார்த்தாள். பீதி பெருகியது. மெல்ல எழ முயன்றாள். கைகால்கள் வெலவெலத்தன. முகமெல்லாம் இந்த ஏர் கண்டிஷனிலும் வியர்வை முத்துக்கள். மாட்டினிக்காகத் திரையிட்டுக் கொண்டிருந்த கதவை மெல்லத் திறந்தாள். அவளுக்கு ஏதோ ஒன்று நேரப் போவதாக கதவருகே நின்ற பையன் உணர்ந்தான்.

''ஏன் தம்பி! தெருவிலே ஒரு ஆட்டோ இருந்தாக் கூப்பிடறியா?''

''அம்மா! ரெண்டு மணிநேரமா ஆட்டோ டாக்சி, பஸ் எல்லாம் ஸ்டிரைக்மா. தெருவே 'வெறிச்'னு கிடக்கும்மா!''

''என்ன?'' என்ற அதிர்ச்சியோடு அவள் துவண்டு விடுவாள் போலிருந்தது.


''என்னோடு கொஞ்சம் வருகிறாயா தம்பி! ஒரு சைக்கிள் ரிக்ஷாவாவது பிடித்து விடு. உனக்குப் பணம் தருகிறேன்.''

அவன் அவள் பின்னோடு வந்தான். தியேட்டருக்கு எதிர்ப்பக்கம் பஸ்நிறுத்தம்இருந்தது. அங்கே நின்று கொண்டாள். பையன் தெருக்கோடி மட்டும் போய்விட்டு சைக்கிள் ரிக்ஷா எதுவும் கிடைக்கவில்லை என்று கையை விரித்தான்.

''இந்தப் பக்கம் பார் தம்பி!'' எதிர்ப் பக்கம் காட்டிக் கெஞ்சும் குரலில் கேட்டாள் பாலா.

''படம் விடற டயம் ஆய்ப்போச்சம்மா! நான் கதவுக்கிட்ட இல்லேன்னு முதலாளி வேலையை விட்டு அனுப்பிச் சிடுவார்''என்று ஓட்டம் பிடித்தான் அவன்.

பாலாவுக்கு அழுகையாக, ஆத்திரமாக வந்தது. 'ஐயோ! இந்த நட்டநடு ரோடில



"எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் அதைப் போல வெட்கக்கேடு என்ன இருக்கிறது?"

நிழற்குடைக் கம்பத்தைப் பற்றியவாறே தன் நிலைமையைச் சமாளிக்க முயன்றாள் பாலா. வலியைப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுக்க முயன்றாள்.

ஒரு ஸ்கூட்டர் அவளிடம் வந்து நின்றது.

பிரகாஷ்!

"ப்ளீஸ் பிரகாஷ்! என்னை ஒரு டாக்ஸியில் அழைத்துப் போய் ஆஸ்பத்திரியில் சேர்த்து விட முடியுமா? என் உடன் பிறந்த சகோதரன் மாதிரி சரியான நேரத்தில் வந்திருக்கிறீர்கள்!"

"எல்லாமே ஸ்ட்ரைக்காச்சேம்மா! வா, ஆபத்துக்குப் பாவமில்லை. என் ஸ்கூட்டரில் பின்னால் ஏறிக்கொள். என்னைக் கெட்டியாக பிடித்துக்கொள். சீக்கிரம் ஆஸ்பிட்டல் போயிடலாம். நேரம் ஆக ஆக கஷ்டமாயிடும்..." அவன் குரலில் அவளுக்கு உதவ விழையும் கனிவு புரிந்தது.

அந்த வேதனையிலும் பாலா கொஞ்சம் தயங்கினாள். அவன் குரலின் நெகிழ்ச்சி அவளுக்கு இதமாக இருந்தது. அடங்காத வேதனையில், தாளமுடியாத வலி அடுத்தடுத்து சீக்கிரம் சீக்கிரமாக வருவதை உணர்ந்த அவள் ஸ்கூட்டரில் ஏறி ஸீட்டின் நுனியைப் பிடித்தவாறே பல்லைக் கடித்துக் கொண்டாள்.

ஆஸ்பத்திரியை அடைந்ததும் தள்ளு வண்டி வரும்வரை பிரகாஷ் பாலாவை தன்மீது சாய்த்துக் கொண்டிருந்தான். தள்ளு வண்டியில் அவளை உட்கார வைத்ததும் பாலா "தேங்க்ஸ் பிரகாஷ்! தேங்க்ஸ் பிரகாஷ்!" என்று முணு முணுத்தாள்.

"அவருக்குப் போன் பண்ணிடறீங்களா?" என்றாள்.

"நிச்சயமாய்."

ஒரு படுகஞ்சன் இறந்து போனான். வந்திருந்தவர்களில் ஒருவன் இறந்து போனவரிடம் இருக்கும் பணத்தைப் பற்றிச் சொல்லும்போது: "ம்.... காசா...லேசா" என்றான்.

மற்றவன்: "ம்... காசாலே சா" (சாவு) என்றான்.

சொன்னவர்: டி. வா. ஐ.

தகவல்: ஜீரா




லேபர் ரூம் மூடிக் கொண்டது.

"ஸார்! உங்களுக்கு என்ன ஆகவேண்டும் இந்த அம்மா? டீடெய்ல்ஸ் சொல்லுங்க."

"பாலா ரகுராமன்... என்னோட ஸிஸ்டர்! என் பெயர் பிரகாஷ்!"

"ஓ.கே. நீங்கள் இங்கேயே இருக்கலாம். டெலிவரி ஆக ஒன் அவர் ஆகும்."

அந்த வராந்தாவில் குறுக்கும் நெடுக்கும் நடந்த அவனுக்குச் சிரிப்பு வந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு இதே பாலாவை மணக்க அவன் எவ்வளவு 'கிரேஸி'யாக இருந்தான். ஒரே ஒரு முறை ஏற்பட்ட தனிமையில் அவளிடம் தவறாக நடக்க முயன்றதால் அவள் அவனை உதறி விட்டாள். அவன் எவ்வளவு சமாதானப் படுத்தியும் எத்தனை மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சியும் அவள் மனம் இளகவில்லை. ரகுராமனை மணந்து கொண்டாள்.

அன்றிலிருந்து அவளுகப் பேச வந்தாலும் பாலா அவனுடன் முகம் கொடுத்துக்கூடப் பேசியதில்லை.

இன்று அவன் ஸ்கூட்டர்தான் அவளுக்கு ஆபத்துக்கு உதவியது. பாவம் அவள்!

லேபர் ரூம் பக்கம் திரும்பி வந்த பிரகாஷ், வெளியே போடப்பட்டிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

கதவைத் திறந்து கொண்டு வந்த நர்ஸ் "ஸார்! ஆண் குழந்தை! தாயும் சேயும் சுகம்!" என்று கூறி மறைந்தாள். அவன் அவளை பார்க்கச் சென்றான்.

"தேங்க்ஸ் பிரகாஷ்!... உங்கள் உதவி மட்டும் சமயத்தில் இல்லை என்றால்நான்..." அவள் குரல் நெகிழ்ந்தது.

பிரகாஷுடன் ஸ்கூட்டரில் அமர்ந்து, வலி தாளாது அவன் மீது சாய்ந்து கொண்டு வேதனையோடு ஆஸ்பத்திரிக்கு வந்தபோது என்னவோ அவசர நிலைமைதான். ஆபத்துக்குப் பாபமில்லைதான். ஆனால் எல்லா அவசர நிலைமைகளும் அவை மாறிய பின்பு அநியாயங்கள் என்று சுட்டிக் காட்டப்படும் காலமல்லவா இது! இப்போது ஆபத்து விலகி, சகஜ நிலை ஏற்பட்டதும், தனக்கே அப்படி வந்ததை நினைத்தால் ஒரு மாதிரி இருக்கிறதே. ரகுராமன் கேள்விப்பட்டால் எப்படி இருக்கும்? எப்படி அவன் முகத்தைப் பார்த்து அவளால் இயல்பாக இப்படி எல்லாம் நடந்து விட்டது என்று சொல்ல முடியும்?

சீ! இந்த சினிமா ஆசையால் வந்த வினை இத்தனையும் என்று தன்னை நொந்துகொண்டாள்.

சற்றுத் தூரத்தில் ரகுராமன் உள்ளே நுழைவது தெரிந்தது.

"வாங்க... உங்க விருப்பப்படியே பையன் பிறந்திருக்கிறான்." — பாலாவின் குரலும் அவளைப் போலவே இளைத்துக் களைத்துச் சோர்ந்திருந்தது.

"இப்போது ஒன்றும் தொந்தரவு இல்லையே..." ரகுராமனின் குரல் உணர்ச்சியற்று ஒலிப்பது போல் உணர்ந்தாள் பாலா.

"ஒன்றும் இல்லை. நான் நன்றாகவே இருக்கிறேன்."

''இது எது பழங்கள்.''

சற்று நேரம் இருவரும் ஒன்றும் பேச வில்லை. அந்த நேரத்தில் அது ஒரு கொடுமை யான மௌனமாகப் பட்டது. எவ்வளவோ பேச வேண்டியவர் மௌனமாக இருக்கவே அவள் மனத்தில் ஒரு தவிப்பு நிறைந்து போயிருந்தது.

அடுத்த நாள் பிரகாஷ் அவளைப் பார்க்க வந்தபோது இவன் ஏன் வருகிறான் என்றிருந்தது பாலாவுக்கு. அப்போது ரகுராமனும் வந்தான். பாலாவின் மனத்தில் மீண்டும் அச்சம் படர்ந்தது.

''ஹலோ!'' என்று ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டாலும் அவள் மௌனமாகவே தன்னைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க முயன்றாள்.

அதன் பின் அவள் ஆஸ்பத்திரியிலிருந்த பத்து தினங்களில் ஒரு நாளாவது ரகுராமன் அவளை வந்து பார்க்கவில்லை. இது அவளை உறுத்திக் கொண்டே இருந்தது.

அடுத்த நாள் குழந்தைக்குப் பெயரிட்டுத் தொட்டிலிட வேண்டும் என்று ஏற்பாடுசெய் திருந்தாள் அவனுடைய அம்மா கற்பகம்.


முதல் நாள் மாலை பாலா ஆஸ்பத்திரியி லிருந்து வீட்டுக்கு வந்தாள்.

அன்று ரகுராமன் இரவு எட்டு மணிக்குத் தான் வீட்டுக்கு வந்தான். அவளிடம் சகஜமாக இருப்பதாக காட்டிக்கொள்ள பேச வந்தான்.

''என் மேல் என்ன கோபம் உங்களுக்கு? ஆஸ்பத்திரிக்குத்தான் வரவே இல்லை. இன்னிக்கு வீட்டுக்கு வரேன்னு தெரியாதா? எங்கே போயிட்டு இத்தனை நேரம் கழித்து வரீங்க?''

''என்ன பாலா! இல்லாத கற்பனைகளையெல்லாம் வளர்த்துக் கொண்டிருக்கிறாய்? அம்மா இருக்கும்போது என்னுடைய வேலைகளை முடித்துக் கொண்டு வருவதில் என்ன தப்பு? அமைதியாக இரு பாலா...'' என்றவாறே ரகுராமன் உடை மாற்றிக் கொள்ளஆரம்பித்தான்.

நாட்டிலேயே அதிக போலீஸ் நிலையங்கள் உள்ள மாவட்டம் நெல்லை தான்! இங்கு போலீஸ் சாவடிகள் உட்பட 109 போலீஸ் நிலையங்கள் இருக்கின்றன. —கு. அருணாசலம்




வீடு ஒரு குட்டி விழாக் கோலம் பூண்டிருந்தது.

ரகுராமன் அதிக உற்சாகமில்லாமலேயே நடமாடிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் பாலாவின் மனதில் மேலும் கலவரம் படர்ந்தது.

''என்னை ஏன் இப்படி நீங்க சதா அந்நியப்படுத்தணும்? எனக்குத் தெரியும். அன்று நீங்கள் சொன்னதையும் பொருட்படுத்தாமல் சினிமாவுக்குப் போனது தப்பு தான். இந்த 'ஸ்ட்ரைக்' அன்றுதானா வர வேண்டும்? அப்போது பார்த்து என் மானத்தைக் காப்பது போல் பிரகாஷ் ஏன் வர வேண்டும்?... என் வேதனை என்னை அதில் ஏற வைத்தது. என் நிலைமை என்னை அவர் மீது சாயவைத்தது...நீங்கள் அதைத் தவறாக எடுத்துக் கொண்டீர்கள். என்னிடம் பாரா முகம் காட்டுகிறீர்கள்...'' துக்கம் தொண்டையை அடைக்க நிறுத்தினாள் பாலா.

''பாலா!'' ஆழ்ந்த கனிவோடு வெளிப் பட்டது அவன் குரல். ''என்னைப் பற்றி நீ உணர்ந்து கொண்டது இவ்வளவுதானா? சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட வள் என்பதாக நீ படித்திருப்பாய். இங்கே கணவனின் செல்வாக்கால் மனைவிக்குப் புனிதத் தன்மை கற்பிக்கப்படுவதில்லை. பெண்களின் புனிதத் தன்மையால் கணவன் மார்களுக்குச் செல்வாக்கு ஏற்படும்பண்பாடு நம்முடையது....

''நான் பிரகாஷுக்கு எவ்வளவு நன்றிகள் சமர்ப்பித்தேன் தெரியுமா? சில அவசர கால உதவிகள் ஒரு புனிதமானநட்பை உருவாக்கி விடுகிறது பாலா!''

பேச்சடைபட்டு, உணர்ச்சிப் பெருக்கில் வாயடைத்து நின்றாள் பாலா. அவள் நெஞ்சிலும் ஒரு புதிய நட்பு மலர்ந்தது.

அவன் தொடர்ந்தான்.. ''என் நண்பன் சேகரின் மனைவிக்கு குழந்தை பிறந்து அன்று மாலை பிரசவத்தில் இறந்துபோனாள்.''

''யார் மனோரமாவா?''பதறினாள் பாலா. ஐயோ ஒரு குழந்தைக்கு அவள் எவ்வளவு ஆசைப்பட்டாள். அவளே போய்விட்டாளா?

''அந்த வருத்தத்திலிருந்து சேகரைத் தேற்றத்தான் நான் அடிக்கடி அங்கு சென்று வந்தேன். சேகரின் நிலைமை என்னை மிகவும் வருத்துகிறது. நானும் அவனும் இன்ஜினியரிங் பொறியியற் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் பாலா...!''

''எனக்குத்தான் தெரியுமே அது! உங்கள் துயரத்தை நான் எனக்குச்சம்பந்தப்படுத்திக் கொண்டு வருத்தப்பட்டேன்.''

''குழந்தைக்கு என்ன பெயர்னு தீர்மானிக் கிறீங்களா ரகு?'' என்றவாறே கற்பகம் அங்கு வந்தாள்.

''அதை அவன் பிறந்த அன்றே தீர் மானித்து விட்டேன் அம்மா!''

''என்கிட்டே சொல்லவே இல்லையே?'' ஆர்வமாகக் கேட்டாள் பாலா.

''பிரகாஷ்!''

அப்போது கையில் ஒரு அன்பளிப்புப் பெட்டியோடு பிரகாஷ் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.



**ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்**
**... உங்கள் தேவைக்கேற்றது ஸுமீத்**

OBM/8869/TM

அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது.


ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுறும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன் மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி, எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க. இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள் :

நரப் பண்ட அரைவைக்காக,
உலர் பண்ட அரைவைக்காக,
கடைய, கலக்க, சாறு பிழிய,
மாமிசத்தை அரிக்க,
காய்கறிகளை நறுக்க.

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.


அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்கலாம்.



**ஈர அரவை—**
வடை, இட்லி, தோசைக்காக உளுத்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க 3½ நிமிடங்களில்.

**உலர் அரவை—**
எல்லாவித மசாலாக்கள், மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.





**பொடிக்க—**
1 நிமிடத்தில் மாமிசத்தை பொடிக்க, காரெட், வெங்காயம், தேங்காய் மற்றும் கொட்டைகளை நறுக்க— விநாடிகளில்.


**அரைக்க—**
2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம் அல்லது விநாடிகளில் கொத்துமல்லிச் சட்னி அரைக்கலாம்.






**கடைய—**
லஸ்ஸி, மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமி-டத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோனைஸ் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணெய் கடையலாம்.

**விருப்பத் தேர்வு : ஒப்பற்ற கீடிங் இணைப்பு**





மாவு பிசைய— சப்பாத்தி, பூரி, ஆகியன தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்— 3½ நிமிடங்களில்.

# ஸுமீத்®

## உங்கள் முழுமையான கிட்சன் மெஷின்

அற்புதமான ஸுமீத் பலவகைப் பல்வேறு பணிகளைச் செய்கிறது - மற்ற
எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களைவிடச் சிறப்பாக, எப்போதும் நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிறோம்
என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்!
தயாரிப்பாளர்கள் : பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி
F/11 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058 இந்தியா. ஃபோன் : 633340

சர்வீஸ் சென்டர்கள் :
சென்னை : டெப்ரானிகாப்பக்ஸ் & என்ஜினியர்ஸ், தொலைபேசி : 445700/442055 • விவேக் எஜென்ஸிஸ், தொலைபேசி : 76923/75661 • விவேக் & கம்பெனி, தொலைபேசி 444129 • விவேக் ® கம்பெனி, தொலைபேசி : 663545 • வி. ஜி. பன்னீர்தாஸ் & கம்பெனி: தொலைபேசி : 812121/88184.
மதுரை : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24028.
கோயம்புத்தூர் : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24579/25566.
திருச்சி : ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி, தொலைபேசி : 24343.



கள்வனின் காதல்

## அத்தியாயம் 11

## போலீஸ் ஸ்டேஷன்

தெரு வாசற்படியில் தள்ளப் பெற்ற கார்வார் பிள்ளை மெதுவாகத் தள்ளாடிக் கொண்டு எழுந்திருந்தார். மேல் வேஷ்டியை எடுத்துத் தூசியைத் தட்டிப் போட்டுக் கொண்டார். அக்கம் பக்கத்தில் யாரும் இல்லை என்பதைக் கவனித்துக் கொண்டு, அவசரமாய்க் கிளம்பி நடந்தார்.

கார்வார் பிள்ளையின் வாழ்க்கையில் இம்மாதிரிச் சம்பவங்கள் சாதாரணமானவை. பல தடவைகளில் அவர் ஏழை எளியவர்களின் வீடுகளிலேஇதை விட அதிசயமான தொந்திரவுக்கு ஆளாகியிருக்கிறார். அதையெல்லாம் அவர் லட்சியம் செய்வது கிடையாது. இதுவிஷயத்தில் அவர் தாமரை இலைத் தண்ணீர் போல் வாழ்க்கை நடத்தினர் என்றே சொல்லலாம்.



ஆனாலும் இன்று நடந்த சம்பவத்தை அவர் அவ்வாறு உதறித் தள்ளி விட முடியவில்லை. இந்த முத்தையன், மடத்தில் தம் கீழ் வேலையில் இருப்பவன், இனிமேல் அவனிடம் எப்படி வேலை வாங்க முடியும்? அவனுடன் தலைநிமிர்ந்து பேசுவதுதான் எவ்விதம் சாத்தியம்?

எப்படியோ சமாளித்துக்கொள்கிறேமென்றாலும் அந்தப் பையன் வாயை மூடிக் கொண்டு சும்மா இருப்பானா? சந்நிதானத்திடம் போய் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வைத்தால் என்ன செய்கிறது? ஏற்கெனவே நம் பெயரில் புகார்களுக்கு குறைவில்லை.

வீதியில் போய்க் கொண்டிருக்கும் போதே கார்வார் பிள்ளை இதையெல்லாம் பற்றிச் சாங்கோபாங்கமாக ஆலோசனை செய்து கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். அதன் பலனாக அவர் நேரே மடத்தின் காரியாலயத்துக்குப் போகாமல், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்.

ஃ ஃ ஃ

**போ**லீஸ் ஸ்டேஷனில் ஸப் இன்ஸ்பெக்டர் ஸர்வோத்தம சாஸ்திரி அப்போதுதான் டிரஸ் பண்ணிக்-கொண்டு வெளியே வந்தவர், கார்வார் பிள்ளையைப் பார்த்ததும், “வாரும், சங்குப் பிள்ளை! நீர் வருகிறீர் என்று கால் மணி நேரத்துக்கு முன்பே எனக்குத் தெரிஞ்சு போச்சு. ‘யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே’ என்பதை ‘சங்குப் பிள்ளை வருவார் பின்னே, சவ்வாது வாசனை வரும் முன்னே’ என்று மாற்றி விட வேண்டியதுதான். — ஆனால்என்ன ஒரு மாதிரியாயிருக்கிறீர்? நெற்றியிலே என்ன அவ்வளவு பெரிய வீக்கம்? விஷயம் என்ன?” என்று கேட்டார்.

“ஸார்! அசந்தர்ப்பமாய் ஒரு காரியம் நடந்து போச்சு. நீங்கள் பார்த்து உடனே நடவடிக்கை எடுக்கா விட்டால், அப்புறம் இந்த ஊரிலே யாரும் இருக்க யோக்யதை இல்லை. மடத்தை மூடிக் கொண்டு நாங்கள் எல்லாம் கிளம்பிவிட வேண்டியதுதான்” என்றார் கார்வார் பிள்ளை.

“சங்குப் பிள்ளை! அப்படி ஏதாவது நடந்துவிட்டால் இந்த ஊர் செய்த பாக்கியம்தான். ஆனால் அது நடக்

காது என்று எனக்குத் தெரியும். என்ன சமாச்சாரம், சீக்கிரம் சொல்லும். கலெக்டர் துரை வருகிறாராம் சேந்த ஊருக்கு. நான் போக வேண்டும். அவசரம்'' என்றார்.

''நல்லவேளையாகப் போச்சு. நான் உடனே கிளம்பி வந்தது. பாருங்கள்! மடத்திலே ஒரு தறிதலைப் பயல் யாரோ சிபாரிசு பண்ணினார்களென்று வேலைக்கு வைத்தோம். முத்தையா என்று பெயர். அந்தப் பையன் நாளடைவிலே மடத்துப் பணத்தைக் கையாடி வந்தான் என்று தெரிந்தது. இன்றைக்கு மத்தியானம் பெட்டியில் ஐம்பது ரூபாய் பணம் குறைந்தது. பையனை விசாரிக்கலாம் என்று பார்த்தால், ஆளைக் காணவில்லை. உடனே புறப்பட்டு அவன் குடியிருக்கிற வீட்டுக்குப் போனேன். அங்கே பாருங்கள், அந்தத் தடிப் பயல், அவன் தங்கச்சி கிட்ட ரூபாய் நோட்டைக் கொடுத்துக்கொண்டிருந்தான். கையும் மெய்யுமாய் பிடித்துக்கொண்டு வந்து போலீஸில் ஒப்புவிப்பதற்காக அவனைப் பிடித்தேன். அந்தத் தடிப்பயல் என்னைப் பிடித்துத் தள்ளிச் சுவரிலே வச்சு மோதிவிட்டான், ஸார்ன்னு! கொஞ்சம் உஷாராயில்லாமற் போனால், மென்னியைப் பிடித்துக் கொன்றிருந்தாலும் கொன்றிருப்பான். நீங்கள் உடனே அவனை அரெஸ்ட் பண்ணியாக வேணும்.''

அப்போது ஸப் இன்ஸ்பெக்டர், ''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். ஐயா! நீர் சொல்கிறதற்''கெல்லாம் சாட்சி உண்டா சொல்லும் என்றார்.

''பேஷாய் உண்டு! உங்களுக்கு யார் எப்படிச் சாட்சி சொல்ல வேணுமோ, அப்படிச் சொல்லச் செய்கிறேன்.''

''பொய்ச் சாட்சி தயார் பண்ணுகிறேன் என்கிறீரா?''

''சிவ சிவா! ஆண்டவனே! பொய் சாட்சியா? கண்ணாலே பார்த்தவாளைக் கொண்டு சாட்சி சொல்லச் சொல்கிறேன்; அப்புறம் என்ன உங்களுக்கு?''

ஸப் இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டேபிளைக் கூப்பிட்டு, ''நாயுடு, இந்தச் சங்குப் பிள்ளையிடம் வாக்கு மூலம் வாங்கிக் கொண்டு அவர் சொல்கிற பையனை அரஸ்ட் செய்துகொண்டுவந்து 'லாக் - அப்'பில் வையும். நான் வந்து மற்ற விஷயம் விசாரித்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றார்.

முத்தையன் வீதியோடு மடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் ஒருபுறம் கொதிப்பும், மற்றொரு புறம் வருங்காலத்தைப் பற்றிய ஏக்கமும் குடிகொண்டிருந்தன. ''பண்டார சந்நிதியை உடனே பார்க்க முடியுமா, பார்த்தாலும் நான் சொல்வதில் அவருக்கு நம்பிக்கை உண்டாகுமா? நியாயம் பிறக்குமா?'' என்ற பலவித எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அப்போது எதிரே கொஞ்ச தூரத்தில் இரண்டு போலீஸ் கான்ஸ்டேபிள்கள் வருவதைப் பார்த்தான். உடனே பண்டார சந்நிதியிடம்போய்ச் சொல்வதைக் காட்டிலும் ஏன் போலீஸில் போய்ச் சொல்லக் கூடாது என்று அவனுக்குத் தோன்றிற்று. அப்படி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையிலேயே அந்தப் போலீஸ்காரர்கள் அவனண்டை வந்து நின்றார்கள். அவர்களில் ஒருவன், ''தம்பி! நீதானே முத்தையன் என்கிறது?'' என்றான். முத்தையன், ''ஆமாம்'' என்றதும், ''இன்ஸ்பெக்டர் ஐயா உன்னை அழைச்கண்டு வரச் சொன்னாரு. ஒரு சமாசாரம் கேட்கணுமாம்'' என்றான் போலீஸ்காரன்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து விட்டது என்று எண்ணினான் முத்தையன். கார்வார் பிள்ளை அபிராமியை உபத்திரவப் படுத்துவதைத் தான் வருவதற்கு முன்னாலேயே வேறு யாராவது பார்த்து விட்டுப் போலீஸில் போய்ச் சொல்லியிருப்பார்களோ என்று எண்ணினான். கான்ஸ்டேபிளைக் கேட்டதற்கு, அவர்கள் தங்களுக்குத் தகவல் ஒன்றும் தெரியாது என்று சொல்லி விட்டார்கள்.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும் ஹெட் கான்ஸ்டபிள் நாயுடு அவனை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு அவர் உட்கார்ந்திருந்த கூடத்துக்கு எதிரில்

### புதுக் குறள்!

கோவை பழைய புத்தகக் கடை ஒன்றில் உள்ள போர்டில் 'குறளை' மாற்றி எழுதி வைத்துள்ளனர்:

''கற்க கசடறக் கற்க கற்றபின்
விற்க அதன் எடைக்குத் தக.''

—பத்மா தேசிகன்



மாண்ட்
கோல்ட் மெடல்
பெற்ற உலகின்
ஒரே டூத் பௌடர்

# ப்ராமிஸ்

## டூத் பௌடர்

மாண்ட் ஸெலக்ஷன்
கோல்ட் மெடல் தரத்தில்
தனிச் சிறப்பு பெற்ற
பொருளுக்கு அளிக்கப்படும்
அகில உலக பரிசாகும்.
ப்ராமிஸ் டூத் பௌடர்
இத் தனி மதிப்பைப் பெற்ற
ஒரே டூத் பௌடர்.




பல்ஸாரா தயாரிப்பு

ப்ராமிஸ் டூத் பௌடர்—அருமையிலும் அருமை அதை அனுபவித்து உணருங்கள்.

CHAITRA-BLS-610 TAM

அறையைத் திறந்து, ''தம்பி இந்த ரூமுக்குள் போ!'' என்ருர். முத்தையன் அந்த அறையில் தன்னிடம் இரகசியமாக ஏதோ கேட்கப் போகிருர் என்று நினைத்தவனுய், உள்ளே போனுன். உடனே அந்த ஹெட் கான்ஸ்டேபிள் வெளிக் கதவைச் சாத்திப் பூட்டியதைப் பார்த்ததும், முத்தையனுக்குச் 'சொரேர்' என்றது.

''என்ன ஸார், இது! ஏன் என்னை வைத்துப் பூட்டுகிறீர்கள்?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

''ஏனு? களவாணிப் பயலே! மடத்துப் பணம் ஐம்பது ரூபாயைஅமுக்கி விட்டு ஏன் என்ரு கேட்கிருய்? போதாததற்குக் கார்வார் பிள்ளை மேலும் கை வைச்சுட்டியாமே? திருட்டுப் பயலே'' என்ருர் ஹெட் கான்ஸ்டபிள்.

''ஐயோ! இது என்ன படுமோசம்!'' என்று அலறினுன் முத்தையன்.

ஹெட் கான்ஸ்டபிள் இதற்குள் வெளியே போய் விட்டார்.

முத்தையன், ''ஸார், ஸார்!' என்று கதறிக் கொண்டே கதவைப் பிடித்து உலுக்கினுன்.

அப்போது, ''இரும்புக் கதவு சாமி! வெறுங் கையாலே ஒடிக்க முடியாது சாமி!'' என்ற குரலைக் கேட்டு அவன் திடுக்கிட்டான். குரல் வந்த பக்கம் பார்த்தான். அதே அறையின் ஒரு மூலையில் கந்தல் துணியுடன் செம்பட்டை படர்ந்த மீசை தாடியுடன் குறவன் ஒருவன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

## அத்தியாயம் 12
## ஓட்டமும் வேட்டையும்

இரவு நேரம். எங்கும் நிசப்தமாக இருந்தது. அந்த நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் கடியாரம் பத்து மணி அடித்தது.

கடிகாரத்தில் மணி அடிக்கத் தொடங்கியபோது, முத்தையன் அந்த அறைக்குள் கூண்டில் அடைபட்ட புலியைப் போல், முன்னும் பின்னுமாய் நடந்து கொண்டிருந்தான். கடியாரத்தின் மணி ஒசை கேட்டதும் அவன் நின்று ''ஒண்ணு, ரெண்டு, மூணு...'' என்று எண்ணிக் கொண்டு வந்தான்.

பத்து மணி அடித்து நிறுத்தியதும், மறுபடியும் அவன் பரபரப்பாக நடந்தான். ''மணி பத்து! பத்து மணி! அபிராமி தனியா யிருப்பாள்; தனியா யிருப்பாள்! அந்தக் கிராதகன் ஒரு வேளை வந்தால்?...'' இப்படித் தனக்குத் தானே சொல்லிக் கொண்டு முன்னும் பின்னுமாக நடந்தான்.

அப்போது பாரா 'டியூடி'யில் இருந்த போலீஸ் சேவகன் அந்தப் பக்கம் வரவே, முத்தையன் ஆவலுடன், கதவண்டை வந்து, தேம்பும் குரலில், ''ஸார்! ஸார்,'' என்ருன்.

போலீஸ்காரன் அவனை உற்றுப் பார்த்து, ''என்னடா அப்பா, ஸார், மோர்! என்ன சமாசாரம்?'' என்று கேட்டான்.

''எனக்கு ஒரு உபகாரம் நீங்கள் செய்ய வேண்டும். அதை என் உயிர் இருக்கிற வரைக்கும் மறக்க மாட்டேன். என் தோலை உங்களுக்குச்செருப்பாய்த் தைத்துப் போடுவேன்...''

இதற்குள் அந்தச் சேவகன், ''வேண்டாமடா, அப்பா! வேண்டாம். எங்களுக்கெல்லாம் சர்க்காரிலேயே செருப்புத் தைத்துக் கொடுக்கிருர்கள். ஏதோ உபகாரம் என்ருயே, அது என்ன சொல்லு'' என்ருன்.

''ஐயா! அரை மணி நேரத்துக்கு என்னை விடுதலை பண்ணுங்கள். வீட்டுக்குப் போய்ப் பார்த்து விட்டு உடனே திரும்பி வந்து விடுகிறேன். உங்களுக்கு ஒன்றும் கெடுதல் வராது. நீங்கள் வேணுமானுலும் என் பின்னேடு வாருங்கள்...''

போலீஸ்காரன் சிரித்தான். ''ரொம்ப பேஷான யோசனை. அப்படி என்னப்பா வீட்டிலே அவசரம்? என்னத் தையாவது வைத்து விட்டு மறந்து



ஒரே நாளில் 35 தடவை ஒலி பரப்பாகும் பாட்டு!

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதி கல்யாணப் பரிசு படத்தில் இடம் பெறும் ''உன்னைக் கண்டு நான் ஆட'' என்ற பாடல் சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி, கோவை, இலங்கை வானெலி நிலயங்களில் எல்லாம் சேர்ந்து 35 தடவை தீபாவளியன்று மட்டும் ஒலிபரப்பாகிறதாம்!

—அரக்கோணம் ராஜாராம்

போய் வந்து விட்டாயா?'' என்று கேட்டான்.

''ஐயா! நீங்களும் அக்கா தங்கைகளுடன் பிறந்திருப்பீர்கள். என்னுடைய தங்கை வீட்டிலே தனியாய் யாய் இருக்கிறாள். அதுவோ தெருகோடி வீடு. அவளை யாராவது தெரிந்தவர்கள் வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு உடனே திரும்பி வந்து விடுகிறேன்...''

''காவேரி பிரச்னை பற்றிப் பேசிமுடிவெடுக்க எங்க அப்பா பெங்களூர் போயிருக்கார்.''

''உங்க அப்பா பெரிய லெவல் அதிகாரியா? என்னிடம் நீ சொல்லவே இல்லையேடா!''

''ம்ஹூம்... எங்க பெங்களூர் அத்தைப் பெண் காவேரியை எனக்குக் கல்யாணம் பண்றதா, இல்லே என் தம்பிக்குக் கட்டி வைப்பதான்னு பேசி முடிவெடுக்கத்தான் போயிருக்கார்...''

—என். எஸ். வி. குருமூர்த்தி



போலீஸ்காரன் இதற்குள் இடிஇடியென்று சிரிக்கத் தொடங்கி விட்டான்.

''அண்ணே! அண்ணே! இங்கே வா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே சிரித்தான்.

இதைக் கேட்டு லாந்தரின் அடியில் டைரி எழுதிக் கொண்டிருந்த இன்னொரு போலீஸ்காரன் எழுந்து வந்தான்.

''அண்ணே! இந்தப் பையனுக்கு அவசரமாய் வீட்டுக்குப் போகணுமாம்!''

''ரொம்ப அவசரமாய்ப் போக வேணுமோ? அப்படி என்ன அவசரமாம்?''

''இந்தப் பையனுடைய தங்கை வீட்டில் தனியாய் இருக்கிறாளாம். நீ வாறுத் துணைக்குப் போகிறாயா, அண்ணே?''

இதைக் கேட்டதும், இரண்டாவது போலீஸ்காரனும் விழுந்து விழுந்து சிரித்தான். இரண்டு பேரும் சிரித்துக் கொண்டே அங்கிருந்து போனார்கள்.

முத்தையனுடையமுகத்தில் சொல்ல முடியாத கோபம் ஜொலித்தது. அவன் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றான்.

அதுவரைக்கும் மூலையில் உட்கார்ந்திருந்த குறவன் அச்சமயம் எழுந்து வந்து,முத்தையனை முகத்துக்கு நேராக உற்றுப்பார்த்தான். ''இப்போ என்ன சாமி, சொல்றீங்க?'' என்றான்.

முத்தையன் பேசாமல் இருக்கவே, ''நான் சொல்றபடி கேட்டீங்கன்னு, கட்டாயம் தப்பிச்சுக் கொள்ளலாம். சரிதானு?'' என்றான்.

''சரி'' என்றான் முத்தையன்.

கடிகாரத்தில் பத்தரை மணி ஆனதற்காக 'டங்' என்று ஒரு தடவை அடித்தது.

ஸ்டேஷன் தாழ்வாரத்தில் படுத்து ஒரு கான்ஸ்டபிள் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். இன்னொருவன் உட்கார்ந்தபடிஆடி விழுந்து கொண்டிருந்தான்.

ஏதோ இரும்புக் கதவு ஓசைப்பட்ட சத்தம் கேட்கவே, உட்கார்ந்திருந்தவன் திடுக்கிட்டு நிமிர்ந்து ''என்ன அது?'' என்றான். பேச்சு மூச்சு இல்லை. ஆனாலும் அவன் மன நிம்மதியடையாமல், எழுந்திருந்து 'லாக்-அப்' அறையின் கதவண்டை சென்றான். அந்தக் கதவின் இரும்புக் கம்பிகள் இரண்டு மூன்று இடத்தில் சிறிது விலக்கப்பட்டிருப்பதை அவன் கவனிக்கவில்லை. கதவுக்கப்பால் நின்று கொண்டிருந்த குறவனைப் பார்த்து, ''என்னடா குறவா, என்ன சத்தம்?'' என்று கேட்டான்.

குறவன், ''என்ன சாமி கேட்கறீங்க?'' என்று கேட்டுக் கொண்டே கதவண்டை வந்தான். வந்தவன் பளிச் சென்று கைகளைக் கம்பிகளின் வழியாய் வெளியே நீட்டி, அந்தப் போலீஸ் சேவகனின் கழுத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். போலீஸ்காரன் என்ன திமிறியும் அந்தப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அவனுடைய விழிகள் பிதுங்கின.



ஒவ்வொரு நாளையும்
டான்டெக்ஸ்®
அணிந்து துவக்குங்கள்
காலை முதல் இரவு வரை டான்டெக்ஸ் அணிந்து மகிழுங்கள். அதன் கச்சிதமான உடம்போடு ஒட்டும் அமைப்பும், சிறப்பும் உங்களுக்கு நாள் முழுவதும் இதமான சுகத்தை அளிக்கிறது.
IS : 4564
ISI
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
ப்ரீஃப்ஸ் • வெஸ்ட்ஸ் • காஷ்வெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள் • சிறுவர்களுக்கான ரகங்கள்
THE SEAL OF
TANTEX
QUALITY
ttk தயாரிப்பு
Imageads-M- TT. 1568Tam.

முத்தையன், கம்பி விலக்கப்பட்டிருந்த இடத்தின் வழியாய்க் கையை நீட்டி, போலீஸ்காரன் பையிலிருந்த சாவியினால் பூட்டைத் திறந்து தாழ்ப்பாளையும் விலக்கினான். உடனே வெளியில் வந்து குறவன் சொன்னபடியே போலீஸ்காரன் வாயில் துணியை வைத்து அடைத்தான். தன்னுடைய மேல் துணியினால் அவன் கைகளையும் இறுக்கிக் கட்டினான்.

குறவன் மின்னல் மின்னும் நேரத்தில் வெளியே வந்து அந்தப் போலீஸ்காரனுடைய கால்களையும் கட்டிக் கீழே உருட்டியதும், இரண்டு பேரும் ஓடிப்போய் வாசல் கதவைத் திறந்தார்கள். அந்தச் சப்தம் கேட்டுத் தூங்கிக் கொண்டிருந்த போலீஸ்காரன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். வாசற் கதவைத் திறந்து கொண்டு இரண்டு பேர் ஓடுவதைப் பார்த்ததும், ''டேஞ்சர்! எஸ்கேப்! ஷூட்! ஷூட்'' என்று கத்திக் கொண்டே தன் கையிலிருந்த துப்பாக்கியை எடுத்துச் சுட்டான். குண்டு ஸ்டேஷன் கூரை மேல் போய்த் தாக்கி, கட்டிடம் கிடுகிடுத்தது.

வெளியில் வந்த முத்தையன், குறவன் என்ன ஆனான் என்றுகூடத் திரும்பிப் பார்க்கவில்லை. கோதண்டத்திலிருந்து கிளம்பிய ராமபாணம் என்பார்களே, அதுபோல அவன் நேரே தன்னுடைய வீட்டை நோக்கி ஓடினான். இரவு நேரமாகையால், வீதிகளில் ஜனநடமாட்டமில்லை. ஆனால், அவன் ஓடிய வழியில் தெரு நாய்கள் எல்லாம் குரைத்தன. சில நாய்கள் அவனைத் தொடர்ந்து ஓடி வந்தன. அதையெல்லாம் அவன் பொருட்படுத்தாமல், சந்து, பொந்துகள் வழியாகப் புகுந்து அதி வேகமாய் ஓடினான். கடைசியில் வீட்டை அடைந்தான். கதவு சாத்தியிருந்தது. வீட்டுக்குள் விளக்கு இல்லை. முதலில் கதவை மெதுவாக இடித்தான். பிறகு ஓங்கி இடித்தான். 'அபிராமி! அபிராமி!' என்று கம்மிய குரலில் அலறி அழைத்தான். பேச்சு மூச்சு இல்லை. கொஞ்ச தூரத்தில் போலீஸ்காரர்கள் கூச்சலிட்டுக் கொண்டு ஓடிவரும் சத்தம் கேட்டது. சட்டென்று கதவின் நாதாங்கி இருக்கும் இடத்தைப் பார்த்தான். கதவு வெளிப்புறம் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டான்.

'ஐயோ! அபிராமி! அபிராமி! நீ என்ன ஆனாய்? எங்கே போனாய்?'

(தொடரும்)





## விநோபா வரைந்த படங்கள்!

**பீ**ஷ்மர் மரணப் படுக்கையில் இருந்து கொண்டு இயற்றிய நூல் விஷ்ணு சகஸ்ர நாமம். அதில் வரும் விஷ்ணுவின் நாமங்களுக்கு இந்தி மொழியில் அர்த்தம் கூறி அதற்கேற்ப சிறு படங்களை வரைந்தார் 92 வயது நிறைந்து அண்மையில் இறைவனடி சேர்ந்த விநோபா பாவே.

1973ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ம் தேதி ஜம்னலால்பஜாஜ் அவர்களின்மனைவி ஜானகி தேவி, விநோபாஜியின்பவுனார் ஆசிரமத்துக்கு வந்தார். அருமை மகன் கமல் நயன் பஜாஜை இழந்திருந்த அவர் விநோபாஜியிடம் அமைதி நாடி வந்தார்.

விநோபாஜி ஒரு நோட்டுப் புத்தகத்தில் 'ஓம்' என்று பிரணவ மந்திரத்தை எழுதி, தொடர்ந்து, காக்கும் கடவுளாக விளங்கும் விஷ்ணுவின் 1008 நாமங்களையும் நாளுக்கொரு நாமமாக எழுதத் தொடங்கினார். அந்த நாமங்களின் அர்த்தத்தையும் அதை விளக்கும் வகையில் சின்னஞ்சிறு படங்களையும் வரைந்து வந்தார்.

''பிராணஹ'' என்ற சொல்லுக்கு ஜீவ ராசிகளின் சிறு உருவங்களையும், ''ஜ்யேஷ்டஹ்'' என்ற சொல்லுக்கு அண்ணனது உருவத்தையும் இன்னும் பலவித படங்களையும் அவர் வரைந்தார்.

இவ்வாறு ஓராண்டு காலம் 360 நாமங்களை எழுதி படம் வரைந்த விநோபாஜி கடைசி நாளன்று ''சர்வ லட்சண லட்சண்யஹ'' என்று எழுதி, அழகுக்கு அழகு செய்பவன் என்று அர்த்தமும்எழுதி .அன்று முதல் ராம்ஹரி என்று மட்டுமே தாம் எழுதப் போவதாகக் கூறினார்.

ஸ்ரீமன் நாராயண் அவர்களது முயற்சியின் பேரில் அர்த்தமுடன் இந்த விஷ்ணு நாமங்களும் படங்களும் புத்தக வடிவில் வெளிவந்தன. முதற் பதிப்பு வெளிவந்த இருபது நாட்களில் இரண்டாயிரம் பிரதிகளும் விற்பனையாகி விட்டன!

- ஜனார்த்தனன்




**90 பைசாவுக்கு 10***

* அதிகபட்ச விலை, தலவரிகளைப் பொறுத்தது.

சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது

STATUTORY WARNING CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH

CAS/JS-262-203 TAM



# ரசிகமணி வளர்த்த கலைகள்

இந்திரா குமரன்

"நம் உணர்ச்சியானது தத்துவத்தில் போய்க் கலந்து நம்மை வேறு பொருளாக ஆக்கிவிட வேண்டும்; அதனால் நமக்கு வேறு பிறப்பொன்றுகிடைக்கிறது. அதுதான்கலை" என்பது டி. கே. சி. கலைக்குக் கொடுக்கும் விளக்கம்.


கவிதை, சங்கீதம், நாடகம், சிற்பம், ஓவியம் இன்ன பிற கலைகளில் ஆழ்ந்த ஈடுபாடும், ஆர்வமும் கொண்டிருந்த டி.கே.சி., "மரங்களடர்ந்த காடுகள் பூமிக்குள் புதைபடுகின்றன; பூமியின் மேற்பாரம் அழுத்தி அழுத்தி அவை மாறுதலடைந்துநிலக்கரியும், வைரமுமாகி நமக்குக் கிடைக்கிற தன்மை போல், கருத்துக்கள், சொற்கள், யாப்பிலக்கண விதிகள் ஆகிய மரங்கள் மீது உணர்ச்சியாகிய பூபாரம் அழுத்தி, அழுத்திக் கவிதை உருவாகிறது" என்று கவிதைக் கலைக்கு விளக்கம் கூறுகிறார்.

சற்றவர் நுகரும் வண்ணம் கவிதை பற்றிச் சொன்னதில் டி. கே. சி. அவர்களுக்குப் பெருமை இல்லை. கவிதையையே அறியாதவர்கள் கூட அதனை நுகர்ந்து, சுவைத்து உணரும்படி எடுத்துக் கூறும் ஆற்றல் இருந்ததே அவருக்குப் பெருமை.

சிறப்பாகக் கவிதை இயற்ற வல்ல டி.கே. சி. அவர்கள் கம்பர், முத்தொள்ளாயிரம், மாணிக்கவாசகர் பாடல்கள் முதலானவற்றை நுகர்ந்து அவற்றில் ஈடுபட ஈடுபடக் கவிதை இயற்றுவதையே நிறுத்திவிட்டார். "சூரிய ஒளிக்கு முன்பாக மின்மினிஎங்ஙனம் ஒளி காட்ட இயலும்?" என அவர் சொல்வதுண்டு. ரசனை என்ற கலையை மேன்மையுறச் செய்வதற்காகத் தமது கவி பாடும் ஆற்றலையே விட்டுக் கொடுத்த மாபெரும் தியாகி அவர்.

சங்கீதம் பற்றி டி. கே. சி. அவர்கள் கருதுவது: "சாகித்யம் வருகையில்

ரசிகமணி நூற்றாண்டு கட்டுரைப்போட்டி





சூப்பர் மேன்-3 வரப்போகிறது அதிலும் கிரிஸ்டோபர்தான் சூப்பர் மேன். இதில் இவருக்குத் தரப்படும் தொகை 2 மில்லியன் டாலர்கள். அதிகப் பணம் வாங்கினாலும், புகழ் பெற்றவராக இருந்தாலும் சூப்பர்மேன் கிறிஸ்டோபருக்கு தொழில் முறையில் இருக்கும் ஒரே ஒரு வருத்தம் மிக அழகான காதல் கதையாக தயாரிக்கப்பட்ட Somewhere In Time என்கிற தன்னுடைய படம் வெற்றி பெறவில்லையே என்பதுதான்.

'வீக் எண்ட் ரெவ்யூ' — ஜீரா

பாவத்தை எதிர்பார்க்கிறோம். உள்ளிருக்கும் உணர்ச்சியே சங்கீதத்துக்கு ரூபம் கொடுக்கிறது.''

ஓவியக் கலை பற்றி ராஜாஜி அவர்கள் மேனாட்டு ஆசிரியர் சொல்லியிருப்பதை ஆதாரம் காட்டி அபிப்பிராயம் சொல்லும்போது ஆர அமரக் கேட்ட டி. கே. சி. தம் கருத்தாகச் சொல்வார்: ''தினந்தோறும் பெண்கள் கோலம் போடுவதும், குழந்தையைத் தாய் அலங்கரிப்பதும், மணப் பெண்ணை அழகு படுத்துவதும் ஓவியம். கோவிலில் எழுந்தருளியுள்ள மூர்த்தியை அலங்கரித்துப் பார்ப்பதும் ஓவியமே. மனிதனின் உணர்ச்சிகளும், வாழ்க்கையும் ஓவியக் கலைக்கு மணி மகுடமாய்த் திகழ்கின்றன. சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப் பழக்கம். ஓவியனுக்குக் கை உணரும். கவிஞனுக்கு நா உணரும் என்பர்.''

பரதம் தேசியக் கலையாகப் பெரும் புகழ் அடைந்ததற்கு ரசிகமணி டி. கே. சி. அவர்களே காரணமாவார்கள். பாலசரஸ்வதியின் நடனம் முடிவுற்றபோது, ''நமக்கு வாய் மட்டும் பேசுகிறது; அந்த அம்மாவுக்கு உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை ஒவ்வோர் அங்கமும் அல்லவா பேசுகிறது'' என்று கூறினார்கள்.

முத்தமிழ்ப் புலவர்களும், கவிஞர்களும் கலைஞர்களும் பழங்காலப் பேரரசர்களுடைய கொலு மண்டபத்தில் சூழ்ந்திருந்தது எப்படியோ அப்படி டி. கே. சி.யைச் சூழ்ந்து ரசிகர் குழாம், கலைஞர் குழாம் களிப்புறும். அவரோடு பழகிய ஒவ்வொருவரும் டி.கே.சி. என்ற மனிதரோடு பழகவில்லை. எங்கும் நிறைந்த இன்ப மயமான கலைத் தேவதையோடு பழகினார்கள்.

# பிரிட்டானியா கலை விழா



சாதகர்களின் ஆதரவு இருக்கிறதோ இல்லையோ, பிரபல வர்த்தக நிறுவனங்கள் சாஸ்திரிய இசை - நடன நிகழ்ச்சிகளைப் பெரிய அளவில் நிகழ்த்த முன்வருகின்றன. முன்பு இந்தியா டொபாக்கோ (ஐ.டி.சி.) நடத்தியது போல இப்போது பிரிட்டானியா பிஸ்கட் தயாரிப்பாளர்கள் சென்னை ராணி சீதை ஹாலில் இம் மாதம் 25, 26 தேதிகளில் நான்கு இசை-நடன நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். ஹரிபிரசாத் சௌராஸியாவின் இந்துஸ்தானி புல்லாங்குழல், அலர்மேலு வள்ளியின் பரத நாட்டியம், மாதவி மட்கல் ஒடிஸி நடனம், பர்வீன் சுல்தானாவின் இந்துஸ்தானி இசை என்று இரண்டு நாட்கள் விழாவே நடத்தி வசூல் (ஒரு லட்சம் ரூபாய் எதிர்பார்க்கிறார்களாம்!) முழுவதையும் அடையாறு வாலண்டரி ஹெல்த் சர்வீஸஸ் மெடிகல் சென்டருக்கு வழங்குகிறார்கள். சமூக சேவைப் பணிகளில் பிரிட்டானியா பம்பாயிலும் கல்கத்தாவிலும் பல துறைகளில் பணியாற்றி வருகிறது. சென்னைக்கும் இப்போது அடிக்கிறது யோகம்! இசைக்கு இசை; சேவைக்குச் சேவை. சபாஷ் பிரிட்டானியா!

-சாருகேசி



# கடிதம் எழுதுவது எப்படி?

**பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும்போது:**

பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும்போது முக்கியமாக மனத்தில் கொள்ள வேண்டிய விஷயம், நம் பெயர் பத்திரிகையில் வர வேண்டும் என்பதே. ஆகவே, ''போனவாரம் சிறுகதை படித்தேன். நன்றாக இருந்தது'' என்று அர்த்தமில்லாமல் குழந்தைத்தனமாக எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். அதையே இப்படி எழுதி அனுப்பினால் பிரசுரமாகும். ''அடேயப்பா, பலே ஆள் சார் நீங்கள். சாதாரணமாக எதற்கும் இளகாத என் இரும்பு மனத்தை உங்கள் பத்திரிகைச் சிறுகதை உருக்கி விட்டது. எங்கே உங்கள் முதுகு? தட்டிக் கொடுக்கக் கை துறுதுறுக்கிறது'' என்று எழுத வேண்டும்.

**டெலிவிஷன் நாடகங்களைப் பாராட்டி எழுதும்போது:**

உங்கள்விமர்சனத்தால்டி.வி.நாடகங்களின் தரம் உயர்ந்துவிடப் போவதில்லை. எனவே டி. வி.யில் உங்கள் பெயர் வாசிக்கப்பட வேண்டும் என்றால் மனச் சாட்சியைத் தூக்கி ஒரு மூலையில் போட்டுவிட்டு எழுத ஆரம்பியுங்கள். டி. வி. நாடகங்களில் இப்போதெல்லாம் புதுமையாக ஒரே சமயத்தில் ஏகப்பட்ட பேர் வரிசையாக நின்றுகொண்டு பேசுகிறார்கள். இதைப் பாராட்டி எழுதும் போது ''டி. வி.யில் எல்லோருக்கும் சான்ஸ் கொடுப்பதில்லை என்கிற புகாரைப் பொய்யாக்கிவிட்டீர்கள். அத்தனை பேருக்கும் ஒரே சமயத்தில் சான்ஸ் கொடுத்த உம்மைப் பாராட்ட வார்த்தைஇல்லை'' என்றுபுகழ்ந்து எழுதவும். ''சென்ற வார நாடகத்தில் கனகா அழுதபோது எங்கள் வீட்டில் எல்லோருமே அழுதுவிட்டோம். நீங்கள் நம்ப வேண்டும் என்பதற்காக எங்கள் வீட்டாரின் கண்ணீரை கடிதத்துடன் ஒரு பாட்டிலில் பார்சலாக அனுப்பி யிருக்கிறேன்'' என்று எழுதவும்.

**கார்ப்பரேஷன் அதிகாரிக்கு:**

(எந்தக் கடிதமும் நாசுக்காக எழுதப்பட வேண்டும்.)

அன்புள்ள ஐயா,


எங்கள் தெருவில் இருக்கும் சில குறைகளை நீக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாம்பலம், கோடம்பாக்கம் என்று எல்லா இடங்களிலும் தெருவுக்கு 30, 35 குழிகள் இருக்கும்போது எங்கள் தெரு மட்டும் சுத்தமாக இருப்பது கஷ்டமாக இருக்கிறது. தவிர, ஒளிவு மறைவாக தெரு முனையில் 'தம்' அடிக்கலாம் என்றால் அதற்கும் வழியில்லை. தெரு விளக்குகள் பளிச் சென்று எரிகின்றன. சில இடங்களில் விளக்குகள் எதுவுமே எரியாமல் சௌகரியமாக இருக்கிறதே அது போல் வசதி செய்து தரவும்.

பின் குறிப்பு: ''கள்ளு, சாராயக் கடைகள் நிறைய இருப்பதால் தேமதுரத் தமிழோசையைக் கேட்க முடிகிறது. நன்றி.''

வெளி நாடுகளில் எலக்ட்ரானிக் வெடிக் காட்சிகளை நடத்துகிறார்கள். கம்ப்யூட்டரில் இசை, வெடிகள் வெடிக்க வேண்டிய வரிசைக் கிரமம் போன்றவற்றை முன்கூட்டி புரோகிராம் செய்து விடுகிறார்கள். பிறகு வானத்திலே வர்ண ஜாலம்தான். கூட அதற்கேற்றாற்போல் இசை. இரண்டும் இணைந்து மாய உலகமே கண்முன் விரியும்.

—நளினி சாஸ்திரி



# என்.டி.ராமராவ் அசந்துபோனார்!

## ஜூடோ ரத்தினம்:

பிறந்தது குடியாத்தத்தில். பள்ளிக்கூடப் பக்கம் போனதாக ஞாபகமில்லை. சிறு வயதிலிருந்தே சிலம்பம், உடற்பயிற்சி, யோகாசனம், பளு தூக்குவது போன்ற கலைகளைப் பயின்றேன்.

ஒரு நிறுவனத்தில் தொழிலாளியாகச் சேர்ந்தேன். இயற்கையாகவே எனக்குத் துடிப்பான சுபாவம். என்னை மில் தொழிற்சங்கத்தின் உதவிச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தார்கள். அத்துடன் கேண்டீன் டைரக்டர் பதவியும் கிடைத்தது. இதனால் தொழிலாளிகளின் சார்பில் நியாயத்துக்காகப் போராட வேண்டியிருந்தது.

சட்னியில் நிர்வாகம் வேண்டுமென்றே உப்பைக் கொட்டும். சாம்பாரில் வேண்டுமென்றே மிளகாய்ப் பொடியை அதிகமாகப் போட்டுச் சுவையைக்கெடுத்தார்கள். சாம்பார் சட்டினியை நான் முன்னதாக டேஸ்ட் பார்த்துவிட்டு அத்தனை பலகாரங்களையும் நானே டோக்கன் கொடுத்து வாங்கி குப்பைத் தொட்டியில் கொட்டி எதிர்ப்பைத் தெரிவித்தேன்.

நிர்வாகம் விர்றென்று செயல்பட்டது. என்னைத் தீவிர கம்யூனிஸ்ட் என்றும், சட்ட விரோதமாக தொழிலாளிகளை நிர்வாகத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிடுகிறேன் என்றும் குற்றம் சாட்டிவேலையை விட்டு டிஸ்மிஸ் செய்ததுடன் வழக்கும் போட்டு ஜெயிலிலும் அடைத்தார்கள். ஆனால் ஒன்று. தொழிலாளியாக எனது பணியில் எந்தத் தவறினையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் என்னோடு என் மனைவியையும் சேர்த்தே ஜெயிலில் தள்ளினார்கள். பத்தே நாளில் விடுதலையானேன். குடியாத்தம் பீடித் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியபோதும் சரி, விவசாயிகள் தங்களுக்குப் போதிய உரம் கிடைக்கவில்லை என்று போராட்டம் நடத்தியபோதும் சரி முன்னெச்சரிக்கையாக 'கம்யூனிஸ்ட்' என்ற போர்வையில் நான் குடும்பத்துடன் சிறைப்பட்டேன். மூன்றாவது முறை சிறையிலிருந்து விடுதலையான நாளன்று என் மனைவி கோவிந்தம்மாளுக்குப் பிரசவம். பெண் குழந்தை. நாங்கள் சிறையிலிருந்த ஞாபகமாக அக்குழந்தைக்கு 'சிறைவாணி' என்று பெயர் வைத்தோம்.

என்னைச் சென்னைக்கு வரவழைத்தவர் முகவை ராஜமாணிக்கம். டைரக்டர் முக்தா சீனிவாசனிடம் சிபாரிசு செய்து 'தாமரைக் குளம்' படத்தின் ஸ்டண்ட் சீன்களில் நடிக்க வைத்தார். நான் ஒரு காட்சியில் நடிகர் டி. கே. பாலசந்திரனை வெட்டிக் கொல்வது போல சீன். பாலச்சந்திரனும் நானும் சண்டை போடுவோம். அடுத்த காட்சியில் ஒரு வாழை மரம் வெட்டப்பட்டு துண்டாகக் கிடக்கும். சிம்பாலிக் ஷாட்!

நான் வட ஆற்காடு மாவட்டத்தில் 1954ம் ஆண்டு குத்துச் சண்டையில் வெள்ளிக் கப்பும், உடற்பயிற்சியில் தங்கப் பதக்கமும் வாங்கியிருந்தேன். திரை உலகுக்கு இது தெரிய ஆரம்பித்ததால் மேலும் பல பட வாய்ப்புக்கள் கிடைத்தன.



✕ போக்கிரி ராஜாவில் ரஜினி - ஜூடோ ரத்தினம்

விட்டலாச்சாரியாவின் தெலுங்குப் படத்தில்நடித்தேன். இரண்டு கைகளில் தீப்பந்தங்களை வைத்துக் கொண்டு சுற்ற வேண்டும். அதை எதிர்க்கும் ஐம்பது வீரர்கள் என்னை நோக்கி அம்பு வீசுவார்கள். படப்பிடிப்புத்தான் என்றாலும் நெளிவு சுளிவுடன் நடிக்க வேண்டிய சீன். படப்பிடிப்பைப் பார்க்க வந்த என். டி. ராம ராம ராவே அசந்து போய்விட்டார்.

இதன் தொடர்ச்சியாக ஒகனேகல் காவேரியில் பந்தங்களை வைத்துக்கொண்டு சண்டை. விடும் காட்சியை எடுத்தார்கள். காற்று அடித்த வேகத்தில் கம்பி பிரிந்து பஞ்சு பறந்து இடது கையில் தீப்பிடித்து எரிந்து போய் விட்டது. விட்டலாச்சாரியா பதறிப் போய் என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்து தானே முழுச் செலவும் செய்து குணமாக்கினார். எவ்வளவு பொறுப்பு வாய்ந்த டைரக்டர் அவர்?

'கைதி கன்னையா' என்ற தெலுங்குப் படத்துக்காக ஒகனேகல் போயிருந்தோம். மலைச் சரிவிலிருந்து விழும் நீர் வீழ்ச்சியின் மேலே ஒரு கம்பியைக் கட்டி அதில் ஒரு குழந்தையுடன் என்னை நடக்கச் சொன்னார்கள். குழந்தை வழுக்கி விழாதபடி எனது இடுப்பில் பெல்ட் போட்டுக் கட்டினார்கள்.

திடீரென்று பெல்ட் அவிழ்ந்தது. குழந்தை நழுவியது. பாலன்ஸ் இழந்ததால் கம்பியும் அறுந்தது. நீர் வீழ்ச்சியில் விழுந்தேன். நீந்தி மலைக்கும் நீருக்குமிடையில் உள்ள பள்ளத்தில் ஒதுங்கிக் கொண்டேன். அங்கே நீர் நாய்கள் இரை தேடி வருவதுண்டு. மேலிருந்து பார்த்தால் நான் மலைச் சரிவில் பதுங்கி இருப்பது தெரியாது. முதலில் குழந்தை பயப்படாமல் இருக்கத் தைரியம் சொன்னேன்.

டைரக்டர் விட்டலாச்சாரியா, காமிராமேன் விச்சு எல்லோரும் ''ஐயோ! ரத்தினத்தையும்காணோம் குழந்தையும்போச்சே'' என்று பதறினார்கள். எங்களைத் தேடுவதற்காக ஐந்தாறு படகுகளை அனுப்பினார்கள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து மீட்புப் படகில் ஏறி மீண்டும் யூனிட்டை





அடைந்தபோது என்னை எல்லோரும் பேயா, பிசாசா என்று ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

ஏவி.எம்.மின் 'ஜெய்சே கோ தைசா' அன்னையும் பிதாவும் படங்களிலிருந்து ஸ்டண்ட் மாஸ்டரானேன்.

வடபழனியில் சில வருடங்களுக்கு முன்பு தமிழ்க் கலை இலக்கிய மகாநாடு நடந்தது. அதில் நூறு வீரர்கள் உடற்பயிற்சி செய்தோம். தவிர சிலம்பம் வாள் சண்டை செய்து காட்டினோம். அந்த நிகழ்ச்சியில் 'தமிழ் சினிமா' ஆசிரியர் ஏ. கரீம் எனக்கு ''ஜூடோ ரத்தினம்'' என்று பெயரிட்டார்.

சிறந்த நடிகர் நடிகை, கதை வசன கர்த்தா டைரக்டர் என்றெல்லாம் அரசாங்கமும், மற்ற நிறுவனங்களும் பரிசு கொடுக்கின்றன. ஆனால் உயிரைத் திரணமாக மதித்து, ஹீரோவுக்கும் வில்லனுக்கும் திரை மறைவில் டூப்பாகச் செயல்படும் வீரர்களுக்குப் பரிசு கொடுப்பதில்லை. இதில் எனக்கு வருத்தமே.

'கொஞ்சும் சலங்கை' படத்தில் மனோகருக்கு டூப் போட்ட சீத்தாராமன் என்பவர் தீயில் எரிந்து போய் இன்று வாழ வழியற்றவராகப் பிச்சை எடுக்கும் நிலையிலிருக்கிறார். இதேபோல நடராஜன் என்ற வீரர் ஒரு படத்தில் நடித்தபோது துண்டு துண்டாகி மரணமடைந்தார். இப்படி எத்தனையோ.

ஒரு படம் சிறப்பாக ஓடினால் புகழ் கிடைப்பது நட்சத்திரங்களுக்கு. ஆனால் இன்னல் படுவது நாங்கள். ஸ்டண்ட் நடிகர்கள் சங்கத்தில் பலர் இன்று எலும்பும் தோலுமாகக் காட்சியளிப்பது வேதனையான அனுபவம். அத்தனை பேருக்கும் மாதா மாதம் வேலை கிடைப்பதில்லை. வறுமையில் வதங்குகிறார்கள்.

நாங்கள் வீர தீர பராக்கிரமர்களாக படத்தில் நடித்துவிட்டுத் திரை மறைவில் அழுதுகொண்டே வாழ்கிறோம்.

எங்கள் நல்வாய்ப்புக்கு ஏற்ற சட்டங்கள் இயற்ற வேண்டியது அரசின் கடமை.

**பேட்டி: மன்னை சௌரிராஜன்**

# மண்ணில் தெரியுமோ வானம்?

## 12

அன்றைக்கும் தபால்காரன் ஒரு கடிதத்தை ஜன்னல் வழியாக உள்ளே வீசிவிட்டுப் போனான். கூடத்தின் ஜன்னலடியில் படுத்துக் கொண்டிருந்த அகிலாவின் முகத்தில் அந்தக் கடிதம் வந்து விழ, அவள் எடுத்துக் கவரைப் பிரிக்காமல் பின் பக்க விலாசத்தை மட்டும் பார்த்தாள். வனஜா போட்டிருந்தாள். இதோடு இவள் மூன்று கடிதங்கள் போட்டுவிட்டாள். மூன்றிலும் விஷயம் ஒன்றுதான்.

'பிரியமுள்ள அம்மா சந்நிதியில் வனஜா அநேக தெண்டம் சமர்ப்பித்த விண்ணப்பம். இப்பவும் இவ்விடம் மாப்பிள்ளையும் நானும் சௌக்கியம். அங்கு நீங்கள் சௌக்கியமா? நீ உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கிறாயா? அகிலா எப்படி இருக்கிறாள்? சியாமளா குளித்துக் கொண்டிருக்கிறாளா?

'இங்கே என் மாமியார் உங்காத்துல எப்போ வளைகாப்பு வச்சிக்கப் போறாளாம்? உனக்கு லெட்டர் வந்ததான்னு தினமும் கேட்கறா... நீ அதற்காக நாள் குறிச்சு லெட்டர் போட்டு நேரில் யாரையாவது அனுப்பி என்னை அழைச்சுண்டு போ. இவா யாரும் சிரிக்காதபடி கணிசமாகச் செய்து அனுப்பு. வேறு விசேஷமில்லை. உடனே விவரமாகப் பதில் போடு. மணியிடம் சொல்லு.

இப்படிக்கு வனஜா.

எல்லாக் கடிதங்களிலும் இதே வாசகம் தான். இவள் அம்மாவுக்குப் படித்துக் காட்டினாள். மௌனமாகக் கேட்டுக் கொண்டாளே தவிர அம்மா எந்தப் பதிலும் சொல்லவில்லை. இரண்டாவது கடிதம் வந்ததும் இவளாக அம்மாவிடம் கேட்டாள்.

''ஏம்மா, வனஜாவுக்கு என்ன பதில் எழுதறது?''

அம்மா மிகவும் விரக்தியாகச் சொன்னாள்,

''என்னத்தை எழுதச் சொல்றே... 'இவ்விடம் எல்லோரும் க்ஷேமம். அவ்விட க்ஷேமத்தைத் தெரிவிக்கவும்'னு எழுதிப் போட்டுடு....''

''அதில்லேம்மா... வளைகாப்பு பண்ண நாள் குறிச்சு எழுதச்சொல்லியிருக்காளே?''

''அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? முதல் லெட்டரை மணி கிட்டே காட்டினேன். அவன் பதிலே சொல்லாமல் போயிட்டான். இதையும் காட்டறேன், என்ன சொல்றான்னு பார்ப்போம்....''

இரண்டாவது கடிதத்தை அன்று மாலை மணி வந்ததும் அவனிடம் கொடுத்தாள். அவன் கடிதத்தைக் கையில் வாங்காமலே ''என்ன?'' என்று கேட்டான்.

''வனஜா லெட்டர் போட்டிருக்கா...''

''சரி....'' என்று ஒரு வார்த்தை பதிலில் மேலே பேசுவதற்கான சந்தர்ப்பத்தைக்



கொடுக்காமல் உள்ளே போகத் திரும்பினவனை அந்தம்மாளே மீண்டும் கூப்பிட்டு நிறுத்தினாள். அவன் முகம் சிணுங்கத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன?''

''அவனுக்கு என்ன பதில் எழுதச் சொல்றே?''

''என்னைக் கேட்டால்? உனக்கு என்ன தோணறதோ எழுதேன். இத்தனை நாள் என்னைக் கேட்டா எழுதினே?''

''அதில்லேடா... வளைகாப்பு எப்போ வச்சுக்கலாம்னு...''

''ஏம்மா, இப்போ வளை காப்பு பண்ணித்தான் ஆகணுமா? அப்பாவுக்குப் பட்ட கடனையே இன்னும் அடைக்கலே. என் கல்யாணக் கடன் வேறே பாக்கி நிக்கறது. இந்த நிலைமையில் இது அவசியமா?''

''என்னடா இப்படிக் கேக்கறே. வளை காப்பு பண்ணாமல் இருப்பாளாடா...? அடுத்தடுத்த குழந்தைக்குப் பண்ணிண்டா இருக்கப் போறோம்? தலைச்சன் குழந்தைக்கு பண்ணித்தானே ஆகணும்?''

''ஆகணும்கிறது என்ன சாஸ்திரமா? ஏதோ அந்தக் காலத்தில சக்தி இருந்தது. இதையெல்லாம் பண்ணிண்டு இருந்தா. இப்போ யாரும்மா பண்ணிண்டிருக்கா?... அவனவன் ரெண்டு வேளை சாப்பாடு கிடைச்சால் போதும்னு இருக்கான். வளை காப்பு நடத்தலேன்னு குழந்தை பிறக்காமலா இருந்துடப் போறது? அப்படியே வயிற்றிலேயா தங்கிடப் போறது?''

அதற்கு அந்தம்மாளால் பதில் சொல்ல முடியவில்லை. சொல்கிற சக்தியோ, தைரியமோ வரவில்லை. ஒரு விநாடி பேசாமல் இருந்து பின்,

''என்னமோ உன் இஷ்டப்படி பண்ணுப்பா. அதுக்கு மேலே நான் என்ன சொல்லப் போறேன்?'' என்றவள் மீண்டும் அதே இடத்தில் சுருண்டு படுத்துக்கொண்டு விட்டாள்.

அந்தக் கடிதம் வந்து பத்து நாட்களாகி விட்டன. அதற்குப் பதில் இல்லாமல் போகவே மீண்டும் வனஜா கடிதம் போட்டிருக்கிறாள். இதிலும் அதே வாசகங்கள்தான் இருக்கும். இல்லாவிட்டால் சற்று வார்த்தை மாறி அதே அர்த்தம்தான் தொனிக்கும்.

அகிலா கடிதத்தைப் பிரித்துப் பார்க்கவில்லை. அம்மாவிடமும் சொல்லவில்லை. அவனிடம் சொல்வதில் ஒரு அர்த்தமும் இல்லை என்று படவே படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்து போய் சமையலறை அலமாரியில் கடுகு டப்பாவின் அடியில் கடிதத்தை வைத்தாள். பின் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தபோது மனம் மிகவும் சோர்ந்து போயிருந்தது. வனஜாவை நினைத்தபோது கஷ்டமாக இருந்தது. அவளுடைய நிலைமையும் இக்கட்டானதுதான். அவள் தன் மாமனார் மாமியாருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவள். ஒரு வளை காப்புக்குக் கூட உங்கம்மாவாத்துல வக்கு இல்லாமலா போச்சு? என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவள். என்ன பதிலைச் சொல்ல முடியும்? மௌனமாக நிற்க வேண்டியதுதான். இல்லாவிட்டால் அழுது பலவீனத்தை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டியது.

வனஜாவின் மாமியார் அத்தனை சுலபமாக விட்டுவிடக் கூடியவள் இல்லை. இதை வனஜாவின் குழந்தைக்குக் குழந்தை பிறக்கிறவரை சொல்லிக் காட்டுவாள். குத்தலாகப் பேசுவாள். இதையே சாக்காக வைத்து பிரசவத்துக்குக் கூட இங்கே அனுப்பாமல் போகலாம்.

அப்படி அனுப்பாமற் போனாலே தேவலாம் என்று தோன்றியது அகிலாவுக்கு. வனஜா வேறு இங்கே வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டால் இவள்தான் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். காலை காப்பி, பத்து மணிக்குச் சாப்பாடு, மூன்று மணிக்குத் திரும்பவும் காப்பி, ராத்திரி ஏழு மணிக்கு மறுபடியும் சாதம்....





# அருள் வாக்கு

"தனக்கு மிஞ்சி தான தர்மம் என்று தானே சொல்லியிருக்கு? நீயே சிரம தசையிலிருக்கிறபோது மற்றவர்களுக்காக வேறு ஏன் சிரமப்படுகிறாய்?" என்று கேட்கத்தான் கேட்பார்கள். அப்போது, "நான் சிரம தசையில் இருக்கிறேன் என்றால் பூர்வ ஜன்மாவில் ஈசுவராக்ஞைகளை ஸரியாகப் பண்ணாததற்கு இது தண்டனை என்றே அர்த்தம்; போன ஜன்மத்தில் நான் பிறத்தியாருக்கு எந்த உபகாரமும் தொண்டும் பண்ணாததால்தான் இப்போது கஷ்டப்படுகிறேன்; அதனாலேயே இப்போது நிச்சயமாக நான் பரோபகாரம் செய்தாக வேண்டும்; தனக்கு மிஞ்சி – போன ஜன்மாவின் (கர்ம) பாக்கியாக, அப்போதைய உடம்பு போன பிறகும் மிஞ்சி—இப்போது வந்து சேர்ந்திருக்கும் இந்தக் கஷ்டம்தான் 'தனக்கு மிஞ்சி'; இது தீருவதற்காகவே தர்மம் செய்தாக வேண்டும்; அதுதான் "தனக்கு மிஞ்சி தான தர்மம்"; நீர் அதற்கு வேறு ஏதோ தப்பர்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்; இப்போது நான் தன்னையும் மிஞ்சி – அதாவது என் சொந்தக் கஷ்டத்தையும் மிஞ்சி – தர்மம் பண்ணினால்தான் வருங்காலத்திலாவது நன்றாயிருப்பேன்" என்று பதில் சொல்ல வேண்டும்.

தான் எத்தனை கஷ்டப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் அதற்கு மேம்பட்டு வெளியிலே வருவதுதான் தனக்கு மிஞ்சுவது. இப்படி வந்து லோகத்துக்கு உபகரிப்பதுதான் "தனக்கு மிஞ்சி தர்மம்" என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

இது ரொம்ப ஹை லெவலில் – (உயர் மட்டத்தில்). லோயர் லெவலில் (அதற்குக் கீழ்ப்பட்ட நிலையில்) பிறருக்குத் திரவிய சகாயம் செய்வதற்காகவே தான் மிச்சம் பிடிக்கும் விதத்தில் வரவுக்குள் செலவை அடக்கி, கடன் கஸ்தி இல்லாமல் சிக்கனமாக வாழ வேண்டும்.

**-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்**

இப்போதே அவளுக்கு மூச்சு முட்டுவது. வீட்டு வேலைகளையும் செய்து, மணிக்கும் சியாமளாவுக்கும் கேரியர் தயார்ப்படுத்தி, அம்மாவைக் கவனித்து, ஆஸ்பத்திரிக்கும் போய் வருவதென்பது முடியாத காரியம். அதைவிட வனஜா வராமற் போனாலே தேவலாம் என்று அவள் நினைத்தாள். உடனே தன்னால் முடியாத நிலையில் தான் நினைக்கிற மாதிரிதானே மணியும் நினைப்பான் என்று தோன்றியது. தன்னால் உடம்பால் செய்ய இயலாமற் போகிறது என்றால் அவன் பணத்தால் செய்ய முடியாது என்கிறான். அதை வெளிப்படையாகவே சொல்லியும் விடுகிறான். நிதானமான, சாதாரண வார்த்தைகளிற் சொல்லாமல், கோபமும், வெறுப்பும், எரிச்சலும் மிகப் பேசிவிடுகிறான். அவ்வளவுதான் வித்தியாசம்.

'அது மட்டும்தான் வித்தியாசமா?' என்று கேட்டுக் கொண்டபோது அவளுக்குள் உறுத்தலாக இன்னொரு விஷயமும் நெருடிற்று. அவனுடைய இதே இயலாமை சியாமளாவின் விஷயத்தில் மட்டும் ஏன் ஏற்படாமல் போகிறது என்று தோன்றியது. அவள் மறுக்கப்படாதவளாகிறாள். அவளைப் பொறுத்தவரை இவன் மறுக்க முடியாதவனாகிறான். இந்த வித்தியாசம்தான் எல்லாரையும் கஷ்டப்படுத்துகிறது. அம்மாவை இன்னமும் அடித்துப் போட்டு விடுகிறது. எல்லாருக்கும் எல்லாமும் சமமாக மறுக்கப்படுகிற பட்சத்தில் அந்த மறுப்பைப் பாராட்ட முடியும். ஒப்புக் கொள்ளமுடியும். ஆனால் மணி அப்படிச் செய்வதில்லையே... தங்கைக்கும் அக்காவுக்கும் மறுக்கப்படுவது மனைவிக்கு மறுக்கப்படுவதில்லையே...

மணி ஏன் இப்படி இருக்கிறான்? ஒருவேளை கல்யாணமானால் எல்லா ஆண்களும் இப்படித்தான் நடந்து கொள்வார்களோ? ராம்ஜியும் இதே மாதிரித்தான் இருப்பானோ? வனஜாவின் கணவன், சரோஜாவின் கணவன் எல்லாம்கூட இப்படித்தானோ? தனக்குக் கல்யாணமானால் தன் கணவனும் இதுபோல்தான் நடந்து கொள்வானோ?

அதை நினைத்ததும் அவளுக்குக் கல்யாணத்தின் மீதே வெறுப்பு ஏற்பட்டது. தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று முடிவு பண்ண வைத்தது. கூடப் பிறந்தவர்களையும் பெற்றவர்களையும் அந்நியமாக்குவதற்காகவா ஒரு கல்யாணம்? அவர்களின் நியாயமான தேவைகள் நிராகரிக்கப்படுவதற்கா? எது அவர்களை இப்படி நடந்து கொள்ளச் செய்கிறது?

யோசிக்க யோசிக்க அவளுக்குள் எதுவோ பிடிபடுகிற மாதிரி இருந்தது. அதன் மூலம் காரணம் தெரிகிறாற்போல் தோன்றியது.

ஒவ்வொரு ராத்திரியும் முன் அறையில் நிகழ்கிற சில நிகழ்ச்சிகள் மனதிற்குள் வந்து போயின. சியாமளா அந்த வீட்டிற்கு வந்த நாளாக அவர்களுக்கென்று அவள் தன் அறையை ஒழித்து விட்ட நாள் முதலாக நிகழ்கிற விஷயம்தான்...

இவள்கூடத்து ஓரமாகப் படுத்துத் தூக்கம் வராமல் இருட்டை வெறிக்கிற போதெல்லாம் முன் அறையின் சலனங்கள் இவளின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அந்த வளையல் சப்தமும், கிசுகிசுக்கிற பேச்சும் ராத்திரி நேரத்தின் நிசப்தத்தில் துல்லியமாகக் காதை எட்டியிருக்கிறது. அப்போதெல்லாம் இவள் மனது இவளுக்கும் அடங்காமல் சண்டித்தனம் பண்ணியிருக்கிறது.

அறைக்குள் பேசப்படுகிற எதையும் கவனிக்கக் கூடாது என்று அறிவால் உணர்ந்திருந்தாலும் உணர்வு பூர்வமாக முடியாமல் தடுமாறினாள். இவளையும் மீறி மனம் அறைக்குள்நடக்கிற விஷயங்களில் லயிக்கும். தானாகக் கற்பனையில் இறங்கும். மணி சியாமளாவை அணைக்கிற மாதிரி, முத்தமிடுகிற மாதிரி, பின்னர்...பின்னர்...

இவள் சடாரென்று சுய நினைவு பெற்றவளாக உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக்கொள்வாள். கவிழ்ந்து படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொள்வாள். கண்ணீரரம் கோடிட்டுக் கன்னத்தில் இறங்கி, உதட்டில் உப்புக் கரிப்பதை உணருவாள். 'கடவுளே, கடவுளே! என் மனசை அடக்கேன்' என்று முனகிச் சட்டென்று ஒரு பயம் மனத்தைக் கவ்வ அம்மா கேட்டிருப்பாளோ, அல்லது தான் அழுவதைப் பார்த்திருப்பாளோ என்று கண்களைத்துடைத்துக் கொண்டு மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்ப்பாள்.

அம்மா இந்த உலகத்தின் ஸ்மரணையற்று தூங்கிக் கொண்டிருப்பது தெரியும். சில சமயங்களில் இவள் நிஜமாகத்தான் தூங்குகிறாளா என்கிற சந்தேகம் கூட வரும். அத்தனை கவலைகளுக்கிடையில் தூக்கம் கூட வருமா? எப்படி வரும்? ஒருவேளை வெறுமனே கண்ணை மூடிப் படுத்துக்கொண்டிருக்கிறாளோ? அப்படியானல் இவளுக்கும் முன் அறையிலிருந்து வரும் கிசுகிசுப்பும் வளையோசையும், பேச்சொலியும், கட்டிலின் கிரீச்சிடலும் கேட்டிருக்குமோ? தான் அவைகளைக் கேட்டு உணர்ச்சி வசப்படுவது தெரிந்தால் என்ன நினைத்துக் கொள்வாள்? எத்தனை கேவலமான பெண் இவள் என்று நினைப்பாளோ?

அம்மா தன்னைக் கவனிக்கிற உணர்வில் இவள் அசையாமல் தூங்குகிற பாவனையில் படுத்துக் கொண்டிருப்பாள். கண்கள் வெறுமனே மூடிக் கிடக்கும். அடுத்து பத்து நிமிடங்களில் முன் அறை விளக்கின் ஸ்விட்ச் போடப்படுகிற சத்தம் கேட்கும். கதவு திறக்கப்படுகிற ஓசை வரும். மெட்டி சத்தம் சமையலறை வரை போய் குடத்தைச் சரித்துத் தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பும். மீண்டும் முன் அறைக் கதவு மூடப்பட்டு உள்ளே கிசுகிசுக்கிற சத்தம் கேட்கும்.

''எதுக்கு சியாமளி தினமும் இப்படி எழுந்து போயிட்டு வரே? இங்கேதான் தண்ணி கொண்டு வந்து வச்சிருக்கியே?''

''தண்ணிக்காகப் போகலே. உங்க தங்கை தூங்காமல் முழிச்சிண்டிருந்து உள்ளே நடக்கிறதை யெல்லாம் சாவித் துவாரம் வழியாகவோ, கதவுச் சந்து வழியாகவோ பார்ப்பாளோன்னு ஒரு சந்தேகம். அதனுல தான்எழுந்து போய்ப்பார்த்துட்டு வரேன்.''

அன்றைய தினத்திலிருந்துதான் இவள் ராத்திரி நேரங்களில் செவிடாக மாறிப் போகத் தெரிந்து கொண்டாள். மரக் கட்டையாகக் கிடக்கப் பழகிக் கொண்டாள். பழகிப் பழகி அந்த மரக்கட்டைத் தனம் ராத்திரி மட்டுமின்றி எல்லா நேரங்களுக்கும், எல்லா விஷயங்களிலும் வந்து விட்ட உணர்வில் காப்பியைக் கலந்து எடுத்துக் கொண்டு அம்மாவை எழுப்பப் போனுள். அவள்... (தொடரும்)



## ''குழந்தை இலக்கியத்துக்கு இடமளியுங்கள்!''

● பல்கலைக் கழகங்களில் மொழித் துறை, அறிவியல் துறை எனப் பல்வேறு துறைகள் உண்டு. குழந்தை இலக்கியத் துறை எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. குழந்தை இலக்கியத்தின் இன்றியமையாத் தன்மையை நமக்கு எடுத்தியம்பியவர் வள்ளியப்பா. தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் இதனைக் கவனத்தில் கொண்டு குழந்தை இலக்கியத் துறைக்கும் இடமளித்து, அதன் வளர்ச்சிக்குத் துணையாக அமைய வேண்டும்.

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா மணிவிழாவில் டாக்டர் தமிழண்ணல் கூறக் கேட்டவர்:

குன்றக்குடி பெரியபெருமாள்



குக்கிங் காஸ்
ஒரு அனுகூலமா
அல்லது
ஆபத்தா?
...அது உங்கள்
கையில்தானுள்ளது!
குக்கிங் காஸ், சுத்தமானது, சிக்கனமானது. பாதுகாப்பானது. உண்மையிலேயே குடும்பத் தலைவிக்கு ஒரு வரப்பிரசாதம் தான். ஆனால் சில பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படவில்லையானால் அதுவே வெடிக்கக் கூடிய ஆபத்தாய் அமையக்கூடும்! உங்கள் காஸ் சிலிண்டர் முழுமையும் பாதுகாப்பானது —சரியாக பயன்படுத்தினால். அதனுள் அழுத்தத்துடன், உடனே பற்றக்கூடிய லிக்யூ:பைடு காஸ் அடங்கியுள்ளது. காஸ் கசிவு ஏற்பட்டால் உடனே உணர்வதற்கு உதவியாய் ஒரு வாடைக் கலக்கப்பட்டுள்ளது.
காஸ் வாடை?
ஒரு எச்சரிக்கை—
அதைப் புறக்கணிக்காதீர்கள்.
• உடனே அடுப்பு, ஹாட் ப்ளேட்ஸ், அகல் விளக்கு மற்றும் அகர் பத்திகளைக்கூட அணைத்து விடுங்கள். அகர்பத்தியின் சிறிய தீப்பொறிக்கூட வெடித்து விபத்தை ஏற்படுத்தும்.
• ஜன்னல்கள், கதவுகள் எல்லாவற்றையும் திறந்து விட்டு காஸ் வெளியேறும்படி செய்யுங்கள்.
• மின்சார ஸ்விட்சுகளைக்கூடத் தொடாதீர்கள்—ஸ்விட்சினுள் ஏற்படும் சிறிய பொறி தீ விபத்திற்கு காரணமாகலாம். காற்றோட்டத்திற்காக மின் விசிறிகளை 'ஆன்' செய்யாதீர்கள். மின் விசிறி 'ஆன்' செய்தே யிருப்பின் அதை நிறுத்த வேண்டாம்.
• காஸ் வாடையை தொடர்ந்து உணர்ந்தால், உடனே உங்கள் இன்டேன் வினியோகஸ்தரை அழைத்திடுங்கள்.
நினைவிருக்கட்டும். குக்கிங் காஸ் மிகவும் பாதுகாப்பான சமையல் சாதனமாகும். ஆனால் உங்களுடைய கவனக் குறைவு உங்கள் உயிருக்கே ஆபத்தாய் விளையும். அதைத் தவறுகப். பயன்படுத்தாதீர்கள்.
இடர்பாடு ஏதும் ஏற்பட்டால் உங்கள் இன்டேன் வினியோகஸ்தரையோ அல்லது உங்கள் அருகாமையிலுள்ள இந்தியன் ஆயில் கஸ்டமர் சர்வீஸ் அமைப்பையோ அணுகவும்.
Indane
இன்டேன் குக்கிங் காஸ்
பொதுமக்களின் நன்மைக்காக
வெளியிட்டோர்:
இந்தியன் ஆயில்
கார்பொரேஷன்
லிமிடெட்
Shilpi ioc! 5/82 Tam.

The Lashing Leak

Karunanidhi has leaked a Commission Report kept under wraps by the MGR Government. What really compelled him into this risky action? A 'tell-tale' letter?

Married to Die

மதுராந்தகம் மர்ம மரணம்

2 குழந்தைகளை சுட்டு கொன்றுவ்

போலீஸ் அதிகாரியை சுட்டு காதலி தற்கொலை

சென்னை பெண் டாக்டரின் பரிதாப முடிவு

திருமணத்திற்கு 1 நாள் முன்னர்: மர்மச் சாவு

MYSTERIES UNSOLVED

Murders on Contract

LOVE LIES BLEEDING

Love Snuffed Out Life

ஒரு காலத்தில் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் தமிழக போலீஸ் முதலாவதாக இருந்தது. ஆனால் தற்போது...? துப்புத் துலக்கப்படாமலே பல கொலை, தற்கொலைக் கேஸ்களே இருக்கின்றன. தற்கொலைக்கான காரணங்கள் என்ன, கொலையாளிகள் யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. சாம்பிளுக்குச் சில:

- திண்டுக்கல்லைச் சேர்ந்தவர் மாலா. வயது 18. சென்னையைச் சேர்ந்த பகலவன் என்பவரை மணந்து கொண்டார். கல்யாணம் ஆன மூன்று மாதங்களில் 5–3–82 அன்று மர்மமான முறையில் இறந்துபோனார். திண்டுக்கல்லிலிருந்து அவருடைய தந்தை வருவதற்குள் சென்னையில் பிணம் புதைக்கப்பட்டு விடுகிறது. இந்த மரணத்தைப் பற்றி கருணாநிதி அவர்கள் சட்ட மன்றத்திலேயே பேசியிருக்கிறார். வரதட்சிணைக் கொடுமையே காரணம் என்று கூறப்படுகிறது.

- 700 கோயில்களின் சரிபார்ப்பு அதிகாரியாக வேலை செய்தவர் சுப்பிரமணிய பிள்ளை. 24–11–80 அன்று திருச்செந்தூர் கோயில் விடுதியில் உள்ள குளியல் அறையில் மர்மமான முறையில் தூக்கில் பிணமாகத் தொங்கினார். இந்த மரணத்தைப் பற்றி விசாரித்த பால் கமிஷன், சுப்பிரமணிய பிள்ளை 'மரணத்தை விளைவிக்கக் கூடிய வன்முறையின் காரணமாக மரணத்தைத் தழுவியிருக்கலாம் என்று நம்புவதற்கு ஆதாரங்கள் உள்ளன' என்று கூறியது. கொலையாளி... கண்டுபிடிக்கப்படவில்லை.

- திருவள்ளூர் அருகே உள்ள புட்லூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் காண்ட்ராக்டர் தண்டபாணி. ஆற்றுப் படுகைகளில் மணல் எடுக்க ஆளும் கட்சி எம்.எல். ஏ. உதவியுடன் குத்தகை எடுத்தார். 1977 அக்டோபரில் மர்மமான முறையில் ஆற்றின் அருகே உள்ள குட்டையில் பிணமாக மிதந்தார். இவரது மரணத்துக்குக் காரணம்?

- இந்திரா நகரைச் சேர்ந்தவர் பிரேமா. 35 வயது. பட்டப் பகலில் கழுத்து நெறிக்கப்பட்டு இறந்து போகிறார். கணவர் தனியார் நிறுவனத்தில் அதிகாரி. 1977ல் நடந்த இந்த மரணத்துக்குப் பின்னால் உள்ளவர்கள்....? இந்த மரணத்தைப் பற்றிப் பல தடவைகள் சட்ட மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது.

- புகழேணியின் உச்சியில் இருந்தார் ஷோபா. 21 வயதில் மரணத்தைத் தழுவினார். மர்மமான முறையில் படுக்கை அறையில் தூக்கில் தொங்கி இறந்ததற்கான ஆதாரங்களுடன் இறந்துகிடந்தார். 1.5.80ம் தேதி நடந்த இந்த மர்ம மரணத்தைப் பற்றி போலீஸார் இன்னும் விசாரித்துக் கொண்டிருக்கின்றனர்.

- மதுராந்தகத்தில் உள்ள அ. தி. மு. க. எம். எல். ஏ.யின் ஆபீஸ் அலுவலகத்தில் தூக்கில்தொங்கியபடி பிணமாகக் கிடந்தாள் ஞான சவுந்தரி என்ற அரிஜனப் பெண். வயது 17தான். இறந்தபோது கர்ப்பமாக இருந்தாள். 9–3–81 அன்று நடந்த இந்த மரணத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யார்?

- திருச்சி உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள ஒரு சத்துணவுக் கூடத்தில் பாலசேவிகாவாக இருந்தார் விதவைப் பெண் மணி ராஜகாந்தம். அழகாக இருந்த காரணத்தால் மனிதாபிமானமற்ற ஆண்களால் தொல்லை கொடுக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு முன் மரணம் அடைந்தார். இவரது மரணத்துக்குக் காரணம் ஆளும் கட்சிக்காரர்கள் தான் என்று எதிர்க்கட்சியினரும், பொதுமக்களும் பேசிக் கொள்கிறார்கள்.

—நமது நிருபர்கள்

# திறமை எங்கே போயிற்று?

# அவர் ஆசைப்பட்டது..

வராந்தாவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி அன்றைய தினசரியைப் புரட்டிக்கொண்டிருந்த லோகுவை—கையில் காப்பி டம்ளரோடும், மனசில் பயத்தோடும் நெருங்கினாள் விசாலம். மெல்லிய குரலில் வார்த்தைகள் நடுங்கக் கேட்டாள்:

"லோகு! நான் சொன்னதை யோசிச்சியாடா?"

காப்பி டம்ளரை வாங்கி ஒரு வாய் குடித்துவிட்டுத் தாயை முறைத்தான் லோகு. "யோசிச்சேன்மா! நல்லா யோசிச்சேன்! நீ செய்யப் போற பைத்தியக்காரத்தனமான காரியங்களுக்கெல்லாம் நான் சம்மதிக்கிறதில்லே யென்று முடிவு பண்ணிட்டேன்."

விசாலத்தின் முகம் சுண்டியது. "செத்த அப்பனுக்கு வருஷ திதி போடறது பைத்தியக்காரத்தனமாடா?"

"நிச்சயமா அது பைத்தியக்காரத்தனந்தான்! முட்டாள்தனம்தான்! செத்துப்போனவங்களுக்காக வேலை மெனக்கெட்டு வருஷா வருஷம் படையல் போட்டு புது வேஷ்டி வெச்சுக் கும்பிடறது கடைஞ்செடுத்த முட்டாள்தனம்தான்! உயிரோட இருக்கிறவங்களுக்கே திங்கச் சோத்தைக் காணோம்... கட்டிக்க வேட்டியைக் காணோம்! இந்த லட்சணத்துலே என்னிக்கோ செத்துப்போனவங்களுக்காகப் படையலும், வேட்டியும், பூஜையும்.... சே!"

விசாலத்தின் கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

"அப்படிச் சொல்லாதேடா லோகு! செத்துப்போனவங்களோட உடம்புதான் அழிஞ்சு போயிடுதே தவிர ஆத்மா அழியாமேதான் இருக்குமாம். அவங்களை மறக்காமெ இருக்கிறதுக்காகத்தான் இந்தத் திதியைப் போடறது! அப்பா செத்துப்போய் நாளையோட ஒரு வருஷம் முடியப் போறதுடா... அவரோட ஞாபகார்த்தமா ஒரு வேட்டியை வெச்சுக் கும்பிட்டு நீயே கட்டிக் கோடா!"

"எனக்குத்தான் வேட்டியைக் கட்டிப் பழக்கமில்லேயேம்மா!"

"அப்போ அந்த வேட்டியை யாராச்சும் ஒரு சாமியாருக்குக் கொடுத்துடலாம். அப்பாவோட ஆத்மா சந்தோஷப்படும்..."

முகம் சிவந்தான் லோகு. "அம்பது ரூபாயைப் போட்டு ஒரு வேட்டியை எடுத்து பூஜையிலே வெச்சுக் கும்பிட்டு அதைச் சாமியாருக்குக் கட்டிக்கக் குடுத்தா அப்பாவோட ஆத்மா சந்தோஷப்படுமா? எம். ஏ.வை முடிச்சுட்டு ஒரு பெரிய கம்பெனியில அக்கௌண்டண்டா இருக்கிற உன்னோட மகன்கிட்டச் சொல்லாதே!"

"தினம் தினம் என்னோட கனவிலே உங்கப்பா வர்றார்டா... கிழிஞ்ச வேட்டியோடு நம்ம வீட்டுக்கு முன்னாடி நின்னுட்டு, 'ஒரு வாய் சோறு கொடேண்டி விசாலம்னு' கேக்கறார்டா!"

"இந்தப் பத்து நாளாவே உன்னோட மனசுல அப்பாவுக்குத் திதி போடணும்கிற எண்ணம் நல்லா ஊறியிருக்கு. மனசுல புதைஞ்சு போயிருக்கிற எண்ணந்தான் ராத்திரி தூங்கும்போது கனவா வெளிப்படுது. அப்பாவோட கனவு எனக்கு மட்டும் வர்றதில்லையே ஏன்?" — குதர்க்கமாய்க் கேட்டான் லோகு.

விசாலம் நொந்த மனசோடு பொங்கி வந்த அழுகைக்கு அணை போட்டபடி சொன்னாள். "சரிடா... லோகு... உன்னோட இஷ்டப்படி திதிக்குப் படையலும் வேண்டாம் வேட்டியும் வேண்டாம். உங்கப்பாவுக்கு உசிரான ஒரே ஒரு பண்டத்தை மட்டும் வெச்சுக் கும்பிடலாம்."

"சுருட்டா?" — லோகுவின் உதட்டில் கேலி உட்கார்ந்தது.

"பூஜையில வெச்ச சுருட்டை நிச்சயமா அப்பா வந்து குடிக்கப் போறதில்லே. எனக்கும் அதைக் குடிச்சுப் பழக்கமில்லே. சுருட்டைத் தூக்கித்தான் எறியணும்... ஒரு நாலணாவுக்குச் சுருட்டை வாங்கி வேஸ்ட் பண்ணணுமா என்ன?"

விசாலம் உடைந்துபோன குரலில் கேட்டாள்:

"டேய் லோகு... என்னோட திருப்திக்காவது அப்பாவுக்குத் திதி போட மாட்டியா?"

"என்னை மன்னிச்சுடம்மா... இந்த மாதிரியான மூடப் பழக்கங்களை எல்லாம் ஒப்புக்குச் செய்யக்கூட எனக்குப் பிரியமில்லே. வேணுமானா அப்பாவோட போட்டோவில ரெண்டு ஊதுபத்தியைச் செருகி வை! கையெடுத்துக் கும்பிடறேன்."

விசாலம் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் வாசல் பக்கமிருந்து எதிர் வீட்டுப் பர்வதத்தின் குரல் கேட்டது.

"என்ன விசாலம்? நான் காய்கறி வாங்க மார்க்கெட் போறேன். வர்றியா?"

விசாலம் இருள் கப்பிய முகத்தோடு மார்க்கெட்டுக்குப் பர்வதத்துடன் வெளியேறினாள்.

விசாலம் மார்க்கெட்டுக்குக் கிளம்பிப் போய் ஐந்து நிமிடம் கூட இருக்காது.

அந்த நீல நிறப் படகுக் கார் லோகுவின் வீட்டு வாசலில் வெட்டிய கேக் துண்டமாய் வந்து நின்றது. காரிலிருந்து கருநீலக் கோட் சூட்டில் செவேலென்று வழுக்கைத்

தலையோடு நடுத்தர வயதில் ஒருவன் இறங்கினான்.

வாசற்படி ஏறி லோகுவிடம் கேட்டான். மரியாதை ததும்பும் பவ்யமான குரல்.

''தெய்வசிகாமணி ஸாரோட வீடு இது தானே?''

''ஆமா! நீங்க....?''

''எம்பேரு சுந்தரமூர்த்தி... அவரோட மாணவன்!''

''வாங்க... உள்ளே வாங்க... நான் அவரோட பையன் லோகநாதன்!''

''ஐஸீ? க்ளாட் டு மீட் யூ!'' — லோகுவின் கையைப் பற்றிக் குலுக்கிக்கொண்டே உள்ளே வந்தான் சுந்தரமூர்த்தி. வெகுநாள் பழகியவன் மாதிரி சரளமாய்ப் பேச ஆரம்பித்தான். ''என்னோட குடும்பம் முழுதும் சிங்கப்பூர்லதான்... ஒரு பிசினஸ் விஷயமா மெட்ராஸ் வந்தேன். எனக்கு டீச்சரா யிருந்த உங்க ஃபாதரைப் பார்த்துப் பேசணும்னு ரொம்ப நாளா எம் மனசுல ஒரு எண்ணம். இன்னிக்குத்தான் அது நிறை வேறியிருக்கு!''

''உங்களுக்கு விஷயம் தெரிய நியாயமில்லே. அப்பா காலமாகி இந்தத் தேதிக்கு வருஷம் ஒண்ணாகப் போகிறது. போன வருஷம் இதே நாள்லதான் ஹார்ட் அட்டாக்கில் போனார்.''

சுந்தரமூர்த்தி செம்மையாய் அதிர்ந்து, முகம் மாறி எழுந்தான்.

''ஸாரி... நான் இதை எதிர்பார்க்கலே!''

''ஸோ வாட்... உட்காருங்க... அம்மா மார்க்கெட்டுக்குப் போயிருக்காங்க. இப்ப வந்துடுவாங்க.''

''நோ... உங்க மதரை அந்தக் கோலத்துல பார்க்க நான் விரும்பலே. பை த பை தெய்வசிகாமணி ஸாரோட போட்டோ ஏதாவது உள்ளே இருக்கா?''

''உம்... உள்ளே சுவரில் பெரிசா பிரேம் போட்டு மாட்டியிருக்கோம்.''

சுந்தரமூர்த்தி தான் கையோடு கொண்டு வந்திருந்த இரண்டு அட்டைப் பெட்டிகளையும் டீப்பாயின் மீது வைத்தபடியே லோகுவிடம் கேட்டான்.

''நீங்க எனக்குப் பர்மிஷன் தரணும்!''

''எதுக்கு?''

''தெய்வசிகாமணி ஸாருக்கு 'சுருட்டுப் புகைக்கிறது' ஒரு விருப்பமான விஷயம். அதனால்தான் சிங்கப்பூர்லயிருந்து இந்த ஸ்பெஷல் சுருட்டுப் பாக்கெட்டும் லைட்டரும் வாங்கிட்டு வந்தேன்.''

அட்டைப் பெட்டியைப் பிரித்தான் சுந்தரமூர்த்தி. சில்வர் நிறக் காகிதத் தாள்களுக்கு மத்தியில்—

கட்டுக் கட்டாய் சிங்கப்பூர் முத்திரை தாங்கிய சுருட்டுக்கள் தெரிந்தன.

லோகு வியப்பில் உறைந்துபோய் உட்கார்ந்திருக்க—

இன்னொரு அட்டைப் பெட்டியையும் பிரித்தான் சுந்தரமூர்த்தி. ஏகப்பட்ட வேலைப்பாடுகளோடு — பொன்னிறத்தில் உல்லன் சால்வை ஒன்று மினுமினுத்தது.

''இந்த இரண்டையும் அவருக்குக் குடுத்து அவர் சந்தோஷப்படறதைப் பார்க்கலாம்னு வந்தேன். அந்தக் கொடுப்பினை எனக்கு இல்லாமப் போயிருச்சு மிஸ்டர் லோகு! இந்தச் சால்வையை அவரோட போட்டோவுக்குச் சாத்தி சுருட்டுப் பாக்கெட்டைப் போட்டோவுக்குக் கீழே வெச்சுட்டுப் போறதுக்கு நீங்க எனக்குப் பர்மிஷன் தரணும்....!''

தான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல்— லோகு ஏன் அப்படி வெறித்துப் பார்க்கிறான்?

சுந்தரமூர்த்திக்குப் புரியவில்லை!





கல்கி ஸ்தாபனத்துடன் நீண்ட கால தொடர்பு கொண்டவரும், சேலம் கல்கி – மங்கையர் மலர் பத்திரிகைகளின் விற்பனையாளருமான திரு V. சந்துரு அவர்களின் குமாரர் திருநிறைச்செல்வன் **பாலசுந்தரத்துக்கும்**, திருச்சி, பொன்மலை திரு S. குருசாமி அவர்கள் குமாரத்தி திருநிறைச்செல்வி **மாலாவுக்கும்** சமீபத்தில் சேலம் அம்மாப்பேட்டை ஸ்ரீ ராஜேஸ்வரி செங்குந்தர் கல்யாண மண்டபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. நகரப்பிரமுகர்கள் பலரும் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்.


**சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு**

# லலிதா பார்மஸி

ஸ்தாபிதம் : **1942**

தலைமை ஆபீஸ் :

**கும்பகோணம் - 612001**

(தமிழ்நாடு)

(போன் : **123**)

டிரக் லைசென்ஸ் நிர. 40/31-8-78

ஈட்டுத் தொகைக்கு மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

உங்களுக்குத் தேவையான

**ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்**

நாள்பட்ட சிக்கலான வியாதிகளில் ஆயுர்வேத சிகிச்சை முறைதான் நிரந்தர பலனை அளிக்க வல்லது என்பது யாவரும் அனுபவ பூர்வமாக அறிந்ததே. உங்கள் உபாதைகளுக்கு டாக்டர் **V.R.L. சர்மா** அவர்களிடம் நேரிலோ அல்லது 50 காசு தபால் தலையுடன் கடிதம் மூலமோ, கும்பகோணம் தலைமை ஆபீசுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம். கடிதங்களை தமிழில் அல்லது இங்கிலீஷில் Type செய்தோ அல்லது மிகத் தெளிவாகவோ எழுதக் கோருகிறோம். கடிதங்களிலும் முக்கியமாய் கார்டிலும் ரொம்பவும் நுணுக்கமாய் எழுத வேண்டாம் எனக் கூறுகிறோம். தெளிவில்லாமலும், பதிலுக்கு 50Np ஸ்டாம்ப் அனுப்பாமலும் வரும் கடிதங்களுக்கு பதில் எழுதப்பட மாட்டாது.

எங்களது எல்லா தயாரிப்புகளும் கீழ்க்கண்ட எமது பிராஞ்சுகளிலும் கிடைக்கும்.

1. லலிதா பார்மஸி, 52-A, மஹாதானத் தெரு, மாயூரம்-609 001 போன் : 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு வீதி, சிதம்பரம்-608 001
3. லலிதா பார்மஸி, 39, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017 போன் : 441454
4. லலிதா பார்மஸி, 105, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004 போன் : 73007

# நாம் படும் பாட்டுக்கு பாரதி பாட்டு

## கல்கி – பாரதி நூற்றாண்டு போட்டி-5.

சரியான விடை :



○ "மன்னும் இமயமலை எங்கள் மலையே.....
மாநில மீதது போல் பிறிதில்லையே...."




○ "நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி - கிளியே




○ "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்தசுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று"




○ "யாரும் வருந்தர் கரியபிராயத்த
னாயினுமே..."

---

திரு உமாபதி வரைந்த நாலு கார்டூன்களுக்கும் சரியான பாரதி வரிகளை எழுதியவர்கள் யாருமில்லை.


மூன்று கார்டூன்களுக்குச் சரியான விடைகளை எழுதியவர்கள் இருவர். ரூ. 150 பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

(1) பி. கே. பழனியப்பன்,
13, பஜனைக் கோவில் வீதி,
கோ./மலையாண்டிப் பட்டணம் 642114
பொள்ளாச்சி வட்டம்.

(2) திருமதி எஸ். செல்லம் ஸ்ரீநிவாசன்
5/2098, ஐயங்குளம் மேல்கரை,
தஞ்சாவூர்.



''நடிகை கலாஸ்ரீயிடம் போய் வேலை கேட்டா, 'புருஷன் வேலை தான் காலியா இருக்கு. வேணும்னா அப்ளை பண்ணிட்டுப் போ'ங்கறுடா!''



''வேலை தேடி அலைஞ்சுட்டு வர்ற பையனை ஏன் இப்படிக் கரிச்சுக் கொட்டுறீங்க?''

''நான் என்னடி சொன்னேன்? பேசாம வீட்டோட கிடந்து பகவத் கீதையை எடுத்துப்படி, புண்ணியமாவது கிடைக்கும்னு சொன்னேன்...''

# வேலையில்லாத் திண்டாட்டம்...!



''சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே பாங்க்லே கடன் தர்றாங்களாமே அப்ளை பண்றதுதானே?''

''கேட்டேன் ஸார், தர முடியாதுன்னு சொல்றாங்க...''

''என்ன தொழில் செய்யக் கேட்டே?''

''கள்ளச் சாராயம் காய்ச்சுறதுக்குத்தான்!''



''வேலைக்குச் சேர்ந்த ஒரே மாசத்திலே என் வீட்டுக்காரரை வேலையிலிருந்து நிறுத்திட்டாங்க.''

''எதுக்காம்?''

''ரிடையர் ஆற வயசு ஆயிடுச்சாம்!''



''சார், உங்களைப் பார்க்க உங்க ஒய்ஃப் வந்திருக்காங்க.''

''இங்கே வேலை காலி இல்லேன்னு சொல்லி அனுப்பப்பா!''




''சத்துணவு ஆசிரியை வேலைக்கு இன்டர்வியூ போனியாமே என்ன ஆச்சு?''

''சக்தியில்லேன்னு சொல்லி திருப்பி அனுப்பிட்டாங்க...''

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேலை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.

இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.

காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.




**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்



இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

<u>அதிக</u> வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN,40-2012 TH


பெண்கள் தங்கள்
மனோபாவங்களை
அநேக அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்.
விமல் அவற்றில் ஒன்று.
ஸில்க்கி ரோஸ்
VIMAL®
A RELIANCE PRODUCT
100% பாலியெஸ்டர் புடவைகள்
® is the registered trademark of Reliance Textile Industries Ltd.